www.tamilarangam.net

සරිනිකර්
SARINIHAR

# சரிநிகர்


சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி.

இதழ் 110
நவ. 21 - டிச.04, 1996 விலை 7.00

**யுத்த நியாயம்**

பெண்ணைப் பிடித்திழுத்து பெற்றவர்முன் ஆளாமல்
மண்ணைப் பிடித்துவிட்டு மார்தட்டி - விண்ணதிர
வீர முழக்கமிட்டு வெற்றிபெற்றோம் என்றுரைக்கப்
போரென்ன புண்ணாக்கோ புகல்!








# வன்னி



# சிறைமுகாம்கள்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரிநிகர்
இருவாரங்களுக்கொருமுறை
"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே" -பாரதி

ஆசிரியர்குழு
ச.பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி.செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

வடிவமைப்பு
ஏ.எம்.றஷ்மி

வெளியிடுபவர்
ச.பாலகிருஷ்ணன்
18/2, அலோசாலை,
கொழும்பு-03

அச்சுப்பதிவு
நவமக அச்சகம்,
334,காலிவீதி,
இரத்மலானை

ஆண்டுச் சந்தா விபரம்
இலங்கை - ரூபா 210/=
வெளிநாடு 30 U.S.$
(தபாற் செலவு உட்பட)

காசுக்கட்டளை/காசோலை யாவும்
MIRJE என்ற பெயருக்கே
எழுதப்படல் வேண்டும்.

எல்லாத் தொடர்புகட்கும்
ஆசிரியர்,
சரிநிகர்,
04 ஜெயரட்ன வழி,
திம்பிரிகஸ்யாய,
கொழும்பு -05
தொலைபேசி: 593615
தொலைமடல்: 594229

# ஹில்டன்:திறைசேரியில் இருந்து போன பணம்!

இன்றைய பொ.ஐ.மு. அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முன்பாக மக்கள் முன்வைத்த பல்வேறு வாக்குறுதிகள் இப்போது கைவிடப்பட்டு விட்டன. அரசியல் வாக்குறுதிகள் மட்டுமல்ல, சாதாரண நடைமுறை சார்ந்த வாக்குறுதிகளும் கூடத்தான். அதுவும் ஜனாதிபதி அவர்களாலேயே கூறப்பட்ட வாக்குறுதிகள் கூட காற்றில் பறக்கத் தொடங்கிவிட்டன.

இந்த காற்றிற் பறக்கும் வாக்குறுதிகளில் ஒன்றுதான் கொழும்பு ஹில்டன் ஹோட்டல் தொடர்பான விவகாரம் ஆகும். இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தபின் ஹில்டன் ஹோட்டேல் தொடர்பாக நடந்த பலத்த சர்ச்சைகள் அனைவரும் அறிந்ததே. இந்த ஹோட்டேலை நிர்மாணிப்பதற்கான அனுமதியைப் பெறுவதற்காக வரையப்பட்ட கட்டிட வரைபடத்தில் இருந்தது போன்ற அமைப்பில் ஹோட்டேல் கட்டப்படவில்லை, அதன் மூல வரைபடம் கூட காணாமல் போய்விட்டது என்பது முதல் பல மோசடியான விடயங்கள், ஏமாற்றுகள் நடைபெற்றிருப்ப தாக குற்றங்கள் சாட்டப்பட்டிருந்தன. இவை தொடர்பாக பூரண விசாரணை நடாத்தப்படும் என்று தெரிவித்த சந்திரிகா பண்டார நாயக்கா தெரிவித்திருந்ததுடன், அவர் பதவிக்கு வந்ததும் இந்த விவகாரம் தொடர்பாக விசாரிப்பதற்கு ஒரு விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவையும் நியமித்தி ருந்தார். அதுமட்டுமல்லாமல் ஹில்டன் ஹோட்டேல் நிறுவியமை தொடர்பான விடயங்களை முடிவுக்கு கொண்டுவருவதற் காக செய்யப்பட்ட ஒப்பந்தம், இவ் ஆணைக்குழு விசாரணைகள் முடியும் வரை நடைமுறைப்படுத்தப்படக் கூடாது என்று நிதியமைச்சர் என்ற முறையில் அறிவித்தும் இருந்தார். இலங்கை திறைசேரி செயலாளர், மிற்சூய், தாய்சேய் என்ற இரு ஜப்பானியக் கம்பனிகள், ஹோட்டேல் டெவலப்பர்ஸ் லிமிட்டட் என்ற ஹில்டன் ஹோட்டேலை சொந்தமாக கொண்ட கம்பனிக்கும் அன்றைய நிதியமைச்சின் ஆலோசகர் நிஹால் சிறி அமர சேகரவுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த நான்கு உடன்படிக்கைகளின் அடிப்படையில் ஹில்டன் ஹோட்டேல் விவகாரம் தீர்க்கப்பட முயற்சிக்கப்பட்டது.

இந்த உடன்படிக்கை அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத பல விடயங்களை செய்யும் படியான நிலைக்கு தள்ளும் விதத்தில் அமைந்திருந்தது என்று பிரதி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அவர்கள் பாராளுமன்றத்திலும் கூட தெரிவித்திருந் தார். இந்த ஒப்பந்தத்தில் நிஹால் அமரசேகர அவர்களுக்கு எதிராக இலங்கை வங்கியாலும், தொழில் ஆணையாளராலும் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள், மற்றும் அவர் தொடர்பான விடயங்களில் அவரைப் பாதுகாப்பதற்காக இலங்கை அரசாங்கம் அவருக்கு உதவி செய்யும் என்பது போன்ற விதிகளும் சேர்க்கப்பட்டிருந்தன.

இவற்றைக் 'கண்டு பிடித்த" ஜி.எல்.பீரிஸ் அவர்கள் இதை நிதி அமைச்சரான ஜனாதிபதிக்கு அறித்த போதே, ஜனாதிபதி கமிஷன் விசாரணை முடியும் வரை இந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படக் கூடாது என்று அறிவித்திருந்தார்.

இந்த விவகாரத்தில் தான் திறைசேரிச் செயலாளர் ஏ.எஸ்.ஜயவர்த்தனவுக்கும், ஜீ.எல்.பீரிசுக்கும் இடையில் விரிசல் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்திற்கு உடந்தை யாக இருந்ததாகக் கூறப்படும் ஏ.எஸ். ஜயவர்த்தனவுக்குக் கிடைத்த தண்டனை அவர் பதவி உயர்த்தப்பட்டு மத்திய வங்கி ஆளுனராக நியமிக்கப்பட்டது தான்!

எப்படியோ, இன்னமும் கமிஷன் முடிவுகள் எதுவும் அறிவிக்கப்பட முன்பதாகவே, நிதியமைச்சரின் அறிவுறுத்தலுக்கிணங்க இந்த உடன்படிக்கை அமுல் படுத்தப்படுவ தாகக் கூறப்படுகிறது. இதன் படி இரு ஜப்பானிய கம்பனிகளுக்கும் எதிராக நிஹால் அமரசேகர தொடுத்திருந்த வழக்குகள் வாபஸ் வாங்கப்பட்டன. இந்த வழக்குகளில் அவர் இக் கம்பனிகள் மோசடியில் ஈடுபட்டிருந்ததாகக் குற்றம் சாட்டியிருந்தார். பதிலாக, ஒப்பந்தப்படி அமரசேகர தன் வழக்குகள் வாபஸ் பெறப்படுவதற்கேற்ற ஒழுங்குகளை அரசாங்கம் மேற்கொண்டது. அத்துடன் அமரசேகர அவர்களது வழக்குச் செலவுத் தொகையான ஏழு மில்லியன் ரூபாயையும் செலுத்தியது.

உண்மையில் அரசாங்கம் அமரசேகர அவர்களுக்கு எதிரான எல்லா வழக்குக ளையும் விடுவித்து, அமரசேகர ஜப்பானிய கம்பனிகட்கு எதிராகத் தொடுத்திருந்த வழக்குகளை நீக்கச் செய்ததன் மூலம் ஏற்கனவே பாராளுமன்றத்திலும் வெளியிலும் பெரிதாகக் கூச்சல் போட்ட இந்த விவகாரத் தைத் தானே சமாளித்து விட்டுள்ளது. அதுவும் நாட்டுக்கும், மக்களுக்கும் பெரும் மோசடியைச் செய்ததாகச் சொல்லப்பட்ட இந்த விவகார விசாரணைகள் ஆணைக்குழு வால் விசாரிக்கப்பட்டு முடியமுன்பே ஜப்பானிய கம்பனிகட்கு ரூபா முப்பது மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கொடுப்பதற்குத் திறைசேரிக்கு உத்தரவிடப் பட்டுள்ளது. இந்த உத்தரவை இட்டவர் நிதி அமைச்சரான ஜனாதிபதி அவர்களே என்று கூறப்படுகிறது. அது மட்டுமல்லாமல் எழுபது மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பணச்சீட்டையும் (PROMISSORY NOTE) வழங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

அரசாங்கம் இவ்வளவு சீக்கிரமாக இந்த நடவடிக்கைகளை எடுப்பதற்குக் காரணம் என்ன என்பது இப்போது பலராலும் எழுப்பப்படுகின்ற ஒரு கேள்வி ஆகும்.

எவ்வாறாயினும், ஏற்கனவே நீதி மன்றத்தினால் வழங்கப்பட்ட உத்தரவு ஒன்றின் படி, திறைசேரி ஹோட்டேல் டெவலப்பேர்ஸ் லிமிட்டெட்டுக்கும் மிற்சூய், தாய்சாய் நிறுவனங்களுக்கும இடையிலான எந்த உடன் படிக்கை தொடர்பான பணக் கொடுக்கல் வாங்கல்களையும் அனுமதிக் கக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே நிதியமைச்சரின் (ஜனாதிபதியின்) இந்த நடவடிக்கை நீதிமன்றத்தை மீறுகின்ற ஒரு நடவடிக்கை யாகும் என்றும் 'கோர்ணல் அன் கோ" நிறுவனத்தினைச் சேர்ந்த சட்டத்தரணிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இப்போது ஹில்டன் ஹோட்டேல் விவகாரம் மக்களது நலன்களுக்குரிய விவகாரம் அல்ல, அந்த விவகாரத்தில் மோசடிகள் நடந்திருந்தால் அதை மக்கள் அறியவேண் டியது இல்லை, இவ்விவகாரத்தைச் சமாளிக்க, திறைசேரியில் இருந்து மக்களது பணம் எவ்வளவானாலும் சரி அதை அரசாங்கம் திறைசேரி செலவு செய்யலாம் அதிலும் மக்கள் அக்கறை காட்ட வேண்டிது கிடையாது...... அப்போது நாம் இது பற்றிக் கத்தியது எல்லாம் வெறும் அரசியல் பகட்டுக்காகத்தான்......

இதுதானா ஊழல் மோசடிகளை இல்லாமல் செய்வதாகக் கூறி வந்த சந்திரிக்கா அம்மையாரின் மக்களுக்கான பதில்?

## ஓரம்போ!

நவம்பர் 12 இலிருந்து 18 வரை கொழும்பு பொது நூலக மண்டபத்தில் இலங்கை-இந்திய புத்தகக் கண்காட்சி ஒன்று நடைபெற்றது. இக்கண்காட்சியில் இந்தியாவிலிருந்து 8 பதிப்பகங்கள் கலந்து கொண்டிருந்தன. "நியு செஞ்சுரி புக் ஹவுஸ்"ஐச் சேர்ந்த எம்.சுப்பிரமணியம் சரிநிகருடன் உரையாடுகையில் "தமிழ் புத்தகங்களை தருவிப்பதற்கு இரண்டு நிறுவனங்களை மாத்திரம் தான் அனுமதித்திருந்தனர். அதிலும் நாங்கள் தான் முழுக்க தமிழ்ப் புத்தகங்களையே கொண்டு வந்திருந்தோம். எங்களை ஒரு மூலையில் அதுவும் கண்டு பிடித்து தேட வேண்டிய இடத்துக்கு கொண்டு வந்து ஒதுக்கியுள்ளனர். நாங்கள் எவ்வளவோ எடுத்துக் கூறியும் சரி வரவில்லை." என்றார்.

இலங்கை அரசாங்க நிறுவனங்களின் நூல்களும் கண்காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தன. குறிப்பாக தேசிய நூலக சபை, தேசிய சுவடிகள் திணைக்களம், அரசாங்க அச்சகம், கலாசார அமைச்சு போன்றன அவற்றிற் சில. ஒவ்வொரு நிறுவனங்களிலும் நூற்றுக்கணக்கான நூல்கள் வைக்கப் பட்டிருந்த போதும் தமிழ் நூல்களாக எவற்றையும் காண முடியவில்லை. அரசாங்க நிறுவனங்கள் பலவற்றில் பெருமளவான சிங்கள நூல்கள் வெளியிடப்பட்டு வருகின்ற போதும் தமிழ் நூல்கள் வெளியிடப்படுவது புறக்கணிக்கப்படுவது தெரிகிறது. விதிவிலக்காக அரசின் பிரச்சாரத்திற்காக வெளியிடப்பட்ட வல்லிபுரம் தங்கத்தகடு சாசனம் பற்றிய புத்தகத்தைத் தவிர சோ.ராமேஸ்வரனின் புத்தகமொன்று மட்டுமே வெளியிடப்பட்டிருந்தது. முஸ்லிம களால் எழுதப்பட்ட புத்தகமோ அல்லது முஸ்லிம்கள் பற்றி எழுதப்பட்ட புத்தகமோ அல்லது தமிழர்களால் எழுதப்பட்ட புத்தகமோ எவையும் அங்கிருக்கவில்லை. ஆக, இலங்கை பல்லின நாடென்பதை நாமெப்படி நம்புவது?

## தற்கொலைக்குத் தடை!

தற்கொலை பற்றிய செய்திக்ள் மற்றும் கட்டுரைகள் எதனையும் பிரசுரிக்க வேண்டாம் என ஜனாதிபதி சந்திரிகாவினால் லேக்ஹவுஸ் நிறுவனத்துக்கு தெரிவிக்கப் பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து லேக் ஹவுஸ் நிறுவனத்தின் பணிப்பாளர், அதன் பத்திரிகைகளின் சகல ஆசிரியர் குழு க்களுக்கும் அதனை உத்தரவாக பிறப்பித் துள்ளார்.

லேக் ஹவுஸ் நிறுவனத்தினால் 'தினகரன்', 'டெயிலி நியுஸ்', தினமின', 'ஜனதா', 'ஒப்சேவர்', 'சிலுமின' உட்பட பல பத்திரிகைகள் வெளியடப்பட்டு வருவது அறிந்ததே. இப்பத்திரிகைகள் அரசின் கட்டுப்பாட்டிலேயே பல காலமாக இருந்து வருகின்றன என்பதும் தெரிந்ததே.

ஒப்பீட்டளவில் இலங்கையிலேயே தற்கொலை வீதாசாரம் அதிகமாக இருப்பதாக உலக அளவில் பேசப்படுவதன் காரணமாக ஆகக் குறைந்தது தமது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் தொடர்பு சாதனங்களுக்கு ஊடாகவாவது அது தொடர்பான செய்திகளை வராமல் செய்தால் ஆதாரங்களை குறைக்கலாம் அல்லவா. அந்த யோசனைதானோ என்னவோ. ஏற்கெனவே "புலித் தற்கொலைப் பிரிவினரின் செயல்" என்கின்ற பேரில் பல பொய்யான செய்திகள் ("அஷ்ரப்-பௌஸியைக் கொல்ல தற்கொலை படையினர் முயற்சி முறியடிப்பு. இரு தற்கொலையாளிகளும் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்" என பிரச்சாரப்படுத்தப்பட்ட செய்தி அறிந்ததே. பின்னர் அது பொய்யென்றும் அவ்விரு இளைஞர்களும் அப்பாவி மாணவர்கள் என்பதும் பின்னர் அம்பலமானது தெரிந்ததே) வெளியிடப்பட்டது இந்த அரச கட்டுப்பாட்டு லேக்ஹவுஸ் பத்திரிகைகளில் தான்.

தற்போது 'தற்கொலை' செய்திகளுக்கும் கட்டுரைகளுக்கும் விதிக்கப்பட்டுள்ள தடை மேற்படி வகையிலான தற்கொலை செய்திகளுக்கும் சேர்த்து தானா என்பதை ஜனாதிபதி சொல்லத்தவறி விட்டார்.

எப்படியோ, முன்னாள் ஐ.தே.க அமைச்சர் விஜேபால மெண்டிஸின் மகன் இரத்த அழுத்த மாத்திரைகளை அதிகமாக உட்கொண்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவத்தைப் பற்றிய செய்தியை எல்லாப் பத்திரிகைகளும் தற்கொலை என்று எழுத லேக் ஹவுஸ் பத்திரிகைகள் மட்டும் 'இறந்து கிடக்க காணப்பட்டார்' என்று எழுதியுள்ளன. போகிற போக்கைப் பார்த்தால் புலிகளின் 'தற்கொலைக் கொலையாளிகளும்' வெறும் 'கொலையாளிகள்' என்று மட்டுமே எழுதப் படப்போகின்றார்கள் என்று தெரியவருகிறது. நாட்டின் தற்கொலைகளை தவிர்க்கும் முயற்சியில் ஒரு பொறுப்பான நடவடிக் கையில் இறங்கியுள்ளார்.ஜனாதிபதி. இதை பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால் துரதிர்ஷ்டம் என்னவென்றால், தற்கொலை கள் எல்லாம் 'கொலைகளாகவும்", "அகால மரணங்களாகவும்" மாறினால் இந்த நாட்டில் ஏற்கெனவே யுத்தத்தால் ஏற்படும் கொலை களுடன் சேர்ந்து 'கொலைகள் அதிகரித்து விடப் போகின்றன என்பதுதான்.

## ஈழம் படுகுழியானது!

'ஈழம் படுகுழியானது" (ஈழம் அபாதய்) எனும் தலைப்பில் பொரல்லை பௌத்த மகா சம்மேளன மண்டபத்தில் கடந்த நவம்பர் 15,16,17 ஆகிய தினங்களில் புகைப்பட, ஓவியக் கண்காட்சியொன்று நடைபெற்றது. இக்கண்காட்சியை ஜாதிக்க சிந்தனய, உள்ளிட்ட இன்னும் சில சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் ஒன்று சேர்ந்து நடத்தியிருந்தனர். "புலிகளால் கொல்லப் பட்ட" என்ற பேரில் பல கோரமான புகைப் படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. ஓவியங்களும் அவ்வாறே. மூன்று நாட்களும் ஏகப்பட்ட மக்கள் கூட்டம் கண்காட்சியை கண்டு சென்றது.

நளின் த சில்வா, குணதாச அமரசேகர போன்றவர்களின் பேரினவாதத்தை நியாயப் படுத்தும் பல நூல்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. மூன்றாவது ஈழ யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தென்னிலங் கையில் இவ்வகையான பேரினவாதம் ஸ்தாபனமயப்பட்டு செயற்பட்டு வருவதையும் அதற்கான வாய்ப்புக்கள் கூட அதிகரித்த வண்ணமிருப்பதையுமே இந் நடவடிக்கைகள் காட்டுகின்றன.

## விசாரணை அன்றேல் விடுதலை!

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான ஒரு அமைப்பு "விசாரணை செய் அன்றேல் விடுதலை செய்!" எனும் பெயரில் கொழும்பில் உருவாக்கப் பட்டுள்ளது.

தென்னிலங்கையில் பல பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், இடதுசாரி அமைப்புக்கள் போன்ற பல தரப்பினர் ஒன்று சேர்ந்து உருவாக்கியுள்ள இவ்வமைப்பில் பெருமளவில் இளம் சிங்கள முற்போக்கு சக்திகளே செயற்பட்டு வருகின்றனர். நாட்டின் நிலை காரணமாக தமிழ் இளைஞர்கள் பலர் இதில் நேரடியாக செயற்பட முடியாத நிலையில் அவ்வாறான இளைஞர்களின் ஆதரவுடன் மேற்படி சிங்கள முற்போக்கு சக்திகள் சிறைக்கு வெளியில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதகைக் காக இயங்கவிருக்கின்றன. இன்னும் ஓரிரு வாரங்களில் அமைப்பை பகிரங்கப்படுத்தி தமது வேலைத்திட்டங்களை முன்னெடுக்க தயாராகியுள்ளனர். கூடியவரை தமிழ் இளைஞர்கள் மீதான இவ் அடக்குமுறைகளை உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பகிரங்கப்படுத்துவதும் இவ் அடக்குமுறை களுக்கு எதிராக மக்களை இயலுமானவரை அணிதிரட்டுவதுமே இதன் முதன்மை வேலைத்திட்டம் என அறியக்கிடைத்து ள்ளது. "இவை வெறும் மனித உரிமை பிரச்சினை மாத்திரமல்ல, தீவிரமாக முன்னெடுக்கப்பட வேண்டிய அரசியல் பிரச்சினையுமாகும். இந்த சிங்கள அரச இராணுவம் இன்று தமிழ் மக்களுக்கு எதிராக தொடுத்து வரும் இவ்வடக்குமுறை மீண்டும் சிங்கள மக்களுக்கு எதிராக தொடுக்கப் படுவதற்கு நீண்ட காலம் எடுக்காது. இந்த நிகழ்ச்சிகள் தொடர் நிகழ்வுகளாக இருப்பதால் இதற்கெதிரான போராட்டங் களும் தொடர்ந்து நடத்த வேண்டியதன் அவசியம் பெருகியுள்ளது. இதற்கு வடக்கு-தெற்கு போராட்ட சக்திகள் இணைந்து தொழிற்பட வேண்டியது முக்கியம்" என இவ்வமைப்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தெரிவிக்கிறார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு எவ்வித விசாரணையுமின்றி விடுதலையுமின்றி பல மாதங்களாக எவ்வித நியாயமுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்கள் சிறைக்குள் தமது போராட்டத்தை நடத்தும் போது அதற்கு ஆதரவாக சிறைக்கு வெளியில் பிரச்சாரம் செய்யக்கூடிய, ஆதரவளிக்கக்கூடிய, விடுதலையை வலியுறுத்தக்கூடிய எந்த சக்தியுமே இல்லாத நிலையில் இவ்வமைப்பின் தோற்றம் அரசியல் கைதிகளுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய ஒரு விடயமாகும்.

ஏற்கெனவே மேற்படி இவ்வமைப்பின் கீழ் அணிதிரண்டுள்ள ஒரு சில அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து 'மனித உரிமைகளுக்கான நடவடிக்கைக் குழு் என்கின்ற ஒரு அமைப்பையும் உருவாக்கி 'திவுலபிட்டிய படுகொலை சம்பவத்துக்கு எதிராக செயற்பட்டு வந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. அவர்களின் அச்செயற்பாடு காரணமாக ஓரளவு சாத்தியமான தீர்வும் ஏற்பட்டிருந்தது. அச்சம்பவத்தைக் கண்டித்து அவர்கள் வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தில் வடக்கில் நடத்தப்படும் கொடுமைகளும் குறிப்பிடப்பட்டிருந்தது. "அன்று தெற்கில் மக்கள் அழிப்பையும் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுகளையும் புரிந்த அரச கொலைகார இராணுவம் இன்று வடக்கில் தமிழ் மக்களை அழித்துக் கொண்டு பெண்களை பாலியல் வல்லுறவும் புரிகின்றது. அவற்றை 'நாட்டுக்காக' 'இனத்துக்காக' என கூறி உங்களால் அனுமதித்து விட முடியுமா?" என அப்பிரசுரத்தில் சிங்கள மக்களை நோக்கி கேட்கப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

கிருஷாந்தியின் சம்பவத்துக்கு எதிராக கொழும்பில் செயற்பட்டுவரும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கும் இவ்வமை ப்பினர் அவர்கள் இதனை வெறும் மனித உரிமை பிரச்சினையாக மட்டுமே பார்ப்பதாகவும் இது வெறும் சம்பவமல்ல தமிழ் மக்களின் பிரச்சினை என்றும் இதனை அரசியல் ரீதியாகவே முன்னெடுக்க வேண்டு மென்றும் இந்த சம்பவத்தோடு மொத்தப் பிரச்சினையையும் சுருக்கி விடக்கூடாது என்றும் குறிப்பிட்ட இவ்வமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் இந்த அமைப்புக் களுடன் சேர்ந்து கிருஷாந்தியை மீண்டு மொரு பாலியல் வல்லுறவுக்குள்ளாக்க தாம் தாயாரில்லை என்றும் தெரிவித்தார்.

எப்படியோ அரச சார்பற்ற நிறுவனங்களில் தங்கியிராமல் மக்களை அரசியல் ரீதியில் அணிதிரட்டி செயற்பட விளைந்திருக்கும் "விசாரணை செய் அன்றேல் விடுதலை செய்!" அமைப்பினரின் வளர்ச்சி ஆரோக்கியமான தாக்கங்கள ஏற்படுத்தும் என்றும் எதிர்பார்க் கப்படுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வன்னிச் சிறை: வாடி இருக்கும் மக்கள்!

கட்டுரை + படங்கள் : தம்பித்துரை ஜெயக்கரசு

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள வவுனியா நகரப்பகுதியில் நலன்புரி நிலையங்களில் சிறைப்பட்டிருக்கின்ற தமிழ் மக்களுக்கு சுதந்திரமாக நடமாடக் கூடிய சந்தர்ப்பத்தை அரசு எப்போது வழங்கப்போகிறது என்ற வினா இப்போது நாளுக்கு நாள் விஸ்வரூபமெடுத்து வருகிறது.

### முகாமல்ல சிறை:

முன்னேறிப்பாய்ந்த இராணுவத்தின் நடவடிக்கைகளினாலும் 'சூரியக்கதிர்' தாக்குதல்களினாலும் சொல்லொணாத துன்பங்களுக்கு ஆளாகி யாழ் குடா நாட்டில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களையும் அவர்களுக்கு அடைக்கலமளித்த கிளிநொச்சி மாவட்ட மக்களையும் சத்ஜய இராணுவ நடவடிக்கைகள் மேலும் மோசமாகப் பதம்பார்த்ததன் விளைவாக 'இடம் பெயர்ந்தவர்கள்' என்ற பெயருடன் வன்னிப் பகுதியிலிருந்து வருபவர்கள் அனைவரும் வவுனியா முகாம்களில் சுமார் ஒருமாத காலமாக சிறைப்பட்டுக் கிடக்கின்றார்கள்.

அரச ஊழியர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள், நோயாளிகள், அவசர பயணம் மேற்கொள்கின்ற பயணிகள், வேலைத் தலங்களை நோக்கியும், வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை நாடியும் பயணம் மேற்கொண்டுள்ள வெளிநாட்டுப் பிரயாணிகளும் வயதுக்கட்டுப்பாட்டு நியதிக்கு உட்பட்டு திணறுகின்ற இளைஞர் யுவதிகளும் இந்த சிறைவாசத் துயரங்களுக்கு ஆளாகியுள்ளார்கள்.

### கடைப்பிடிக்கப்படாத விதிகள்:

அரச ஊழியர்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, கண்டி, கொழும்பு போன்ற தென்பகுதிகளைச் சேர்ந்த நிரந்தர குடியிருப்பாளர்கள், மேற்சிகிச்சைக்காக கொழும்பு செல்லும் நோயாளிகள், தொழில் வாய்ப்பு மேற்படிப்பு என்பவற்றுக்காக செல்பவர்கள் என வகைப்படுத்தப்பட்டோர் இந்த முகாம்களில் இருக்கத் தேவையில்லை. அவர்களது ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு பயணத்தைத் தொடர அனுமதிக்கப்படுவார்கள்.

- 6 தொடக்கம் 9 மாதம் வரையிலான கர்ப்பிணித்தாய்மார்களும் முகாம்களில் இருக்கத் தேவையில்லை. உறவினர்களிடம் சென்று தங்கியிருக்கலாம்.
- யாழ் செல்பவர்களுக்கு உடனடியாகப் பயண வசதிகள் செய்து தரப்படும் என்றெல்லாம் அதிகாரிகள் மட்டத்தில் இடம்பெற்ற கூட்டங்களில் தீர்மானிக்கப்பட்டு விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

ஆயினும் இந்த விதிமுறைகள் நடைமுறையில் மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை.

கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் இருந்து அவசரமான அரச காரியங்களுக்காக வருகின்ற (அரச அதிபர்கள் மேலதிக அரச அதிபர்கள், திட்டப்பணிப்பாளர்கள் தவிர்ந்த ஏனைய) அதிகாரிகளும் அரச ஊழியர்களும் முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு இரண்டு அல்லது மூன்று தினங்கள் தங்கவைக்கப்பட்ட பின்பே ''விடுதலை'' செய்யப்படுகிறார்கள்.

### அனுமதி யாருக்கும் இல்லை:

கிழக்கு மலையகப் பகுதிகளைச் சேர்ந்தவர்களும் கொழும்பு பகுதிகளைச் சேர்ந்தவர்களும் தமது ஆவணப்பதிவுகளைக் காட்டி தமது பிரயாணத்துக்குரிய அனுமதியைப் பெறுவதற்காக வவுனியா புகையிரத நிலையத்துக்கு அருகில் குட்செட் வீதியில் உள்ள இடைத்தங்கல் முகாமிற்கு ஏனைய முகாம்களில் இருந்து வந்து சேர்வதற்கு குறைந்தது ஒரு வார காலம் அல்லது பத்து தினங்கள் எடுக்கின்றன. அவ்வாறு வந்து சேர்ந்த பின்னர் பிரயாண பாஸ் பெறுவதற்காக குட்செட் வீதி முகாம் பொறுப்பதிகாரியின் விசாரணைக்காகச் செல்வதென்பது ஒரு பகீரத முயற்சியாகவே உள்ளது.

### வழிவிடாத நந்திகள்:

விண்ணப்பங்களில் விபரங்களைப் பதிவு செய்து 'நம்பர்' பெற்று முகாம் பொறுப்பதிகாரியின் அலுவலக வாசலில் காலை முதல் மாலை வரை காவலிருக்க வேண்டும். நீ முந்தி நான் முந்தி என இடிபடுவதோடு முகாம் பொறுப்பதிகாரியின் செல்வாக்குப் பெற்றவர்களுக்கு வழிவிட்டு மனம் கசந்து விரக்தியின் எல்லையைத் தொடும்போது அதிகாரியின் தரிசனம் கிடைக்கும்.



இன்னொரு முகாம்:வைத்தியசாலை

எனினும் ஆவணங்கள் ஆறுதலாகப் பரிசீலனை செய்யப்பட்டு அது இல்லை இது இல்லை என்றோ அல்லது குறிப்பிட்ட ஆவணத்தின் விபரம் போதாது, கையெழுத்து இல்லை என்றோ காரணம் காட்டி அனுமதி மறுக்கப்படுவதே சாதாரணமாக நிகழ்கின்றது.

கடந்த ஒரு மாத காலமாக கொழும்பு உட்பட நாட்டின் தென்பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய சுமார் 700 பேர் இந்த குட்செட் வீதி முகாமில் வீண் பொழுது போக்கிய வண்ணம் எரிச்சலோடு காத்துக்கிடக்கிறார்கள்.

### நாயுமாய் பேயுமானார்:

அது மட்டுமல்ல இந்த முகாமின் சுற்றுச் சூழலைக்கூட்டிச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள 50 வயது மதிக்கத்தக்க அப்பாவித் தொழிலாளி ஒருவர் தனது சொந்த ஊராகிய திருகோணமலைக்குச் சென்று வருவதற்குரிய பிரயாண பாஸ் பெறுவதற்காக நாய் அலைச்சல் பேய் அலைச்சல் அலைந்து கொண்டிருக்கிறார்.

இவர் கடந்த ஒரு வருடகாலமாக இங்கு பணியாற்றுகின்றார். பிரயாண பாஸ் வழங்கலாம் எனக் கச்சேரி அதிகாரிகள் வழங்கியுள்ள சிபாரிசு ஆவணங்கள் இன்னும் அந்த முகாம் பொறுப்பதிகாரிக்குத் திருப்திகரமான ஆவணமாகத் தெரியவில்லையாம்.

### இவருக்கும் இது தான் கதி:

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து வவுனியா நகரசபைக்கு இடம்மாற்றம் பெற்று வந்துள்ள பொது சுகாதாரப் பரிசோதகர் (PHI) அனுபவிக்கும் வேதனை இன்னுமொரு வகையாக உள்ளது.

வவுனியா நகரசபைக்கு அவசரமாக ஒரு பொதுச் சுகாதார பரிசோதகர் தேவைப்படுவதாகவும் நகரச் சூழலில் இடம் பெயர்ந்தவர்கள் தங்கியுள்ள முகாம்களில் சனப்பெருக்கம் காரணமாக இந்தத் தேவை ஏற்பட்டுள்ளதாகவும் வவுனியா நகரசபை விடுத்த வேண்டுகோளை அடுத்து வடகிழக்கு மாகாண சபை கிளிநொச்சியில் பணிபுரிந்த ஓர் அதிகாரியை வவுனியாவுக்கு இடமாற்றம் செய்தது.

50வயதுக்கு மேற்பட்ட அவர் 45 வயது உடைய மனைவியோடும் மூன்று பிள்ளைகளோடும் குடும்பமாக புறப்பட்டு வந்தார். இருகரம் நீட்டி அவரை வாஞ்சையோடு நொச்சிமோட்டையில் வரவேற்ற படையினர் பஸ் பண்டியில் ஏனையோருடன் ஏற்றி ஈரப்பெரிய குளம் பரக்கும் சிங்கள மகாவித்தியாலயத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

தான் ஓர் அரசஊழியர் எனக் கூறி சான்றுகளைக் காட்டியும் அவர் வெளியே வர முடியவில்லை. நகரசபைக்கு தகவல் பறந்தது. நகரசபை அதிகாரிகள் முயற்சிகளை மேற்கொண்டார்கள். ஒரு வாரம் கழிந்தபின் - அதுவும் அரச அதிபரின் சிபாரிசுக் கடிதத்தோடு விடுதலை கிடைத்தது - அவருக்கு மட்டும் தான்.

அவரது மனைவியும் பிள்ளைகளும் இன்னும் ஈரப்பெரிய குளம் பாடசாலை முகாமில் அடைபட்டுக் கிடக்கிறார்கள், பொது சுகாதாரப் பரிசோதகர் பதவிப் பொறுப்பை ஏற்றுள்ள அந்த அரச ஊழியர் வேலையில் மனம் லயிக்க முடியாமலும் மனைவி பிள்ளைகளை முகாமிலிருந்து வெளியில் எடுக்கமுடியாலும் தவிப்போடு அலைந்து கொண்டிருக்கிறார். அவரது துயரத்திற்கும் தவிப்போடு கூடிய அலைச்சலுக்கும் எப்போது முடிவு கிடைக்கும் என்பது யாருக்கும் தெரியாது.

### இறந்து பிறந்த குழந்தை:

ஆறு மாத கர்ப்பிணிகள் உறவினர்களிடம் சென்று தங்கியிருக்கலாம் என்று அதிகாரிகள் மட்டத்தில் உடன்பட்டிருந்தாலும் 9 மாத கர்ப்பிணிகள் பிரசவ வேதனை வரும் வரையும் முகாம்களிலிருந்து துயரப்பட்டதையே நிதர்சனமாகக் காணமுடிகிறது.

ஈரப்பெரிய குளம் பாடசாலை முகாமுக்கு வந்து சேர்ந்த கர்ப்பிணிப்பெண் பிரசவ வேதனையால் அவஸ்தைப்பட்டு குழந்தையைப் பெற்றெடுத்த பின்தான் ஆஸ்பத்திரிக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

சைவப்பிரகாச வித்தியாசாலை முகாமில் இருந்த கர்ப்பிணித்தாய் கடும் வேதனையை அனுபவித்த போதுதான் வைத்தியசாலைக்குச் செல்வதற்கான பொலிசாரின் அனுமதி கிடைத்தது. வைத்தியசாலைக்குச் சென்றதும் ஏழுமாதத்தில் வயிற்றிலேயே இறந்துவிட்ட குழந்தையை அவர் வேதனையோடு பிரசவித்ததை வைத்தியசாலைப் பதிவேடுகள் பதிவு செய்துள்ளன.

### எண்பதிலும் தடை:

இதுதவிர இப்போதுள்ள 12 முகாம்களிலும் வயதுக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட அவசரத் தேவைக்குரிய ஆவணங்களை வைத்துள்ள இளைஞர், யுவதிகள் மட்டுமல்ல, நூறு பேர் வரையிலான ஐம்பத்தியைந்து வயதுக்கு மேற்பட்ட 80-81 வயதான குடுகுடு கிழவர் கிழவிகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

ஆஸ்மா, புற்றுநோய், இருதய நோய் கொண்ட நோயாளிகளும் அவஸ்தையோடு அடைபட்டுக்கிடக்கின்றார்கள்.

இது மட்டுமல்ல, 500 பேர் மட்டுமே தங்கியிருக்கக்கூடிய முகாம்களில் 1000-1100 வரையில் அடைந்து கிடக்கிறார்கள்.

### உடைமாற்றும் அவலம்:

சி.சி.ரி.எம்.எஸ். என்ற இலங்கைத் திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையில் நிலவும் இடநெருக்கடி காரணமாக ஒரு பெண் உடை மாற்றுவதற்காக மூவர் அல்லது நால்வர் சேலைகளை வளைவாக நின்று மறைப்பு ஏற்படுத்த வேண்டியுள்ளது.

### இடிந்து வீழ்ந்த மலகூடங்கள்:

இங்கு ஆண்களும் பெண்களும் ஒரே இடத்தில்தான் குளிக்க வேண்டும். கிணறு அமைந்துள்ள இடத்துக்கு அருகிலேயே தற்காலிக மலசலம் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. போதிய மலசல கூட வசதிகள் இல்லை என்பது மட்டுமல்ல. பொது சுகாதார விதிமுறைகள் குறித்தும் பொலிசாரும் அதிகாரிகளும் அக்கறை கொண்டதாகவோ கவனம் செலுத்தியதாகவோ தெரியவில்லை.

''இடம்பெயர்ந்து அகதிகள் வருகிறார்கள். அவர்கள் தங்கியிருக்க இட வசதிகள் செய்யவேண்டும்'' என்ற ஒரேயொரு இயந்திரமயமான எண்ணத்துடனேயே காரியங்கள் நடைபெறுகின்றன. அகதிகளையும் இடம் பெயர்ந்தவர்களையும் எதிர்பார்த்து நலன்புரிநிலையங்கள் முன்னேற்பாடாக ஒழுங்கு செய்யப்படவில்லை.


இடம் பெயர்ந்தவர்கள் வந்து சேர, வந்து சேர பாடசாலைகள் ஒவ்வொன்றாக மூடப்பட்டு தண்ணீர் வசதியும் மலசல கூடங்களும் ஏற்படுத்தப்படும் கைங்கரியமே இன்னும் தொடர்கின்றது.

அவசர அவசரமாகச் செய்த வேலைகள் காரணமாக முற்றுப்பெறும் முன்னரே மலசல கூடங்கள் இடிந்து வீழ்ந்ததையும், சில முகாம்களில் ஒரு மாதத்துக்கும் முன்னர் ஆரம்பித்த தற்காலிக மலசலகூடங்கள் இன்னும் முற்றுப் பெறாததையும் அறியமுடிகிறது.

### முகாமான பாடசாலைகள்:

எதிர்வரும் முதலாம் திகதி மூடப்பட்ட பாடசாலைகளைத் திறக்கவேண்டும் என்ற இலக்கோடு அசுரவேகத்தில் அசுர முயற்சியில் வவுனியாப் பாடசாலைகளில் சுமார் 30 (Semi permanent buildings) மண்டபங்கள் அமைக்கப்படுகின்றன. மழையும் பெய்யத்தொடங்கியுள்ளது. நீண்டகால நோக்கில் பாடசாலைகளுக்கு பயன் அளிக்கத்தக்கதாக (?) (பாடசாலைகளில் ''வருடத்துக்கு ஒரு முறை தானே விளையாட்டு போட்டி நடைபெறுகிறது என்ற அசட்டுத்தனமான எண்ணத்தோடு விளையாட்டு) மைதானங்களிலும் இந்த மண்டபங்கள் அமைக்கப்படுகின்றன.

இடம் பெயர்ந்தவர்களைப் பராமரிப்பது சரி, சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் அதிகாரிகளின் முறையான இணக்கப்பாடுகள் இல்லாமல் மாணவர்களின் கல்வி நலனை சரியாக கருதாமல் நடக்கும் இந்த முயற்சிகள் எவ்வாறான எதிர் விளைவுகளை ஏற்படுத்துமோ என்பது எவருக்கும் தெரியாது.



விடுதலை எப்போ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**சென்ற இதழின் தொடர்ச்சி.**

***அப்படியாயின் அரசியல் தீர்வே ஒரே வழி என்கிறீர்கள்?***

இங்கு மட்டுமல்ல உலகெங்கும் அது ஒன்றே வழி - பலஸ்தீனை, பிலிப்பைன்ஸை, பொஸ்னியாவை, செச்னியாவை, ஜோர்ஜியாவை, அயர்லாந்தை இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். சமாதானம், மீண்டும் சமாதானம், சிறுபான்மையினரைத் திருப்திப் படுத்தக்கூடிய இதய சுத்தியுடனான அதிகாரப்பரவலாக்கமே ஒரேவழி.

அரசியல் இலாப நஷ்டங்களுக்காக, தேர்தல் போட்டிகளுக்காக பேரினவாத சிங்களக் கட்சிகளின் நெருக்குதல்களுக்குள் அகப்பட்டுக் கொள்வதனால் தான் இந்நெருக்கடி தீரும் என்பதற்கில்லை.

ஐ.தே.கவும், ஸ்ரீ.சு.கவும் மாறி மாறி கடைப்பிடித்துவரும் கொள்கைகளையும் செயற்பாடுகளையும் அவர்களது அரசியல்வரலாற்றையும் பாருங்கள்.

இந்த நாடு ஒரு சிங்கப்பூராக அல்லது தென்கொரியாவாக இருந்திருக்கலாம்..... ஆனால், இன்று பொருளாதார ரீதியில் சோமாலியாவாக அல்லது எத்தியோப்பியாவாக மாறும் சாத்தியக்கூறுகள் தான் இக்கொடிய பிரச்சினையால் உருவாகிக்கொண்டு வருகிறது.

***''மூன்றாம் தரப்பு ஒன்றின் மூலம் பேச்சுக்குத் தயார் என்று பிரபாகரன் அறிவித்தால் அரசு பரிசீலிக்கும்'' என ஜனாதிபதி கூறியுள்ளார் என 21.09.1996 வெளியான வீரகேசரியின் தலைப்புச்செய்தி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?***

இந்தியாவில் இருந்து வெளியாகும் பிரபல ஆங்கிலச் சஞ்சிகையான FRONT-LINEக்கு அளித்திருக்கும் பேட்டி ஒன்றை மேற்கோள்காட்டி அச்செய்தி வெளியிடப் பட்டிருந்தது.

குறிப்பிட்ட நிபந்தனைகளை புலிகள் பூர்த்தி செய்யும் பட்சத்தில் மூன்றாம் தரப்பின் மூலம் பேச்சுக்களை அதுவும் ஆயதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்ற நிபந்தனை இல்லாமலே பேசலாம் எனக்கூறியிருப்பது வரவேற்கத்தக்கது!

ஆனால் அந்தக் குறிப்பிட்ட நிபந்தனைகள் எவை என்பது பற்றிச் சொல்லப் படவில்லை. இந்த நிபந்தனைகள் தான் இழுபறிகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன.

அடுத்தபடியாக அந்த மூன்றாம் தரப்பு யாராக இருக்க முடியும்? இருவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தரப்பாகவும் இருக்க வேண்டும். அது ஒரு வெளிநாட்டு மத்தியஸ்தம் ஆயின், இந்தியா சில அழுத்தங்களைக் கொண்டு வரமுயலுமல்லவா? ஆரம்ப காலம் முதலே இந்தியா இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறது. இருதரப்பினரும் ஏற்றுக்கொண்டால், இந்தியாவின் தலையீடு வரவேற்கத் தக்கதாக இருக்கும் என்பது எனது தனிப்பட்ட கருத்து.

எது எப்படியிருப்பினும் One to One Basis பேச முடியுமாயின் அதுவே மிகச் சிறந்த வழியாக இருக்கும். தென் ஆபிரிக்காவில் ஜனாதிபதி கிளார்க், நெல்சன் மண்டேலாவுடன் பேசிய அணுகுமுறை அல்லது இருவரும் (தலைவர்கள்) தமது நேரடிப் பிரதிநிதிகள் இருவர் மூலமோ அல்லது இருவரும் விரும்பும் நடுநிலைவாதி ஒருவர் மூலமோ இந்த அடிப் படையில் பேசலாம்.

அமெரிக்க வெளியுறவு செயலாளர் வொரன் கிறிஸ்தோபர் மத்திய கிழக்கில் பாலஸ்தீன, இஸ்ரேல் அண்டை நாடுகளுடன் மேற்கொள்வது போன்ற ஒரு நடவடிக்கை.

அல்லது Richard Holdbroke பொஸ்னிய, சேர்பிய, குரோஷிய தரப்பினருடன் மேற்கொண்டது போன்ற ஒரு நடவடிக்கை.

அல்லது பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பிடல் ராமோஸ், மோரோ தேசிய விடுதலை முன்னணி தலைவர் நூர்மிஸ்வாரி ஆகியோர் மேற்கொண்டது போன்ற ஒரு நடவடிக்கை.

வெறும் இருதரப்புக் குழுக்கள், சிவில் அதிகாரிகள் சந்திப்பது அர்த்தமற்ற செயலாகவே முடியும்.

***தற்போது முன்வைக்கப்பட்டுள்ள அதிகாரப் பரவலாக்கல் பிரேரணைகள் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?***

அதில் முஸ்லிம்களைப் பற்றி எதுவும் கூறப்படவில்லையே!

***காரணம்?***

முஸ்லிம் தலைவர்களின் கையாலாகாத் தன்மையும், முஸ்லிம்களின் இலட்சியப்போராட்டம் கொச்சைப்படுத்தப்பட்டமையும்.

***பேரினவாதிகளைக் குறை கூற மாட்டீர்களா?***

இல்லாமல் இல்லை. முஸ்லிம் சமூகத்தின் தனித்துவமும், அரசியல் முக்கியத்துவமும் தமிழ், சிங்கள சக்திகளின் கவனத்தை ஈர்க்குமளவுக்கு ஸ்தாபிக்கப்படவில்லை. இன்னமும் முறையாக உணர்த்தப்படவில்லை. அதற்குரிய சந்தர்ப்பங்கள் யாவும் விலை பேசப்பட்டிருக்கின்றனவே! நாம் இன்னும் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்!

***அது எப்படி? சற்று விரிவாக....?***

ஒரு சிறிய உதாரணம்: ஜே.ஆர் - ராஜீவ் 1987ல் செய்து கொண்ட இந்திய -



இலங்கை உடன்படிக்கையில் முஸ்லிம்கள் பற்றிப் பேசப்படவில்லை என்பதற்காகத்தானே அமைச்சர் பதவிகளையும் அபிவிருத்தி நிதிகளையும், சமூக விடுதலைப் போராட்டத்திற்கு பேரம் பேசப்படுகின்ற செல்லாச் சில்லறைக் காசுகளாகத் தூற்றி முன்னைய முஸ்லிம் தலைவர்களை பேரினவாதிகளின் எடுபிடிகளாகவும், கோடரிக்காம்புகளாகவும் சிலாகித்து எச்சில் பொறுக்கிகளாக வர்ணித்து தனித்துவமான தலைமைத்துவம் கொண்டு வந்தோம்.

முஸ்லிம் காங்கிரஸ் 1989 ஜனாதிபதித் தேர்தலில் பிரேமாவுக்கு ஆதரவு கொடுத்து பேசியபோது எமது தனித்துவத்தை ஸ்தாபித்ததா? புலிகளுடன் பிரேமா பேசிய போது அழுத்தம் கொடுத்ததா? இறுதியாக ஸ்ரீ.ல.மு.கா. பொ.ஐ.முன்னணியுடன் இணைந்து ஆட்சி அமைத்த போது, 1994லும் அதே பழைய காலை நக்குகிற கதைதானே...!

நூற்றுக்கு நூறு ஜே.ஆர்.ஐ எதிர்த்த இந்தப் போராளி, நூற்றுக்கு நூறு சந்திரிகாவை எந்தத் தனித்துவத்தை வென்றதற்காக ஆதரிக்கச்சொல்லுகிறார்? ஆக, நாங்கள் ஒரு அடியேனும் முன்னோக்கி நகரவில்லை தானே!!

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள சந்திரிகா அம்மையார் அரசின் பிரேரணைகளில் ஏன் முஸ்லிம்களைப்பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

''இந்நாட்டினை ஆள்பவர்கள் யார் என்பதை நாம் தீர்மானித்துள்ளோம், சந்திரிகாவை ஜனாதிபதியாக்கி ஸ்ரீமாவை பிரதமராக்கினோம்'' இது தலைவரின் பெருமிதம்.

நீங்கள் அமைத்த அரசு, நீங்கள் உருவாக்கிய ஜனாதிபதி - முன்வைத்துள்ள சமாதானத்திற்கான யோசனைகளில் முஸ்லிம் சமூகம் பற்றி எதுவும் குறிப்பிடப் படவில்லையென்றால் இன்னும் நாம் ஒரு தனித்துவமான சமூகமாக அங்கீகாரம் பெறவில்லை என்பது தானே அர்த்தம்.

"தற்போதைய அதிகாரப் பரவலாக்கல் பிரேரணையில் முஸ்லிம்கள் பற்றி எதுவும் இல்லையே!"

-முஸ்லிம் கட்சி தவிசாளர் இனாமுல்லா

அதிகாரப் பரவலாக்கத்திற்காக 26 ஜுன் 1986ல் முன்வைக்கப்பட்ட ஜே.ஆர் அரசின் பிரேரணைகள்.

1987ல் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கை.

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள நீதி, அரசியலமைப்பு அலுவல்கள் அமைச்சின் வெளியீடான ''தத்துவப் பரவலாக்கல் பற்றிய பிரேரணைகள் அடங்கிய இலங்கை அரசாங்கத்தின் அரசியலமைப்பு வரைவு ஏற்பாடுகள்'' ஆகியவற்றை ஒரு முறை ஒப்பிட்டு ஆராய்ந்து பாருங்கள்.

***ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சியின் நிலைப்பாடு...?***

1995 ஒகஸ்ட் 4ம் திகதி இந்தப் பிரேரணைகள் அரசாங்கத்தால் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன. அதற்கு ஓரிரு தினங்களுக்கு முன் ஹாஜியார் அஷ்ரஃப் தொலைக்காட்சியில் தோன்றி நூற்றுக்குநூறு (படிக்காமலே) அவற்றிற்கு முஸ்லிம்கள் ஆதரவு. ''சியட்ட சியய்'' என சிங்களத்திலும் சொல்லி விட்டு வெளிநாடு சென்றார்.

அடுத்த ஓரிரு தினங்களுக்குள் பிரேரணைகளை நன்கு படித்துவிட்டு அதிகாரங்களைப் பற்றி மட்டும் குறிப்பிட்டு அலகுகள் பற்றிச் சொல்லாத, முஸ்லிம்கள் பற்றி எதுவும் சொல்லாத முன்மொழிவுகளுக்கு முஸ்லிம்கள் நூற்றுக்கு நூறு ஆதரவளிக்க முடியாது என்று முஸ்லிம் கட்சி அறிக்கைகள் வாயிலாக பத்திரிகைகளில் - தனது நிலைப்பாட்டை தெளிவாகச் சொன்னது. அது மாத்திரமன்றி முஸ்லிம்களுக்கு அலகு எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் மிகவும் தெளிவாக இனங்கண்டு தனது நிலைப்பாட்டை முன்வைத்துள்ளது. அது தொடர்பான விபரங்களுக்கு ''நிரந்தர சமாதானத்திற்கான முஸ்லிம் கட்சி யோசனைகள்'' என்ற வெளியீட்டினைப் பாருங்கள்.

***முஸ்லிம்களுக்குரிய பிராந்திய அலகு பற்றி சுருக்கமாக...?***

முஸ்லிம்களுக்கு பொருத்தமான அலகு (Power Sharing Unit) தேவையென்பதில் சகல முஸ்லிம் கட்சிகளும் கருத்தொருமித்துள்ளன: (கொள்கை அளவில்). முஸ்லிம் காங்கிரஸ் சந்தர்ப்பங்களைப் பாழ்படுத்தி விட்டது. முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி எதுவித முன்மொழிவுகளையும் இதுவரை தயாரிக்கவில்லை. முஸ்லிம் கட்சி தனது முன்மொழிவுகளில் வடக்கில் 3 அலகுகள் உருவாக்கப்படுவதை சிபாரிசு செய்கிறது.

1) வடமாணத்தில் 95% விகிதம் தமிழரைப் பெரும்பான்மையாகக் கொண்ட தமிழ் அலகு.

2) மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்கள் இணைந்த 60% விகித தமிழரையும், 30% விகித முஸ்லிம்களையும், சிறு தொகை சிங்களவரையும் கொண்ட கிழக்குக்கான தமிழ் பெரும்பான்மை அலகு - Predominent Tamil Unit.

3) தென்கிழக்கில் 60% விகித முஸ்லிம்களையும், 30% விகித தமிழரையும், சிறு தொகை சிங்களவரையும் உள்ளடக்கும் முஸ்லிம் பெரும்பான்மை அலகு - Predominent Muslim Unit.

இதன்படி 74% சிங்களவர்களுக்கு 7 அலகுகளும், 18% தமிழர்களுக்கு 2 அலகுகளும், 8% முஸ்லிம்களுக்கு 1 அலகும் தோற்றுவிக்கப்பட்டு இலங்கை 10சுயாட்சி அலகுகளைக்கொண்ட ஐக்கிய இராச்சியமாகத் திகழும்.

***வடக்கில் முஸ்லிம்களும், கிழக்கில் சிங்களவர்களும், முக்கியத்துவம் அற்ற சிறுபான்மையினர்* Insignificant Minority *ஆக்கப்பட மாட்டார்களா?***

வட கிழக்கில் குறிப்பாக கிழக்கில் திருகோணமலையிலும், அம்பாறையில் உள்ள சிங்களவர்கள் வாழும் பிரதேசங்கங்களையும் அண்மித்துள்ள சிங்களப் பிரதேசங்களுடன் - வடமத்திய, ஊவா மாகாணங்களுடன் - பொருத்தமான வகையில் மீளெல்லை செய்து இணைத்து விடுவதை முஸ்லிம் கட்சி சிபாரிசு செய்கிறது.

***வட மாகாண முஸ்லிம்கள்....?***

வடக்கு முஸ்லிம்கள் அப்பிரதேச தமிழ் மாநிலத்தின் ஆட்சியின் கீழ் இருப்பதில் தான் அவர்களுக்கு நன்மை இருக்கின்றது. 250 மைல்களுக்கு அப்பால் உள்ள தென் கிழக்கு மாகாண சபையின் ஆட்சியின் கீழ் தொடர்பற்ற நிலையில் (Non Contigous areas) வருவது அவர்களுக்கு சமூக அரசியல் பொருளாதார, நிர்வாகப் பிரச்சினைகளை அதிகரிக்கச் செய்வதோடு நடைமுறையில் அசாத்தியமாகிவிடுகின்ற ஒரு யோசனையாகும்.

முஸ்லிம் பெரும்பான்மை அலகில் தமிழ் சிங்கள சிறுபான்மையினருக்கு கிடைக்கும் சகல விதமான உத்தரவாதங்களும் வடக்கில் அவர்களுக்கு கிடைப்பது இயல்பாகவே உறுதிப்படுத்தப்பட்டு விடும்.

நாட்டில் உள்ள ஏனைய 7 அலகுகளிலும் வாழ்கின்ற சிறுபான்மைச் சமூகங்களான முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்கும் பொதுவாக இத்தகைய யாப்பு ரீதியாலான உத்தரவாதங்கள் Constitutional Secrurities Guarantees கிடைக்குமல்லவா?

***மீள் எல்லை*(Demarcation) *பற்றிக் குறிப்பிட்டீர்கள் அல்லவா? அது பற்றி சுருக்கமாக....?***

மீள்எல்லை என்ற விடயத்தை முஸ்லிம் கட்சி வலியுறுத்துகிறது. முதற்படியாக வடகிழக்கிலுள்ள சிங்களப் பிரதேசங்களை அண்மித்துள்ள சிங்களப் பகுதிகளுடன் இணைத்து தமிழ் மொழி மாநிலத்தை அடையாளம் காணுவது.

இரண்டாவதாக, குறிப்பாக வடகிழக்கிலும் ஏனைய மாகாணங்களிலும் சிறுபான்மையினரது அரசியல் நிர்வாக நலன்களைப் பேணும் விதத்தில் உள்ளூராட்சிசபைகளுக்கான எல்லைகளையும், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் கிராம சேவகர் பிரிவுகளையும், தேர்தல் நிர்வாக மாவட்டங்களையும் தொகுதிகளையும் மீள் எல்லை செய்தல். குறிப்பாக முஸ்லிம்களான நாங்கள் இவ்விடயங்களில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம்.

காலனித்துவ ஆட்சியாளருக்கு குறிப்பாக ஆங்கிலேயருக்கு உகந்த விதத்தில் அமைக்கப்பட்ட எல்லைகளும், சுதந்திரத்திற்குப் பின்னர் சிங்களப் பேரினவாதிகளுக்குத் தேவைப்பட்ட விதத்தில் அமைக்கப்பட்ட எல்லைகளுமே தற்போது பிரச்சினைகளை வளர்த்து விட்டுள்ளன. குறிப்பாக 1976ல் மீள்எல்லை மேற்கொள்ளப்பட்டதைப் பாருங்கள்.

***திட்டமிட்ட சிங்களக் குடி யேற்றங்கள் பற்றி குறிப்பிட்டீர் கள். அது பற்றி சற்று விரிவாகக் கூறமுடியுமா?***

விரிவாக தற்போது முடியாது. எனினும், ஓரளவு விளக்கமாக கூறுவதாயின்,

வடக்கு, கிழக்கு மாகாணம் - யாழ் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய ஏழு மாவட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது. சுமார் 7268 சதுரமைல் நிலத்தைக் கொண்டுள்ளது. இதில் கிழக்கு மாகாணம் 3839 சதுர மைல்களைக் கொண்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் சுதந்திரத்திற்குப் பின்னர் மாறி மாறி ஐ.தே.கட்சியும் சுதந்திரக் கட்சியும் சுமார் 1600 சதுர மைல் நிலத்தில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டுள்ளன. அதாவது முழு நிலப்பரப்பில் 42விகிதம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்திலுள்ள 1016 சதுர மைல் நிலப் பரப்பில் 70சதவிகிதமான 700 சதுர மைல் காணியை 1976ம் ஆண்டு தேர்தல் தொகுதி எல்லைகள் நிர்ணயிக்கப் பட்டபோது புதிய சிங்களத்தொகுதிக்காக (சேருவிலத் தொகுதி) அபகரித்துக் கொண்டனர். அதே போல் அம்பாறை மாவட்டத்தில் உள்ள 1775 சதுர நிலப் பரப்பில் 50 சத விகிதமான 900 சதுர மைல் காணியை அபகரித்து அம்பாறைத் தொகுதியை ஏற்படுத்தினர்.

1921ம் ஆண்டு கிழக்கில் 4 சதவிகிதத்துக்கும் குறைவாக இருந்த சிங்களவர் 1981ல் 24 சத விகிதமாக அதிகரித்துள்ளனர். கல்லோயா, கந்தளாய், எல்லை அபிவிருத்தித் திட்டத்தின் பெயரால் ஏற்பட்ட மாற்றங்கள் போல் துரித மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின் கீழும் பாரிய மாற்றங்கள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இத்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண எல்லைக்குள் வரும் காணியின் விஸ்தீரணம் சுமார் 1,60,000 ஏக்கர்கள். 45,000 காணித்துண்டுகள். இதில் 19,000 காணித்துண்டுகளில் ஏறக்குறைய ஒரு இலட்சம் சிங்களவர்கள் புதிதாக குடியேறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த இதழில் முடியும்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சித்திரா விவகாரம்:

# வெளுத்துப்போகும் நீலச்சாயம்!

டென்மார்க்கிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட சித்திரா ராஜேந்திரம் என்ற 18 வயது மாணவி தொடர்பான விவகாரம் இப்பொழுது இலங்கை அரசாங்கத்தின் முகமூடியை முற்றாகக் கிழித்து விட்டுள்ளது. அரசாங்கம் திரும்பத்திரும்ப இந்த நாட்டில் தமிழர்களுக்கு போதிய பாதுகாப்பு உண்டு, அவர்கள் எந்தவிதப் பயமும் இன்றி இங்கே வாழ்கிறார்கள், அதுவும் இந்தப் பொ.ஐ.மு. அரசாங்கத்தின் கீழ் அவர்களுக்கு எந்த அச்சமும் இல்லை என்ற பிரச்சாரத்தை வாய்கிழிய செய்து வருகின்றது. மனித உரிமைகட்கான ஐ.நா. ஸ்தாபனமும் அரசாங்கத்தின் இந்தப் பிரச்சாரத்திற்குப் பக்கப்பாட்டுப் பாடி வருகிறது. கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வாழ்கின்ற தமிழர்கட்கு எத்தகைய ஆபத்தும் இல்லையென்றும், குடாநாட்டில் இப்போது நிலைமை வழமைக்கு திரும்பிவிட்டதால், இங்குள்ள யுத்தநிலை காரணமாக வெளிநாடுகளுக்கு அகதிகளாக சென்றோர் திருப்பி அனுப்பப்படலாம் என்ற அபிப்பிராயம் இந்தப் பிரச்சாரங்கள் காரணமாக தமிழர்கள் அரசியல் தஞ்சம் கோரியுள்ள நாடுகளில் இப்போது பலமாக ஏற்பட்டிருப்பது உண்மையே. இந்த அடிப்படையில் சுவிற்சர்லாந்து, நோர்வே, டென்மார்க் ஆகிய நாடுகள் ஏற்கெனவே பல தமிழ் இளைஞர்களை ஒவ்வொருவராக திருப்பி அனுப்பியுள்ளன. டென்மார்க்கிலிருந்து இவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் ஒருவர்தான் இந்த சித்திரா ராஜேந்திரம் என்ற 18 வயது மாணவி.

பொ.ஐ.மு. அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின் இருந்த ஆரம்ப கால நிலையில் இலங்கைக்கு இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டவர்கள் அவ்வளவு பிரச்சினைகளை எதிர்நோக்கவில்லை என்பதால் இந்த நாடுகள் மிகவும் உற்சாகத்துடன் ஒவ்வொருவராக அனுப்பத்தொடங்கின. ஆனால் புலிகளுடனான இந்த அரசாங்கத்தின் யுத்தம் மீளவும் வெடித்தபின் இந்த நிலைமை தலைகீழாக மாறி விட்டது. கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வேலை செய்வதற்காகவோ, வேறேதாவது கராணங்களுக்காகவோ தற்காலிகமாக தங்கியிருப்பவர்கள் அனைவரும், அவர்கள் தமிழர்களாக இருக்கும் பட்சத்தில் புலிகளே என்று சந்தேகித்து கைது செய்தல், தடை முகாமில் வைத்திருத்தல், பொய்க்குற்றச்சாட்டுகளை சுமத்தல் போன்ற நடவடிக்கைகள் மிகவும் பெரியளவில் அதிகரித்தன. விடுதிகள் இழுத்து மூடப்பட்டன. வீடுகளில் யாரையும் தங்கவைக்கவேண்டாம் என்று அறிவிக்கப்பட்டது. சந்திக்குச் சந்தி தடை முகாம்கள் போடப்பட்டு அடையாள அட்டைகளில் தமிழரா, பிறந்த பிரதேசம் என்ன என்பன ஆராயப்பட்டன. நீதிமன்றங்களில் எத்தகைய குற்றச்சாட்டும் நிரூபிக்கப்படாமல் விடுதலையானோர்கள் ஒரு புறமிருக்க, விடுதலை செய்யப்படாமல் இன்னமும் தடை முகாம்களில் மாதக்கணக்காக பலர் வைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

பொலிஸாரைப் பொறுத்தவரை இவை ஒருவகையில் அவர்களுக்கு தாம் கடமை செய்ததாக மேலதிகாரிகளிடம் பெயர் வாங்கிக் கொள்ளவும், பணம் பண்ணவும், பயன்படும் ஒரு விவகாரமாக மாறி விட்டது. தமிழர்களது நிலையோ என்றால், ஒரு அந்நிய மண்ணில், தமிழர்களாகப் பிறந்த ஒரே காரணத்திற்காக இம்சைப்படுத்தப்படுகின்ற ஒரு நிலையாகவே உள்ளது. கொழும்பில் புலிகளது நடமாட்டத்தை கண்டுபிடித்துவிட்டதாக பெயர் வாங்கிக்கொள்வதற்காக (சிலவேளைகளில் பணப்பரிசும், பதவியுயர்வும் கூட) கண்மூடித்தனமான பல கைதுகள் செய்யப்படுவதுடன், பொய் வாக்குமூலங்களையும் பெறுவதற்கான சித்திரவதைகள் கூட நடாத்தப்படுகின்றன. அண்மையில் உயர் நீதிமன்ற நீதியரசர் ராமநாதம் அவர்களே இவ்வாறான சித்திரவதைகள் நடப்பதையிட்டு கவலை தெரிவித்திருந்தது பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது.

இந்த நிலைமைகள் மனித உரிமைகளுக்கான ஐ. நா நிறுவனத்திற்கோ தமிழர்கள் அரசியற் புகலிடம் கோரியுள்ள நாடுகளின் அதிகாரிகட்கோ தெரியாமல் இருக்கலாம். அல்லது தெரிந்து கொண்டே எப்படியாவது இவர்களை திருப்பி அனுப்பிவிடுவது நல்லது என்று அவர்கள் கருதலாம். ஆனால் அந்த நாடுகளில் உள்ள தமிழர்கள் இவற்றை நன்கு அறிவார்கள். எனவேதான் அவர்கள் திரும்பி வருவதற்கு தொடர்ந்து மறுப்புத் தெரிவித்து வருகின்றனர். இலங்கையின் சமீபகால நிலைமைபற்றிய பரிச்சயமுள்ள மனித உரிமைகள் அமைப்புகள், பத்திரிகைகள் என்பவை இவைபற்றி மிகவும் அக்கறையாக இருப்பதுடன் இந்த நாட்டு அரசாங்கங்களை, அகதிகளை திருப்பி அனுப்பவேண்டாம் என்று கோரியும் வருகின்றன.

சித்திரா ராஜேந்திரம் டென்மார்க்கிலிருந்து அனுப்பப்பட்ட 13 வது நபர் என்று தெரியவருகிறது. இவர் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்திருந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட பின் இவர் திருப்பி அனுப்பப்படலாம் என்ற அச்சம் பொதுவாக அங்கு நிலவியது. இவர் கல்வி கற்ற பாடசாலை மாணவர்கள், அங்குள்ள மனித உரிமையாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் இவரை திருப்பி அனுப்பவேண்டாம் என்று அங்குள்ள அதிகாரிகளைக் கோரியிருந்தனர். தவிரவும் சித்திரா தனது விவகாரத்தை விசாரிக்குமாறு மேன்முறையீடு ஒன்றையும் செய்திருந்தார். இந்த மேன்முறையீட்டு விசாரணை நடந்து முடியும் முன்பாகவே அவசர அவசரமாக கடவுச்சீட்டோ, அடையாள அட்டையோ எதுவும் இல்லாமல் இவரை இரண்டு டென்மார்க் அதிகாரிகளுடன் இலங்கைக்கு திருப்பி அனுப்பியிருக்கிறது டென்மார்க் அரசாங்கம். 1993இல் அங்கு சென்ற இம்மாணவி 3 ஆண்டுகளுக்குப் பிறகு எந்தவிதமான அடையாளப் பத்திரங்களும் இன்றி வெறும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்துடன் இங்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

இலங்கை விமான நிலைய குடிவரவு அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்ட சித்திரா, அவர்களால் விடுவிக்கப்பட்டு தெஹிவளையில் உள்ள தனது உறவினர் ஒருவரது வீட்டில் வந்து தங்கியுள்ளார். இவர் இந்த வீட்டில் தங்கியிருந்த மூன்று நாட்களின்பின் கைது செய்யப்பட்டு இப்போது இரட்சணியசேனையின் இல்லத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

ஆனால் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையிலோ இவர் புலிகளுடன் தொடர்புள்ளவர் என்பதற்கான நம்பத் தகுந்த ஆதாரங்கள் இருப்பதாகவும், (யாழ்ப்பாணத்தில் 1993ல் டென்மார்க் போக முன்னர் - அதாவது 15 வயதில் புலிகளின் தாதியாக இவர் இயங்கினார் என்றும் டென்மார்க்கில் புலிகளுக்கு நிதி சேர்த்தார் என்றும்) இதன் கராணமாகவே இவர் கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவித்துள்ளது. பாதுகாப்பு அமைச்சின் இந்த அறிக்கையில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை என்றால், இவ்வாறான அறிக்கைகளை வெளியிடுவதில் தான் எந்த விதத்திலும் சளைத்ததல்ல என்பதை ஏற்கெனவே பல தடவைகளில் பாதுகாப்பு அமைச்சு நிரூபித்துள்ளது. எனவே எவரையும் அவர் தமிழர் எனற ஒரு காரணத்திற்காகவே அவரைப் புலி என்று குற்றம் சுமத்துவதற்கு எந்தத் தயக்கமும் இருக்கப்போவதில்லை என்பது வெளிப்படை. இதனால் சித்திரா ராஜேந்திரம் ஒரு தீவிர புலி சந்தேக நபராகிவிட்டார்.

இந்தச் சந்தேகத்திற்கு உள்ளாக்கப்பட்ட சித்திரா விவகாரம் யாருக்கும் தெரியாத ஒரு கதையாகப் போயிருக்கும். ஆனால் அவரது நல்ல காலமோ என்னவோ டென்மார்க்கில் அவர் கல்வி கற்ற பாடசாலை மாணவர்கள் டென்மார்க் அரசாங்கத்தின் இந்த நாடுகடத்தலை எதிர்த்ததும், அங்குள்ள பத்திரிகைகள் இந்த விவகாரத்தை ஆராய தமது நிருபர்களை அனுப்பியதும் அவருக்கு ஓரளவு பாதுகாப்பை அளித்துள்ளது. குறைந்த பட்சம் பொலிஸ் நிலைய கொட்டடிக்குள்ளோ தடுப்பு முகாம் சுவர்களுக்குள்ளோ இருந்து சித்திர வதைப்படாமல் இரட்சனியசேனை முகாமில் அவர் விடப்பட்டிருக்கின்றார்.

உண்மையில் டென்மார்க்கிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட சித்திரா ராஜேந்திரம் புலிகளுடன் சம்பந்தப்பட்டவர் தானா என்பது குறித்து புலன் விசாரணை செய்வதுதான் பொலிசாரின் நோக்கம் என்றால் அவர் பற்றிய விசாரணைகளை ஓரிரு தினங்களுக்குள்ளேயே முடித்திருக்க முடியும். அத்துடன் அவரது நிலைமை பற்றி ஆராயவென இங்கு வருகை தந்த பத்திரிகையாளர்கள் நால்வரையும் அவருடன் சுதந்திரமாக பேச அனுமதிப்பதுடன் இங்குள்ள நிலைமைகளை அவர்களுக்கு விளக்கும் பொறுப்பை பொலிஸ் எடுத்துக் கொண்டிருக்கவும் முடியும். ஆனால் பொலிசார் அப்படிச் செய்யவில்லை. மாறாக வந்திருந்த பத்திரிகையாளர்களையும் சந்தேகப்பட்டு விசாரித்தது மட்டுமல்லாமல் அவர்களையும் தடுப்புக்காவலில் வைத்திருந்துள்ளனர். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, பாதுகாப்பு அமைச்சு தனது வழமையான சேட்டைகட்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல, அவர்களை கடந்த 13ம்திகதி திடீரென பலவந்தமாக திருப்பி அனுப்பிவிட்டுள்ளது. நாட்டுக்குள் வரும் போது பத்திரிகையாளர்கள் என்று அவர்களில் இருவர் தம்மைக் குறிப்பிடவில்லையென்று விடுமுறையைக் கழிக்க வந்துள்ளார்கள் என்றும் நொண்டிக் குற்றச்சாட்டுக்கூறும் அமைச்சு, அவர்கள் தம்மைப் பத்திரிகையாளர்கள் என்று வெளிப்படுத்திய பின்னும் ஏன் வெளியேற்றியது என்று மட்டும் குறிப்பிடவில்லை. வெறுமனே அவர்கள் இங்கே தங்கியிருப்பது நாட்டின் நலனுக்கு குந்தகமானது என்று கூறி அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டுள்ளது.

ஒலி ஹொப் - லண்ட், மோர்ட்டென் ஜாஸ்ரப், நிஸ் ஓல்சென், ஜென்சன் ஜென்ஸ்மொல்லர் ஆகியோரே இவ்வாறு நாடுகடத்தப்பட்ட டென்மார்க் பத்திரிகையாளர்களாவர். இவர்கள் தங்கியிருந்த விடுதி அறைகளும் இவர்களது தனிப்பட்ட பொதிகளும் சோதனையிடப்பட்டுள்ளன. கூடவே இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த ஒரு தொடர்பு சாதனவியலாளரும் இப்பத்திரிகையாளர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார் என்பதற்காக விசாரிக்கப்பட்டுள்ளதுடன் வேலை இடைநிறுத்தமும் செய்யப்பட்டுள்ளார்.

கல்கிசையில் உள்ள விடுதியொன்றில் பலத்த பாதுகாப்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்தப் பத்திரிகையாளர்களை சந்திக்க இலங்கைப் பத்திரிகையாளர்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை. தாம் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளது சர்வதேச தொடர்புசாதன சட்டவிதிகட்கு முரணான ஒரு நடவடிக்கையாகும் என்று இப்பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இலங்கையில் தமிழர்களின் நிலை பாதுகாப்பானது தானா? அவர்கள் இங்கு திருப்பி அனுப்பப்படலாமா என்பதை கண்டறிய வந்த பத்திரிகையாளர்கட்கு பாதுகாப்பு அமைச்சின் திமிர்த்தனமான போக்கு முகத்திலடித்தாற்போல் ஒரு உண்மையை வெளிப்படுத்தியுள்ளது. அதாவது இங்குள்ள தமிழர்களுடைய நிலை இன்னமும் பாதுகாப்பாற்றது மட்டுமல்ல, அவர்களது நலன்களை கவனிக்க விரும்புபவர்களது நிலையும் ஆபத்தானதே என்பதுதான் அது!

ஆக, சித்திரா ராஜேந்திரம் அவர்கள் பற்றிய விசாரணைகள் தொடர்கின்றன. கோப்பாயிலிருந்து அவரது தகப்பனார் கொழும்புக்கு தருவிக்கப்படவுள்ளதாக இப்போது அறிவிக்கப்படுகிறது.

சித்திரா ராஜேந்திரம் புலிகளுடன் தொடர்புள்ளவரா இல்லையா என்பது ஒரு புறம் இருக்க, இவர் பற்றிய புலன் விசாரணை மட்டும்தான் அரசாங்கத்தின் நோக்கம் என்றால் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை அவசர அவசரமாக நாடுகடத்தியது ஏன்? அவர்கள் இங்கிருப்பது எவ்வாறு அரசாங்கத்தின் புலன் விசாரணைக்கு தடையாக இருந்திருக்கக்கூடும்? உண்மையில் கைது செய்யப்பட்ட சித்திரா மூலமாக, இங்குள்ள தமிழர்கள் நடாத்தப்படுகின்ற விதம் குறித்த தகவல்கள் வெளிநாடுகட்குப் போய்விடும் என்பதும், இது இலங்கை அரசாங்கத்தின் பிரச்சாரத்திற்கு தடையாகிவிடும் என்பதும் தான் இதற்கான பிரதான காரணம்.

''அருண்டவர் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய்'' என்பார்கள் இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைக்கு இப்போது தமிழர்கள் என்றாலே புலிகளாகத்தான் தோன்றுகிறது. இந்தப் பயம் காரணமாக அவர்கள் தீவிரமாக செயற்படத் தொடங்கியுள்ளார்கள். அதிலும் புலிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாக்கின்ற கடமை உணர்வின் தீவிரம் மிகவும் அதிகமாகிவிட்டுள்ளது. ஆனால், துரதிருஷ்டவசமாக இதன் காரணமாக அவர்களுக்கு அடிக்கடி புத்தி பேதலித்து விடுகிறது.

இந்தப் பேதலிப்பின் காரணமாக அரசாங்கமும் வெளிநாட்டமைச்சும் மிகவும் கஷ்டப்பட்டு கட்டிவரும் முகமூடிகளை, பாதுகாப்பு அமைச்சு ஒவ்வொன்றாக உடைத்து வருகிறது.

இரண்டு உதாரணங்கள்:
ஒன்று கிரிஷாந்தி
இரண்டு சித்திரா!





வெளியேற்றப்பட்ட டென்மார்க் பத்திரிகையாளர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# "வடக்கு மக்களின் மீள் குடியேற்றம் தாயக மண்ணிலேயே இடம் பெற வேண்டும் !"

## --மௌலவி B.A.S சுபியான்

(உப தலைவர், வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு)





**வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு ஆறு வருடங்கள் சென்றுவிட்டன. வெளியேற்றப்பட்ட இம் மக்களின் வாழ்நிலை எவ்வாறுள்ளது?**

வடக்கிலிருந்து எமது மக்கள் வெறுங்கையோடு வெளியேற்றப்பட்டார்கள். தற்பொழுது, ஓலைக் குடிசைகளில் சமைப்பதற்கும் உறங்குவதற்கும் மட்டும் தேவையான சில உடமைகளோடு வாழ்ந்து வருகிறார்கள். ஆறு வருடங்களுக்கு முந்திய எமது நிலையோடு இதனை ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது ஒரு பாரதூரமான சமூக ஆரோக்கிய வீழ்ச்சியை நாம் அவதானிக்கலாம்.

இதில் குறிப்பாக கல்வி, ஒழுக்கம், கலாசாரம் ஆகியவற்றில் பாரதூரமான தாக்கம் காணப்படுகின்றது. உதாரணத்துக்கு கல்வியை எடுத்துக்கொண்டால், இன்று பாடசாலை செல்லும் மாணவர்களின் விகிதாசாரம், உயர் கல்வி கற்கும் மாணவர்களின் விகிதாசாரம் என்பன படிப்படியாக வீழ்ச்சியடைந்து கொண்டு செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதன் பாரதூரம் எதிர்காலத்தில் எமது மக்களை மிகக் கடுமையாகப் பாதிக்கப்போவதை நினைக்கும் பொழுது வேதனையாக இருக்கிறது.

**வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் அரசின் புனர்வாழ்வு அமைச்சினால் புத்தளம் போன்ற அகதிகள் தங்கியிருக்கும் மாவட்டங்களில் தற்போது மீளக் குடியமர்த்தப்படுவது பற்றி?**

அவர்களது பாரம்பரியப் பிரதேசத்தில் குடியேறுவதே மீள்குடியமர்வு ஆகும். ஆனால் புனர்வாழ்வு அமைச்சினால் அண்மையில் புத்தளம் மாவட்டத்தில் அகதிகளுக்காக திறக்கப்பட்ட குடியேற்றம், ''மீள்குடியேற்றக் கிராமம்'' (Re- Settlement Village) என்று அழைக்கப்படுகின்றது. எமது மக்களின் அகதிப் பிரச்சினையை தனித்துவமாக நோக்குகின்ற போது இது பொருத்தமானதாக இல்லை. ஆறு வருட அகதிமுகாம் வாழ்க்கையில் மக்கள் மிகவும் சோர்வடைந்து விட்டார்கள். அகதி முகாம் வாழ்க்கையில் உடல், உள, ஆரோக்கியம், சமய, கல்வி, கலாசார ஒழுக்கம் போன்றவற்றில் ஏற்பட்ட மோசமான பாதிப்புக்கள் எமது மக்களின் முகாம் வாழ்க்கைக்கு மாற்று ஒழுங்கொன்று தேவை என்பதை வேண்டி நிற்கின்றது. இதனை வலியுறுத்தியே இம்மக்களுக்கு பொருத்தமான இடைக்கால வாழ்க்கை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும் என்று தொடர்ச்சியாகக் குரல் எழுப்பிக் கொண்டு வரும் வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு (NMRO) கடந்த வருடம் UNHCRக்கு முன்னால் கூட வடக்கு முஸ்லிம்களுக்கு 'அகதி' அந்தஸ்து தரவேண்டும் என்ற போராட்டத்தை நடத்தியது.

இதன் வெளிப்பாடாக தற்பொழுது நடைமுறைப் படுத்தும் சில வாழ்விட வசதி முயற்சிகள் வரவேற்கத் தக்கனவாக இருந்த பொழுதிலும், அவைகள் மீள் குடியேற்றம் என்ற அடிப்படையில் அமையாது. இதனை இடைக்கால வாழ்விட ஒழுங்கு (Interim Living Arrangment) என்று அழைப்பதே பொருத்தமானதாகும். மீள்குடியேற்றம் என்பது தாயக மண்ணிலேயே இடம் பெறவேண்டும் என்பதை நாங்கள் அரசுக்கு வலியுறுத்தி வருகின்றோம்.

**ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் முன்வைத்திருக்கும் வட - கிழக்கு முஸ்லிம் மாகாண சபை அல்லது முஸ்லிம் அலகு இவற்றைப் பற்றி வடக்கு முஸ்லிம்கள் எவ்வாறான கருத்தைக் கொண்டுள்ளனர்?**

உண்மையில் ஸ்ரீ.மு.காங்கிரஸ் முன்வைத்திருக்கும் திட்டமானது வடகிழக்கு இணைந்த சபையில் முஸ்லிம்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக ''முஸ்லிம் மாகாண சபை'' அல்லது ''முஸ்லிம் அலகு'' என்ற ஒன்று உருவாக்கப்பட்டு இச்சபைக்கு சட்டம், பாதுகாப்பு, காணிப்பங்கீடு போன்ற அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதாகும்.

இச்சபைக்குள் வடகிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் செறிவாக வாழ்கின்ற புவியியல் தொடர்ச்சியற்ற பிரதேசங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். வடக்கைப் பொறுத்தவரை மன்னார் மாவட்டத்தில் உள்ள முசலி, எருக்கலம்பிட்டி ஆகிய இரண்டு முஸ்லிம் பிரிவுகளும் முஸ்லிம் மாகாண சபைக்குள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதாகும்.

மு.காங்கிரஸ் முன் வைத்திருக்கும் முஸ்லிம் மாகாண சபை அரசியல் அபிலாஷைகளையும் பொருளாதார நலன்களையும் பாதுகாக்கும் நோக்கத்தில் உருவாக்கப் பட்டது. எனினும் இவ்வாறான சபையினால் எதிர்காலத்தில் வடக்கு முஸ்லிம்கள் நடைமுறைப் பிரச்சினைகள் பலவற்றை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்ற அச்சம் காணப்படுவதால் வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு (NMRO) ஒழுங்கு செய்த வடக்கு புத்திஜீவிகளினதும், சமுதாயப் பிரமுகர்களினதும் கூட்டத்தில் அதனை ஏற்றுக்கொள்வதில்லை என்று முடிவு எடுக்கப்பட்டது.

**வடக்கு முஸ்லிம்கள் அச்சப்படும் பிரச்சினைகள் என்னவென்பதை சற்று விளக்கமாகக் கூறமுடியுமா?**

விளக்கமாகக் கூறுவதாயின் வடக்கில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் முசலி, எருக்கலம்பிட்டி ஆகியவை முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்திருக்கும் மாகாண சபைக்குள் உள்ளடக்கப்படுகிறது. வடமாகாணத்தின் மொத்த முஸ்லிம்களில் 35% மானவர்கள் மேற்குறித்த இரண்டு முஸ்லிம் பிரதேசத்திற்குள்ளும் வாழ்கிறார்கள். எஞ்சிய 65% மானவர்கள் இம்மாகாணத்துள் வேறு பிரதேசங்களில் பரந்தும் சிதறியும் காணப்படுகின்றனர். பரம்பல் ரீதியான பலவீனத்தைக் கொண்ட இந்த 65%மான முஸ்லிம்கள் முஸ்லிம் மாகாண சபைக்குள் உட்படுத்தப்பட மாட்டார்கள். இவர்களின் குரல்கள் ஒலிக்கக்கூடிய வசதிகள் முஸ்லிம் காங்கிரஸ் முன் வைத்திருக்கும் மாகாண சபைக்குள் செய்யப்பட வில்லை. இந்த அடிப்படையில் முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்த முஸ்லிம் மாகாணக் கோரிக்கை வடக்கைப் பொறுத்தவரை முஸ்லிம்களின் சிறுபான்மை பாதுகாப்பு என்ற நோக்கத்தில் முரண்பாட்டினைக் கொண்டதாகவும் நடைமுறைக்கு பொருத்தமற்றதாகவும் காணப் படுகிறது.

மேலும் வடக்கில் முஸ்லிம் சிறுபான்மையினரின் பொருளாதார நடவடிக்கைகள் தமிழ்ப் பெரும்பான்மை மக்களில் தங்கியிருப்பதுடன் தமிழர் பெரும்பான்மையாக வாழ்கின்ற பிரதேசங்களில் அமைவுற்றதாகவும் காணப்படுகின்றது. இது முஸ்லிம்கள் பொருளாதார ரீதியாக பெரும்பான்மை தமிழ் மக்களில் தங்கி வாழும் தன்மையைக் காட்டுகின்றது. குறிப்பாக முசலி, எருக்கலம்பிட்டி ஆகிய பகுதிகளிலும் இதே நிலைதான் காணப்படுகின்றது. உதாரணமாக முசலி பகுதி முஸ்லிம்கள் நீர்ப்பாசனத்துக்கு அருவி ஆற்றையும், எருக்கலம்பிட்டி பகுதி முஸ்லிம்களின் தென்னை, பனை, நெல் விவசாய நிலங்கள், சங்கு, அட்டை குளிக்கும் கடல்வலயங்கள் அத்துடன் பலவகைப்பட்ட வியாபார நிலையங்கள் என்பனவும் தமிழர் பெரும்பான்மையான நிர்வாகப் பிரதேசங்களில் காணப்படுகின்றது. வடக்கு முஸ்லிம்களின் பொருளாதார நடவடிக்கைகள் இன ரீதியாக மட்டுப்படுத்தப் படுகின்ற போது எதிர் மறையான விளைவுகளையே அது தரக்கூடியதாக இருக்கும்.

மேலும் கூறுவதானால், அரசியல் பிரதிநிதித்துவ ரீதியாக வடக்கு முஸ்லிம்கள் முஸ்லிம் மாகாண சபை அமைப்புக்குள் பாரியளவில் நன்மையடையப்போவதில்லை. முஸ்லிம் மாகாண சபைக்குள் அடக்கப்படும் மொத்த சனத்தொகையில் 10% க்குக் குறைவானவர்களே வடக்கு முஸ்லிம்கள். அவ்வாறாயின் முஸ்லிம் மாகாண சபைக்குள் அரசியல் பிரதிநிதித்துவ, நிதி வள ஒதுக்கீட்டில் குறைவான முக்கியத்துவமே வடமாகாண முஸ்லிம்களுக்கு வழங்கப்படும்.

பிரதேசரீதியாக கிழக்கு மாகாண முஸ்லிம் பிரதேசங்களிலிருந்து தூரக் காணப்படும் வடக்கு மாகாண முஸ்லிம்களுக்கு அவர்களையும் உள்ளடக்கும் முஸ்லிம் மாகாண சபை பொருத்தமற்ற தீர்வு முயற்சியாகவே காணப்படுகின்றது. உண்மையில் வடக்கு முஸ்லிம்களின் பிரச்சினை தனித்துவமானது. வடக்கு முஸ்லிம்களின் பிர்ச்சினை தொடர்பாக தமிழ்க் கட்சிகள் உட்பட எவரும் முஸ்லிம் காங்கிரஸுடன் பேசித் தீர்மானிக்க முடியாது. அம் மக்களின் அபிலாஷைகளை விளங்கிக் கொள்ள வேண்டுமாயின் அவர்களுடைய பிரதிநிதிகளுடனேயே பேசவேண்டும்.,

**தற்போது இனப்பிரச்சினைக்கான தீர்வாக அதிகாரப் பரவலாக்கம் ஒன்றை மேற் கொள்வதே பொருத்தமானதாக பெரும் பாலானோரினால் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் வட மாகாண முஸ்லிம்கள் எவ்வாறான நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளனர்!**

உண்மையில் இந்நாட்டில் அமைதி ஏற்பட வேண்டுமாயின் அதிகாரப் பரவலாக்கம் இந்நாட்டுக்கு முக்கியமானதாகும். ஆனால் இவ் அதிகாரப் பரவலாக்கத்தில் வடமாகாண முஸ்லிம் சிறுபான்மையினரின் விகிதாசார முக்கியத்துவம், புவியியல், பரம்பல், அரசியல் அபிலாஷைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு இச்சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாக்கக் கூடியதான அரசியல் யாப்பு விதிகள் அமைக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

**இங்கே நீங்கள் 'சிறுபான்மை பாதுகாப்பு' என்று எதனைக் குறிப்பிடுகிறீர்கள்?**

முதலில், முஸ்லிம்கள் தனித்துவமான இனம் என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும். இரண்டாவது, சுதந்திரமாக வாழ, தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட, சொத்துக்கள் வைத்திருக்க சமய, கலாசார தனித்துவத்தை பேணுவதற்கு தடையாயிருக்கக் கூடாது. மூன்றாவது தனிமனித அல்லது சிறுபான்மையினரின் உரிமைகள் பாதிக்கப்படும் போது அவ்வுரிமையை மீண்டும் உறுதிப்படுத்தக் கூடிய நிதிமுறை ஒழுங்குகள் யாப்பின் மூலமாகச் செய்யப்பட வேண்டும். நான்காவது, சிறுபான்மையினரின் நலன்கள் பாதிக்கப் படக்கூடிய யாப்புக்கள், யாப்புத் திருத்தங்கள், இயற்றப்படாது என்பது உறுதிப்படுத்தப்படவேண்டும்.

**வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டு ஆறுவருடங்கள் முடிவடைந்த இக்கால கட்டத்தில் அண்மையில் புத்தளம் மாவட்டத்தில் 'மக்கள் முறைப்பாட்டு மன்றம்' என்ற பெயரில் பல கூட்டங்களை வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு ஏற்பாடு செய்ததாக அறிகிறோம். என்ன நோக்கத்திற்காக இதனை ஒழுங்கு செய்தீர்கள்?**

உண்மையில் ஆறாவது வருடம் முடிவடைந்திருக்கும் இக்காலகட்டத்தில் எமது மக்களின் தற்போதைய பிரச்சினைகள் என்ன என்பதை அறிவதோடு அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் என்ன என்பதையும் மக்களுடன் நடத்தும் கலந்துரையாடல்களின் மூலம் கண்டு கொள்வதே நோக்கமாகும்.

அந்த வகையில் கடந்த ஒக்டோபர் 26, 27ம் திகதிகளில் புத்தளம் மாவட்டத்தில் நாம் நடாத்திய பல கூட்டங்களிலும் மக்கள் பேரார்வத்துடன் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை முன் வைத்தனர். அவற்றுள் ஐந்து விடயங்களை மிக மிக முக்கியமானதாகக் கொள்ளலாம்.

1. அம்மக்கள் தமது தாய மண்ணுக்கு எவ்வாறாயினும் மீளச் செல்ல வேண்டும் என்ற உறுதியான குறிக்கோளுடனேயே இருந்தனர். முகாம் வாழ்க்கையில் அவர்களுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களினால், எவ்வகையான அர்ப்பணங்களுடனாவது மீண்டும் தமது தாயகத்துக்குச் செல்லவே விருப்பமுடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

2. ஆனாலும் அது வரையில் தங்களது 'அகதி அந்தஸ்து' தேசிய சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் அது வரையில் உணவு நிவாரணங்கள் தொடர்ச்சியாக வழங்கப்படுவதுடன், தற்காலிக வாழ்விட வசதிகள், பாடசாலைகள், நீர், மலசல கூடம் மேலும் அதிகரிக்கப்படவேண்டும் என்றும் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

3. மேலும் அண்மையில் புத்தளத்தில் புனர்வாழ்வு அமைச்சரால் திறந்து வைக்கப்பட்ட குடியேற்றம் அகதிகளுக்கான வாழ்விடப் பிரச்சினைக்கான இடைக்காலத் தீர்வுதான் என்பதை தெட்டத்தெளிவாக அகதிகளுக்கும் தேசிய சர்வதேசத்துக்கும் அரசு பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தனர்.

4. இன்னும் அண்மையில் புத்தளத்தில் புனர்வாழ்வு அமைச்சரால் திறந்து வைக்கப்பட்ட குடியிருப்பு வசதிகள் இதுவரையில் இவ்வசதிகள் கிடைக்காத ஏனைய 90% எமது மக்களுக்கும் அது (புத்தளத்திலும் ஏனைய பிரதேசங்களிலும் வாழும்) அளிக்கப்படவேண்டும்.

5. அத்துடன், தம் தாயகத்துக்கு திரும்பிச்செல்லல் என்ற அடிப்படைப் பிரச்சினைக்கு அரசும் ஏனைய சமாதான சக்திகளும் உரிய நடவடிக்கையை எடுப்பதோடு இனப் பிரச்சினை பேச்சுவார்த்தைகளிலும், சமாதானத் தீர்வுக் கூட்டங்களிலும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட தமது பிரச்சினை எடுக்கப்பட்டு பொருத்தமான தீர்வு காணப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தனர். வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு எமது மக்களின் இந்த அபிலாஷைகளை முதலில் ஜனநாயகத்துக்கும், தேசிய சர்வதேச ஸ்தாபனங்களுக்கும், குறிப்பாக ஐ.நா. வின் தலைமைச் செயலகத்துக்கும் கொண்டு செல்வதற்கான நடவடிக்கையை எடுத்து வருகிறது.

**முஸ்லிம்களின் விவகாரத்தில் புலிகளின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறதே. வடக்கு முஸ்லிம்களின் பிரதான அமைப்பாகிய வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு புலிகளுடன் ஏதாவது பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளதா?**

ஒரே வார்த்தையில் கூறுவதானால், புலிகளுடன் இதுவரையில் நாம் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவில்லை. ஆனால், தாங்கள் கூறுவதைப் போன்று முஸ்லிம்கள் தொடர்பாக அவர்களிடத்தில் நல்ல மாற்றம் ஏற்பட்டிருப்பது போல் தென்படுகின்றது. ஆனாலும் அவர்களது இந்த மாற்றங்களில் எமது மக்கள் முன்னர் நம்பிக்கை வைத்தது போன்று தற்போது நம்பிக்கை வைக்கத் தயாராக இல்லை.

குறிப்பாக வடக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றியது இயக்கத்தின் தவறாக அதன் தலைவரே பேட்டியொன்றில் ஒப்புக்கொண்டிருக்கிறார். அவ்வாறாயின் இந்த நிலைப்பாட்டை வெறும் பேட்டியொன்றின் மூலம் வெளிப்படுத்தியதோடு நில்லாமல், வடக்கு முஸ்லிம்களுக்கு அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய அமைப்பாகிய வ.மு.உ.அ. மூலமாவது அவர்கள் எடுத்துக்கூற முன் வந்திருக்கலாம். இது பேச்சுவார்த்தைக்கான வாசல்களை நம்பிக்கையோடு திறக்க வழிவகுத்திருக்கும். அதுபோன்ற விடயங்கள்

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதுவரையில் ஏதுவும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. உண்மையில் புலிகள் முஸ்லிம்கள் மீதும் குறிப்பாக வடக்கு முஸ்லிம்களை வெளியேற்றியதையிட்டும் கவலை கொள்வார்களாயின், முஸ்லிம்கள் மீது அவர்கள் தற்போது கொண்டுள்ள நல்லெண்ணம் உண்மையாயின் அவர்கள் அடையாளத்துக்காகவாவது ஆறு வருடங்களாக வடக்கில் தடுத்து வைத்திருக்கும் அனைத்து முஸ்லிம்களையும் விடுதலை செய்ய வேண்டும். இது அவர்கள் மீதான நம்பிக்கையை வலுப்படுத்தும். கடந்த ஆறுவருடங்களில் தடுத்து வைத்திருக்கும் முஸ்லிம்களின் குடும்பங்கள் இங்கு படும் கஷ்டம் சொல்லில் அடங்காதது. எனவே முஸ்லிம்களின் புனிதமான நோன்பு இன்னும் இருமாதங்களில் வரவுள்ளது. அக்கால கட்டம் முஸ்லிம்களுக்கு புனிதமானது. இதனைப் புலிகளும் அறிவார்கள். தங்களது நல்லெண்ணத்தின் வெளிப்பாடாக அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சகல முஸ்லிம்களையும் விடுவிப்பதன்மூலம் புதிய நம்பிக்கை எமது மக்களுக்கு ஏற்பட வாய்ப்புண்டு. இது நல்லெண்ணத்துக்கு அடித்தளமாகவும் அமையும்.

**அண்மையில் ஜனாதிபதி புலிகளுடன் பேசுவது குறித்து வெளியிட்டிருக்கும் நிபந்தனைகள் பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

இனப்பிரச்சினையை யுத்தத்தின் மூலம் தீர்க்க முடியாது. இது சுமுகமான பேச்சுவார்த்தைகள் மூலம் அதிகாரங்கள் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுவதன் மூலமே சாத்தியமாகும். இன்றைய நிலையில் இனப்பிரச்சினையில் புலிகள் தவிர்க்க முடியாத ஒரு சக்தியாக இருக்கிறார்கள். இதற்கு முன்னரும் பல சமாதானப் பேச்சு வார்த்தைகள் இடம் பெற்று தோல்வியுற்றதை நாம் அறிவோம். எனவே கடந்த காலத்தில் இடம் பெற்ற தவறுகளை இருசாராரும் நன்குணர்ந்து இது போன்ற தவறுகள் மீண்டும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதோடு இருவரும் பரஸ்பரம் பேச்சுவார்த்தைகளில் மாறி மாறி ஆளை ஆள் குற்றம் சாட்டுவதை தவிர்க்கு முகமாகவே இருசாரரினதும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய நடுநிலையான மூன்றாவது தரப்பினரையும் இணைத்து முன்னெடுத்துச் செல்வதே வரவேற்கத்தக்கதாகும். ஆனால் இங்கு ஜனாதிபதி இரு நிபந்தனைகளை முன்வைத்துள்ளார். இந்நிபந்தனைகள் பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டையாகவே அமையும் என்பதே எனது அபிப்பிராயமாகும்.

**தற்பொழுது வடக்கில் மீட்கப்பட்ட பகுதியில் மீளக்குடியமர்த்தும் பணிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. மீட்கப்பட்ட பகுதியில் வாழ்ந்த முஸ்லிம்களை மீளக் குடியமர்த்த வ.மு.உ.அ. ஏதாவது நடவடிக்கைகளை மேற்கொள்கிறதா?**

வடக்கு முஸ்லிம்கள் தங்களது பாரம்பரிய பூமிக்குச் செல்ல வேண்டும். மகிழ்ச்சியுடன் முன்புபோல் தமிழ் மக்களுடன் அந்நியோன்யமாக வாழ வேண்டும். அவர்களது நல்லுறவுகள் மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என்பதே வ.மு.உ.அமைப்பின் எதிர்பார்ப்பாகும்.

ஆனால் வடக்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு பல்வேறு விதமான தடைகள் இருக்கின்றன. அவை வென்றெடுக்கப்படாமல் எமது மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் செல்வதானது எமது மக்களின் எதிர்காலத்தை மிகவும் பாதிக்கக் கூடியதாக அமையுமெனக் கருதும் வ.மு.உ.அ. அவற்றை வென்றெடுப்பதற்கான நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகிறது.

**தடைகள் என்னவென்று கூற முடியுமா?**

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் ஏன் பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்கள்? வடக்கில் முஸ்லிம்களின் வாழ்வுரிமை உட்பட ஏனைய எல்லா உரிமைகளும் ஏன் பறிக்கப்பட்டன? இந்த வினாக்களுக்கு நியாயமான விடையை இதுவரையில் வெளியேற்றியவர்களினால் கூறமுடியவில்லை.

**வடக்குக்கு மீளத் திரும்புவது பற்றி என்ன நிலைப்பாட்டை வ.மு.உ.அமைப்பு கொண்டுள்ளது?**

சம்பந்தப்பட்டவர்கள் இரு முக்கிய உத்தரவாதங்களை சர்வதேச சமாதான அமைப்புக்களின் முன்னிலையில் வழங்குவதன் மூலம் எமது மக்கள் தமது தாயகத்துக்கு மீளச் செல்லலாம் என்று கருதுகிறது.

1. முஸ்லிம் மக்களது சகல உரிமைகளும், வழங்கப்பட்டு அவர்களது அபிலாஷைகள் நிறைவேற்றப்படுவதுடன் அவர்கள் கௌரவத்துடனும் சுய மரியாதையுடனும் வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்துவது.

2. 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் இறுதிப்பகுதியில் வடக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றியது போன்ற ஒரு சம்பவம் இன்னொரு காலத்திலும் எவ்வாறான வடிவங்களிலும் இடம் பெறாது என்பதை உறுதிப்படுவது.

# மூதூர் வைத்தியசாலையில் முறுகல் நிலை

மூதூர் மாவட்ட வைத்திய சாலையில் இரண்டாவது தடவையாக மாவட்ட வைத்திய அதிகாரிக்கும் தாதிமார் கள் மற்றும் சிற்றூழியர்களுக்கும் இடையி லான முறுகல் நிலை உருவாகியுள்ளது. முன்பொரு தடவை பெப்ரவரி மாதத்தில் இவ்வா றான முரண்பாடு ஒன்று தோன்றிச் சீர் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதிலும் அது வெற்றியளிக்காத நிலையி லேயே இன்றைய முறுகல் நிலை உருவாகி யுள்ளது.

இதனால் 07.10.1996 தொடக்கம் ஏழு தாதி உத்தியோகத்தர்களும் ஐந்து சிற்றூழிர்களும் கடமைக்குச் செல்ல மறுத்து சுகவீன விடுமுறையில் நின்றுள்ளார்கள். இவர்கள் இரு சாராரும் இழுபறியால் மூதூர்ப் பிரதேச மக்களுக்கான வைத்திய சேவை ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

இந்த முறுகல் நிலைக்கு மாவட்ட வைத்திய அதிகாரி அனஸ் சொல்லும் ஒரே காரணம் ''நான் நேர்மையாக இருக்கிறேன். கடமையில் கண்ணும் கருத்துமாக இருக்கி றேன். என்னைப்போல் இவர்களும் நேர் மையாகவும் கடமையுணர்வுடனும் பணி யாற்றினால் பிரச்சினை வரக் காரணமில் லையே!'' என்பது தான்.

ஆனால் வைத்திய அதிகாரி மேல் பல குற்றச்சாட்டுகள் பல சுமத்தப்பட்டிருக் கிறது. ஊழியர்களால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள்;

1) தாதிமார்களைப் பொதுமக்கள் முன்னலையில் மரியாதைக் குறைவாக நடத்துகிறார்.

2. இரவு வேளைகளில் பெண்தாதிமார் ஓய்வெடுக்கும் அறைகளை ஜன்னலூ டாகப் பார்த்து வந்தார்.

3. கையாட்களை வைத்து ஊழியர்களை மிரட்டுகிறார்.

4. இரவு வேளைகளில் தாதியர் விடுதி களுக்குக் கல்வீச்சு நடைபெறக் காரண மாயிருக்கிறார்.

5. தாதியர் விடுதிக்கான குடிநீர் வழங்கலை நிறுத்தியுள்ளார்.

பொதுமக்கள் சார்பில் மூதூர் கிராமமோதய சபைத்தலைவரும் பாலநகர் என்ற இடத்தைச் சேர்ந்த பிரஜையொருவரும் பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி மேலிடத் துக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

வைத்திய அதிகாரி அனஸ் ஒழுங்கீனங்கள் காரணமாக ஜூலை மாத ஆரம்பத்தில் மாகாண சுகாதார சேவைகள் நிர்வாகத்தால் பதவி வெற்றாக்கல் செய்யப்பட்டார். எனினும், இவர் அந்த உத்த ரவுக்கு பணிய மறுத்ததோடு தனது கடமைகளையும் பொறுப்புகளையும் பாரமளிக்கத் தவறியதால் அனஸின் முறையற்ற நடத்தை குறித்து மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் டபிள்யு. ஏ.திரேசா திருகோணமலை பொலிஸ் அத்தியட்சகர் மூதூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோருக்கும் கடிதங்களை அனுப்ப வேண்டியிருந்தது.

இதைத்தொடர்ந்து வைத்திய அதிகாரி துஷ்யந்த குமார் அனஸின் கடமைகளை ஏற்பதாக இருந்தது. தொலைபேசி மூலம் துஷ்யந்தகுமார் பயமுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவர் மூதூர் செல்ல மறுத்து விட்டார். இதன்பின் செல்வி பிருந்தா இராமநாதன் அனுப்பிவைக்கப்பட்ட போது அவரும் பயமுறுத்தப்பட்டிருக்கிறார். பின்னர் சென்ற ரங்கநாதன் என்பவருக்கும் இதே கதி.

இதற்கிடையில் கொழும்பு சுகாதார அமைச்சு அதிகாரிகளின் உதவியுடன் மாகாணச் சுகாதார அமைச்சுச் செயலாளரின் பதவி வெற்றாக்கல் உத்தரவை ரத்துச் செய்து மீண்டும் மூதூர் வைத்திய அதிகாரி தாமே என்று ஆஸ்பத்திரிக்கே வந்து விட்டார். ஆனால் வடகிழக்கு மாகாண சுகாதார அமைச்சோ இவரது மீள் நியமனத்தை ஏற்க மறுத்துள்ளது.

''பதவி வறிதாக்கல் செய்யப்பட்ட ஒருவர் விசாரணைகளின் பிறகே பதவிக்கு வர முடியும். ஆனால், பதவிக்கு வந்த முறை சட்ட விரோதமானது'' என்று கூறுகிற மாகாண சுகாதார அமைச்சு அதிகாரிகள் ''எங்கள் நிர்வாக ஒழுங்கு முறைகளில் தலையிட கொழும்பு சுகாதார அமைச்சு அதிகாரிகளுக்கு எந்த உரிமை இருக்கிறது?'' என்றும் கேட்டிருக்கிறார்கள்.

அனஸ் அவர்களோ எதற்கும் கவலைப் படாமல் மூதூர் வைத்திய அதிகாரி நானே என்று கூறுகிறார். ஆனால், மாகாண அமைச்சோ ''இல்லவே இல்லை'' என்று கூறுகிறது.

மூதூரில் கடமை புரியும் தாதி உத்தியோகத்தர்களான ரி. கனகசூரியம், எச்.எம். ஹிரையத்துல்லா, எஸ். சலீம், செல்விகள் எஸ்.பிலோமினா, ஜீ.என். ஞானரதி, ரி. ஜெயந்தி, எஸ். மனோன்மணி ஆகியோர் ''எங்களுக்கு அனஸ் செய்த அநியாத்தை அமைச்சர் பௌசியிடம் நேரடியாகக் கொழும்பில் வைத்துக் கூறினோம். மாகாண நிர்வாகத்தில் தலையிடத்தான் விரும்பவில்லை என்றும் மாகாண அமைச்சுச் செயலாளரிடம் கதைக்கும் படியும் கூறினார். இப்போது எந்த முறையில் அவரது அதிகாரிகள் தலையிட்டார்கள்?'' என்று கொதித்துப் போயிருக்கிறார்கள்.

உடனடியாக அனஸின் ஒழுங்கீ னங்கள் சம்பந்தமாகப் பூரண விசாரணை யொன்று நடத்தப்படவேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் 02.11.1996 திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் வடக்கு கிழக்கு ஆளுநரைக் கோரியுள்ளார். இதன் பிரதிகள் தொடர்புடைய உயரதிகாரிக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

பிந்திய செய்திகளின்படி மூதூர் வைத்தியசாலை ஊழியர்கள் கடந்த திங்க ளன்று மாகாண சபைத் தலைமைச் செயலர் ஜீ. கிருஷ்ணமூர்த்தியைச் சந்தித்துத் தங்கள் குறைகளை முறையிட்டதோடு தங்களுக்கு தகுந்த முடிவு கிடைக்கும் வரை தலைமைச் செயலர் அலுவலகத்தை விட்டு வெளியேறப் போவதில்லை என்றும் தெரிவித்தனர். உடனடியாக கொழும்பு சுகாதார அமைச்சு அதிகாரிகளுடனும் மாகாண சுகாதார அமைச்சு அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்ட தலைமைச் செயலர் மிக விரைவில் நல்லதொரு முடிவு கிடைக்கும் என உறுதியளித்ததன் பேரில் மாலையில் அவர்கள் கலைந்து சென்றனர்.

விவேகி

# புலிகளின் கடிதம்

நலிவுறும் முஸ்லிம் தமிழ் சமூகங்களுக்கிடையேயான நல்லுறவு என்ற தலைப்பில் தமிழ் - முஸ்லிம் ஐக்கியத்தை வலியுறுத்தி விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை அரசியற் துறைப் பொறுப்பாளர் துரை அவர்களால் பள்ளிவாசல் சம்மேளனங்களுக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. அக்கடிதத்தின் முக்கிய பகுதிகள் வருமாறு;

சில நாட்களுக்கு முன் மருதமுனையில் நிகழ்ந்த சம்பவங்கள் பாரதூரமும், துயரமும் ஆனவை. ஸ்ரீலங்கா அரச படைகளில் இணைந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகச் செயற்படும் எவரும் இன, மத, பால், பிரதேச வேறுபாடற்று எம்மால் தண்டிக்கப்படும் சம்பவங்கள் இங்கு எவருக்கும் புதிதல்ல. இருந்தும் மருத முனையைச் சேர்ந்த ஊர்க்காவற் படையினரை நாம் தண்டித்தபோது அவர்கள் முஸ்லிம்களாக இருந்த தைப் பயன்படுத்தி அரச பயங்கரவாதமும், அதன் வால் பிடிப்போரும் இனத்துவேசத்தைக் கக்கிய போது அதில் முஸ்லிம் இளைஞர் மதி மயங்கினர் வன்செயலில் இறங்கினர்.

கடந்த எண்பதுகளில் கூட இதேபோன்றதொரு நிலையை அரச திட்டமிட்டு ஏற்படுத்தியது. மத்திய கிழக்கு முஸ்லிம்களின் இரத்தத்தினால் கறைபடிந்த வரலாற்றையுடைய புலனாய்வு அமைப் பொன்றின் ஆலோசனையின் பேரில் எம்மிரு இனங்களுக்கிடையேயும் விரோதத்தை உருவாக்கியது. இரு இனங்களும் அந்த மோசவலையில் வீழ்ந்து விட எமது தென் தமிழீழ பிரதேசமே அல்லோல கல்லோலப்பட்டது உங்களுக்கு நினைவி ருக்கலாம். அதைத் தொடர்ந்து தொண்ணூறுகளில் ஆரம்பத்தில் கூட அரச சதிமேல் சதிதீட்டி மோசம் செய்தது. ஆனால் இன்றைய நிலை அப்படியல்ல. யுத்த அனுபவங்கள் இரு சமூகங்களையும் தெளிவாகவும் தீர்க்க தரிசனமாகவும் சிந்திக்கத் தூண்டியுள்ளன. மேலும் வளர்ச்சியுறும் எமது போராட்டமானது சதிகளை முன் கூட்டியே அறிந்து அவற்றைக் கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பெற்று வருகிறது. இனிமேலும் இது போன்ற போராட்டத்தை நலிவுறுத்தும் கிளர்ச்சிகளை சகிக்கவோ அனுமதிக்கவோ முடியாதென் பதால் இருதரப்பினரும் சந்தேகங்களை நேரடியாகப் பேசித் தீர்ப்பதன் மூலம் ஆக்க பூர்வமான முடிவுகளுக்கு வரமுடியும் என்பதே எமது கருத்தாகும்.

இதற்கிடையில் ஊர்காவற் படையென்ற பெயரில் ஊர்ச்சுற்றித் திரியும் இளைஞர் தங்களின் எதிர்கால நிலை யென்ன, இந்தப்போரில் தாங்கள் ஆற்றும் பங்கு என்ன என்பதை சிந்தித்துப் பார்க்கின்றார்களா? தங்கள் சகோதர இனத்திற்கு எதிரான அடக்குமுறை யுத்தத்தில் அவர்கள் நிர்ப்பந்தமாகப் புகுத்தப்பட்டு ஸ்ரீலங்கா அரச படையினரால் முன்னணிக் காவல ரணாகப் பயன்படுத்தப்படுவது அவர்களுக்கு புரியுமா?

ஊரைக் காக்கின்றோம் எனக் கூறிக் கொண்டு தெருவிலே போகும் நாயை செவியிலே பிடித்து இழுப்பதைப் போல துப்பாக்கி ஏந்துவதன் மூலம் சண்டையினை வாசலுக்கு வரவழைக்கும் அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் ஸ்ரீலங்கா படையின் யுத்த தந்திரோபாயத்தில் தாங்கள் பலியாகிக்கொண் டிருப்பதை உணர்வார்களா? உங்களைப் போன்ற பெரியவர்களாலேயே இவை அவர்களுக்கு உரைக்கப்பட வேண்டும். உணர்த்தப்பட வேண்டு மென்பதே எமது வேண்டுகோள்.

மொழி, பிரதேச பொருண்மிய அடிப் படைகளில் பாரம்பரியமும் தவிர்க்க முடியாததுமான பிணைப்பைக் கொண்டுள்ள எம்மிரு சமூகங்களுக்கிடையே எழும் முரண்பாடுகளானவை வரலாற்றுத் துன்பியல் வடுக்களேயன்றி வேறல்ல. இவை தொடருமிடத்து எமது இளஞ்சந்ததியினரிடையே பகைமையுணர்வு வளர்க்கப்படும் எனவும் அவர்கள் காலாகாலத்திற்கும் கசப்புணர்வு மிக்க சூழ்நிலைகளினுள் திணிக்கப்படுவர் என்பதையும் கூறத் தீர்க்கதரிசிகள் தேவையில்லை. ஆனால் முஸ்லிம்களினால் பெருமளவில் நம்பப் படுகின்ற சில அரசியல் தலைமைகள் அதை உணர்ந்து கொள்வதாகத் தெரியவில்லை யென்பது எமக்கு வியப்பைத் தருகிறது. பிணக்குகளின் பின்விளைவுகளை நன்கறிந்தும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினர் குறுகிய லாபம் கருதி இனத்துவேச விதைகளை வீசி வாக்குச் சீட்டுகளை அறுவடை செய்யும் அரசியல் முறையைப் பின்பற்ற காரணம் என்னவென்பது எவருக்கும் புரியாத புதிராகவுள்ளது. தாங்கள் யாருக்காக உழைக்கின்றோம் என்று சொல்கிறார்களோ அதே முஸ்லிம் மக்களுக்காக ஒரு யுத்தமும், பகைமையும், கசப்பும் நிறைந்த புதைகுழி எதிர்காலமொன்றை அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை உங்களைப் போன்ற பொது நல நோக்குடைய தலைமையாளர்கள் உணர வேண்டும், உணர்த்த வேண்டும்.

இஸ்லாமியத்தின் பெருங்கொடையான புனித குர்ஆனைப் பெற்றுத்தந்தவரும் பல யுத்தங்களை வழி நடத்தியவருமான அண்ணல் முகம்மது நபி (ஸல்) அவர்கள் பிற மதத்தார் சார்பாகக் கொண்டிருந்த கருத்துக்கள் பலரை ஈர்க்கவும் பலரால் மதிக்கப்படவும் கூடியதாக இன்றும் இருப்பது நாமறிந்த ஒன்று. அவர்கள் வழியிலேயே இன்றும் பல முஸ்லிம் நாடுகள் தமது இறைமைக்கு அச்சுறுத்தலாக எழும் சக்திகளை எதிர்த்துப் புனித யுத்தம் நிகழ்த்தி வருகின்றன. ஆனால் அவ்வாறான முஸ்லிம் விரோத சக்திகளுடன் சிங்கள அரசாங்கங்கள் இராணுவ மற்றும் ராஜ தந்திர உறவுகளை வலுப்படுத்துவதிலிருந்து அனைத்துலக முஸ்லிம்கள் சார்பாக ஸ்ரீலங்கா அரச கொண்டுள்ள அகக் கருத்து என்ன என்பதை எவரும் ஊகித்தறியலாம். இத்தகைய கபட அரசுடன் சில முஸ்லிம் களும் சேர்ந்து போகவும் மார்க்கத்திற்குப் புறம்பான வழியில் அவர்களைப் போன்றே சிறுபான்மையினராகிய தமிழருக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டிருப்ப தும் துரதிருஷ்டவசமானது.

இன்று எமது வீரர்கள் விடுதலைக்காக என்னென்ன தியாகங்களைச் செய்கின்றார்களோ அதே தியாகங்களை உங்கள் சகோதரர்களான மத்திய கிழக்கு முஸ்லிம்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டு மென விரும்புகின்றோம். இதைவிடவும் பல்வேறு கோணங்களில் ஆராயுமிடத்து தமிழ் முஸ்லிம் இனங்கள் இரண்டும் தவிர்க்க முடியாத இணைக்கப்பட்டிருப் பதால் அவ் இரு இனங்களுக்கும் இடையில் ஏற்படக்கூடிய பிரிவினையானது வலக் கைக்கும் இடதுகைக்கும் இடையில் ஏற்படும் பிணக்கைப் போன்றது என்பதைக் கருத்திற் கொண்டு தங்கள் நல்லெண் ணத்தை தாங்கள் சார்ந்துள்ள சமூகத்தினிடையே வலியுறுத்துவதுடன் இது விடயமாக எம்முடன் நேரடியாகவோ கடிதம் மூலமோ தொடர்பு கொண்டு தங்கள் நல்லிணக்கத்தை அறியத்தரும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அரசின் தீர்வுப் பிரேரணையின் எதிர்காலம் ஒரு மீளாய்வு



ச.பாலகிருஸ்ணன்

1995ம் வருடம் ஒகஸ்ட் மாதம் இலங்கையின் இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான தற்போதைய அரசின் நிலைப்பாடாக கூறி சில பிரேரணைகள் ஜனாதிபதி சந்திரிகாவின் சார்பில் அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் அவர்களால் முன்வைக்கப்பட்டது. இப்பிரேரணைகள் ஒரு முழுமையான அரசியல் யாப்பாக முன்வைக்கப்படவில்லை. மாறாக புதிய அரசியற் கட்டமைப்பை ஏற்படுத்து வதற்குரிய தேவையான அம்சங்களில் சிலவற்றை மட்டுமே இப்பிரேரணைகள் உள்ளடக்கியிருந்தன. இவை முழுமை யான விளக்கங்களுடன் முன்வைக்கப் படாமல் ஒரு சாராம்சமான பிரேரணை களாகவே முன்வைக்கப்பட்டன. எப்படி யிருப்பினும் இதன் உள்ளடக்கமானது ஒரு சமஷ்டி அரசியல் யாப்பின் அடிப் படையைக்கொண்டதாக அமைந்திருக் கிறது என்பதோடு இது தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பெரும் வரவேற்பை யும் பெற்றது. இன முரண்பாட்டிற்கு ஐக்கிய இலங்கையின் வரையறைக்குள் முறையான அரசியற் தீர்வை எதிர் பார்க்கும் எவராலும் முழுமையாக நிராகரிக்க முடியாத பல நல்ல அம்சங களை இப்பிரேரணைகள் உள்ளடக்கி யிருந்தன என்பதை எவரும் மறுக்க முடியாது.

த.வி. புலிகள் கூட இப்பிரேரணை அவர்களுக்கு உத்தியோக பூர்வமாக அனுப்பி வைக்கப்படாவிட்டாலும் இது பற்றிய கருத்தை அவர்களது ஆங்கிலப் பத்திரிகையில் வெளியிட்ட போது ''இவை தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் போதுமானவையாக அமையவில்லை. எனவே இப்பிரே ரணையை நம்பி போராட்டத்தைக் கைவிடுவது தற்கொலை செய்து கொள் வதற்கு சமமாகும்'' எனக் குறிப்பிட்டுள்ள மையையும் இங்கு குறிப்பிடல் வேண்டும். சிங்களப் பேரினவாத எதிர்ப்புகளுக்கு மத்தியில் இவ்வகையான ஒரு பிரே ரணையை அரசு வெளியிட்ட சம்பவ மானது இனமுரண்பாட்டை அரசியல் ரீதியில் தீர்த்து வைப்பதற்கான அரசின் கடமைப்பாடு பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்தவே செய்தது. அதுவும் அரசு டனான பேச்சுவார்த்தைகளை மிகவும் மிலேச்சத்தனமான வகையில் புலிகள் முறித்துக் கொண்டதன் விளைவாக இராணுவத்தினதும், இனவாதிகளினதும் கைகள் ஓங்கியிருந்த ஒரு அரசியற் சூழ்நிலையில் அரசானது தன்னிச்சையாக முன்வைக்கூடிய அதி சிறந்த பிரேரணை களாக இவற்றைக் கருத முடியும். இக் கூற்றானது இப்பிரேரணை போதுமானது என்பதையோ அல்லது மேலும் செழு மைப்படுத்தத் தேவையற்றது என்பதை யோ கருத்தாகக் கொண்டதல்ல.

இது மேலும் செழுமைப்படுத்தப்பட வேண்டுமேயானால் ஒரு யுத்தமற்ற சூழ் நிலையும், புலிகள் உட்பட தமிழர்களின் பரந்துபட்ட பங்கு பற்றுதலும் அவசியமாகும்.

அரசு இப்பிரேரணையை வெளியிட்டதன் உண்மையான நோக்கம் என்ன என்பதை இன்று வளர்ந்து வந்துள்ள அரசியற் பின்னணியுடன் விமர்சன ரீதியாக மீளாய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அரசினால், இப்பிரேரணைகள் தயார் செய்யப்பட்டாலும் முதலாவதாக இவை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது வெளிநாட்டுத் தூதுவர்களுக்கேயாகும். அதன் பிறகுதான் இவை பத்திரிகைகள் மூலமாக மக்களுக்கு அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டன. ஆனால் இதன் பிரதிகளை எவரும் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்புகள் இருக்கவில்லை. இப்பிரேரணைகளைப் பத்திரிகையாளர் களுக்கு வழங்கினாலும் இதை மக்கள் முன் எடுத்துச் செல்லவோ அல்லது இன வாதிகளின் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கவோ அரசு எவ்வித முயற்சி யையும் மேற்கொள்ள வில்லை. மாறாக அம்முயற்சியில் அரசுடன் ஒத்துழைக்க முன்வந்த அரச சார்பற்ற இயக்கங்களின் முயற்சியைத் தோல்வியடையச் செய்வ தற்கு உடந்தையாக அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் வெண்தாமரை இயக்கத்துடன் சேர்ந்து செயற்பட்ட சம்பவத்தையும் நினைவு கூர்வது மிகவும் பொருத்தமானதாகும்.

இப்பிரேரணை உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்ததோடு அரசுக்கு உலக நாடுகளின் பாராட்டுதல்களையும் ஆதரவு களையும் பெற்றுக்கொள்ள உதவின. ஏற்கெனவே உலக நாடுகள் பலவற்றின் வெறுப்புக்கு ஆளாகியிருந்த புலிகள் அரசுடனான பேச்சுவார்த்தை களை முறித்துக் கொண்ட முறையானது அவர்களை உலகரீதியில் தனிமைப் படுத்தியிருந்த ஒரு சூழ்நிலையில் இப் பிரேரணைகளானது புலிகளுக்கு எதிரான நடைமுறைகளில் அரசு தீவிரமாக இறங்குவதற்குத் தேவையான சர்வதேச ஆதரவைப் பெற்றுத்தந்தது என்றால் தவ றாகாது. இதன் விளைவு தான் வெண் தாமரை இயக்கத்தின் உருவாக்கமும் ரிவிரச இராணுவ நடவடிக்கைகளின் மூலம் யாழ் மக்களின் கலாசார படுகொலைக்கு வழிவகுத்த இலங்கை இராணுவத்தின் சாதனையாகும்.

**சட்ட நகல்:**

இத்தகைய விதத்தில் புலிகளுக்கு எதிரான போர் என்று கூறி முழுத் தமிழினத்திற்கும் எதிரான பழிவாங்கல் நடவடிக்கையின் அரசியல் விளைவை அரசு இவ்வருடம் ஜனவரி மாதம் வெளியிட்டுவைத்த சட்ட நகல் பாணியி லான பிரேரணையில் இனம் காணக் கூடியதாக இருந்தது. யாழ் நகரை நோக்கிய இராணுவத்தின் படையெடுப்பு முயற்சியின் போது, முன்பு முஸ்லிம் மக்களை அவர்களது பாரம்பரியப் பிரதேசமான யாழ்ப்பாணத்தில் இருந்து விரட்டியதைப்போல வலிகாமம் பகுதி யில் வாழ்ந்த தமிழர்களை விரட்டியடித்த தன் மூலம் இராணுவம் யாழ் நகரை வந்தடைய சுலபமான வழியை ஏற்படுத்திக்கொடுத்தது புலிகள் இயக்கம். இதன் மூலம் இராணுவம் யாழ் நகரைச் சின்னாபின்னமாக்கி ஆக்கிரமித்துக் கொண்ட சம்பவமானது இந்த யுத்த வரலாற்றில் இலங்கை இராணுவத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகக் கொண்டாடப்பட்டது. ஆனால் இந்த யுத்த வரலாற்றில் இதுவரை எவருக்குமே நிரந்தர வெற்றியோ, நிரந்தரத் தோல்வியோ கிடைத்ததில்லை என்பதுதான் உண்மை. வெற்றியும் தோல்வியும் மாறி மாறிச் சுழன்று கொண்டு செல்லும் ஒரு சுழற்சிவட்டமாகும். உதாரணமாக யாழ் நகரைக் கைப்பற்றுவதற்கு இழக்கப்பட்ட இராணுவத்தினரைவிட யாழ்நகரை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான முயற்சியில் இழந்த இலங்கை இராணு வத்தின் எண்ணிக்கை அதிகமானது என்பதிலிருந்து இவ்வுண்மை தெளிவாகின்றது.

இந்த ரிவிரச படையெடுப்பின் வெற்றி யாக கருதப்படும் சம்பவத்தின் மிகவும் முக்கியமான அரசியல் நிகழ்வு என்ன வென்றால், சென்ற ஆண்டு ஒகஸ்ட் மாதம் வெளியிடப்பட்ட பிரேரணை ரிவிரசவின் பின் சட்ட நகலாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு முன் வைக்கப்பட்ட போது அது சிங்கள பௌத்த, இனவாத நிலையை நோக்கிய சாய்வைக் கொண் டுள்ளதோடு பௌத்த மேலாதிக்கத்தை அங்கீகரிக்கின்ற சரத்துக்கள் இப்பிரே ரணையினுள் புகுத்தப்பட்டுள்ளமை யேயாகும். ஒகஸ்ட் பிரேரணையில் உள்ளடக்கப்படாத இந்த பௌத்த மேலாதிக்கத்தை உத்தரவாதம் செய்யும் பிரேரணைகளை அவசர அவசரமாக சட்டநகலுக்குள் புகுத்துவதற்கான தேவை எப்படி ஏற்பட்டது? இது யாருடைய சிபாரிசின் பெயரில் மேற்கொள்ளப் பட்டது என்பது மிகவும் முக்கியமான விடயமாகும்.

இன முரண்பாட்டுத்தீர்வின் முக்கிய அம்சங்களான பிராந்திய அதிகார அலகு, மத்திய அரசுடனான கூட்டாட்சி, தமிழர் - முஸ்லிம் உறவு, மலையக மக்களின் எதிர்காலம் பற்றிய பல்வேறு விடயங் களை எல்லாம் புறக்கணித்து விட்டு அல்லது தாமதிக்கவைத்து விட்டு விட்டு பேரினவாத அடக்கு முறையின் சின்ன மாக உருவெடுத்துள்ள பௌத்த மேலா திக்கத்தை அங்கீகரிக்கும் சரத்தை முன் வைத்தமை இவ்வரசு தமது உள் நோக்கத்தை வெளிகாட்டும் செயலாகவே அமைந்துள்ளது. இந்நிலைமையானது புலிகளை இல்லாது ஒழித்து விட்டால் தமிழர்களின் உரிமைக்கான உத்தரவாதம் என்ன என்ற தமிழ் மக்களின் ஒரு பகுதியினரின் சந்தேகத்தை நியாயப் படுத்தும் தன்மையை ஏற்படுத்தியுள்ளது. மறுபுறத்தில் புலிகளைத் தோல்விய டையச்செய்து விட்டால் தாம் நினைத்த வகையிலான தீர்வைத் தமிழ் மக்கள் மீது திணித்து விடலாம் என்னும் பெரும் பான்மை இன ஆதிக்க நிலையை அரசு கொண்டுள்ளமையையும் காணக் கூடியதாக இருக்கின்றது.

**தமிழர்களும் பிரேரணைகளும்:**

கடந்த வருட ஒகஸ்ட்டில் அரசு வெளியிட்ட பிரேரணையை வரவேற்ற தமிழ் அரசியல் கட்சிகள் இதில் காணப் படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தைக்கான கோரிக்கையை முன் வைத்தன. ஆனால் இன்று வரை அதற் கான அவகாசம் கொடுக்கப்படவில்லை. மாறாக அவர்களின் இணக்கப்பாடற்ற வகையில் தான் அரசு இவ்விடயத்தில் செயற்பட்டு வருகிறது. யுத்தத்தை மீண்டும் ஆரம்பித்ததன் விளைவாக புலிகளை பழிவாங்குவதற்காக புலிகளு டன் பேச்சு வார்த்தை நடத்தாமல் காலத்தை ஒட்டுவது ஒரு விடயம். ஆனால் அரசுக்குப் பல வழிகளிலும் ஒத்துழைப்பாக நின்று வரும் தமிழ் அரசியல் கட்சிகளுடன் கூட இணக்கப் பாட்டை ஏற்படுத்திக் கொள்ளாது. இதன் மூலம் தமிழர்களும் பங்குபற்றக்கூடிய இணக்கப்பாட்டுடனான அரசியல் நடைமுறைக்கான தமது கடமைப் பாட்டை உத்தரவாதப்படுத்துவதன் மூலம், பெரும்பான்மை இன மேலாதிக் கத்தை தவிர்த்துக் கொள்வதற்கான தமது விருப்பத்தின் அடிப்படையில், தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறாமல் தாமாகவே படிப்படியாக பிரேரணையின் தரத்தைக் குறைத்து இனவாத மயப் படுத்தும் செயலானது இவ்வரசின் நேர்மைத்துவம் பற்றிய சந்தேகத்தை வலுப்படுத்தவே செய்கின்றது. இது தொடர்பாக கேள்விகள் எழும் போதெல்லாம் தான் கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்களுடன் கலந்தா லோசித்து முடிவெடுப்பதாக சில சிங்கள புத்திஜீவிகளுக்கு அடிக்கடி அமைச்சர் ஜீ.எல்பீரிஸ் அவர்கள் கூறிவருவதாகவும் செய்திகள் அடிபடுகின்றன. அப்படியா னால் கலாநிதி திருச்செல்வம் அவர்கள் அங்கம் வகிக்கும் த.வி.கூட்டணியின் நிலைப்பாடு முரணாக அமைந்துள்ளதன் நோக்கம் என்ன என்ற கேள்வியும், நீலன் அவர்கள் எந்த அளவுக்கு இந்த நாட்டின் அரசியலை பிரதிபலித்து செயற்படக்கூடி யவர் என்ற கேள்வியும் எழத்தான் செய்கிறது. எனினும் இவ்வரசின் தமிழா கள் தொடர்பான இதுகால நடவடிக் கைகள் தொடர்பாக தமிழ் அரசியற் கட்சிகள் மேற்கொண்டு வரும் சந்தர்ப் பவாத, சுயநலப்போக்கான நடவடிக கைகள் மிகவும் கவலைக் கிடமானது மட்டுமல்ல, நகைப்பிற் கிடமானதாகவும் அமைந்துள்ளது.

**பிரேரணை யாருடையது?**

அரசின் பிரேரணை எனக்கருதப்படும் இப்பிரேரணை யாருடையது என்பதுவும் ஒரு முக்கிய விடயமாகும். இந்த அரசில் அங்கம்வகிக்கும் அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டுடனான பிரேரணை அல்ல இது. குறைந்தபட்சம் அமைச் சரவையினால், முழுமையாக அங்கீகரிக் கப்பட்ட பிரேரணையும் அல்ல. ஸ்ரீ.ல.சு.கட்சியும் உத்தியோகபூர்வமான அங்கீகாரத்தைக் கொண்ட பிரேரணை களும் அல்ல. முதல் பிரேரணை வெளி யிடப்பட்டு ஒரு வருடகாலத்திற்கும் மேலான காலம் விரயப்படுத்தப் பட்டுள்ளதேயொழிய, மேற்கூறிய இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான எதுவித நடவடிக்கைகளையும் ஆக்க பூர்வமான வகையில் இதுவரை இவ்வரசு மேற்கொண்டதற்கான சான்றுகள் ஒன்றும் இல்லை.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வுக்கான பிரேரணைகள் என்றால் இன்று வரை குறைந்தளவு பாராளு மன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் கட்சிகளுடனாவது ஒரு இணக்கப் பாட்டை ஏற்படுத்திக் கொள்வதற்கான வேண்டுகோள்களையெல்லாம் இவ்வரசு நிராகரித்தே வந்துள்ளது. அரசு போன்ற பொது அமைப்புகள் எடுக்கும் நடவடிக் கைகள் அவ்வரசின் கூட்டு முயற்சியாக அமையாமல், அவ்வரசில் அங்கம் வகிக்கும் நபர்களின் தனிநிகழ்ச்சியாக அமையும்போது அந்நபர்களின் விருப்பு, வெறுப்பு, லாப, நட்டம், கருத்தியல் நிலைப்பாடு போன்றவற்றின் தாக் கத்திற்கு உட்படும் என்பதற்கு ஜனாதிபதி தேர்தல் வெற்றியின் பின்பு புலிகளுட னான பேச்சுவார்த்தைகளின் போது ஜனாதிபதி சந்திரிகா நடந்து கொண்ட விதம், புலிகளுடனான கோபத்தை தணித்துக்கொள்வதற்காக முழுத் தமிழினத்தையும் கூட்டுப்பழிவாங்கும் பாணியில் அமைந்த அவரது இராணு, இனவாத, நடவடிக்கைகள் சிறந்த சான்றுகளாக அமைந்துள்ளன. இந்த ஒகஸ்ட்பிரேரணையானது ஜனவரி மாத சட்டநகலாக வடிவம் பெற்றபோது அதன் உள்ளடக்கத்தில் ஏற்பட்ட கருத்தியல் மாற்றம் சிங்களப் பௌத்த சாய்வு நிலையை கொண்டிருப்பதில் இருந்து இவ்வுண்மையை தெரிந்து கொள்ளலாம். அரசின்பிரேரணை விவகாரத்தின்பிரதம நடிகர்களாகத் திகழும், ஜனாதிபதி சந்திரிகாவினதும், அமைச்சர் ஜீ.எல்.பீரிஸினதும் இனப்பிரச்சினைத் தீர்விற்கானகருத்தியல் நிலைப்பாட்டை இதன் மூலம் தெளிவாக இனம் காணக்கூடியதாக அமைந்துள்ளது.

இத்தகைய பௌத்த மேலாதிக்கத்தை உத்தரவாதப்படுத்துகின்ற அரசியல் கட்டமைப்பை எந்தத் தமிழரும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்பதுவும், பல்லினப்பாங்கான முழுமையான அங்கீகரிக்கின்ற இணக்கப்பாட்டுடனான ஜனநாயக நடைமுறையை உறுதி செய்கின்ற மதச்சார்பற்ற அரச கட்டமைப்பின் மாநில சுயாட்சியையும், மத்தியில் கூட்டாட்சியையும் ஏற்றுக் கொள்கின்ற ஒரு அரசியல்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு தான் தமிழ் மக்களின் அங்கீகாரமும், ஆதரவும் கிடைக்கும் என்பதுவும், இதன்மூலமே இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கு சவாலாக அமைந் துள்ள பேரினவாதத்தையும், தனிநாட்டு கோரிக்கையையும், விடுதலைப் புலி களின் ஆயுதப்போராட்டத்தையும் தோல்வியடையச் செய்யக்கூடிய நிலைமையையும் ஏற்படுத்த முடியும். இதற்கு தீர்வுப் பிரேரணைக்கான தமிழர் களின் இணக்கமும், அவ்வகையில் இணக் கம் காணப்பட்ட தீர்வுப் பிரேரணை களையே (சிங்கள) மக்கள் முன்வைத்து ஆதரவுதிரட்டுவதும் அவசியமாகும்.

**பாராளுமன்றத் தெரிவுக்குழு:**

அரசியல்யாப்பு சீர்திருத்தம் தொடர்பாக நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவானது எவ்விதமான பிரயோசன மான பணியையும் செய்துள்ளது என்று கூறமுடியாத அளவுக்கு செயல் இழந்துள் ளது என்று தான் கூற வேண்டும். இக் குழுவின் தலைமைப்பதவியை ஏற்றுள்ள அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் அவர்கள் ஐ.தே.கட்சியுடன் நல்லுறவையும் ஒத் துழைப்பையும் வளர்க்க முயலுவதாகவும் காட்டிக் கொண்டாலும், ஐ.தே.கட்சிக் கெதிராக போர்க்கொடி ஏந்தி செயற்படும் ஜனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கை யானது இவ்வித ஒத்துழைப்புக்களை சீர்குலைப்பதாகவே இதுவரை அமைந் துள்ளது. ஜனாதிபதியின் நடவடிக்கை யானது இனமுரண்பாட்டிற்கு அரசியல் தீர்வை அடைவதற்கு தேவையான ஐ.தே.கட்சியை புறக்கணிப்பதன் மூலம் இந்நடவடிக்கையை தோல்வியுறச் செய தவற்கானதிட்டமிட்டமிட்ட செயற்பாடா என்றும் சந்தேகத்தை ஏற்படுத்தச் செய்கின்றது.

விடுதலைப் புலிகளினதும் ஐ.தே.கட்சி யினதும் பங்குபற்றுதலற்ற நடைமுறை யானது மேலதிக முரண்பாடுகளுக்கு வழிவகுக்கும் என்பது சொல்லித்தெரிய வேண்டிய விடயம் அல்ல. யுத்தத்தை நிறுத்துவது என்பது அரசின் அடக்கு முறை நடவடிக்கைகளையும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளையும் நியாயப் படுத்தத் தேவையான சூழ் நிலைகளை இல்லாது செய்து விடும் என்று அரசு கருதலாம். அதனால் யுத்தத்தை செய்து கொண்டு கூட புலிகளுடன் அரசியல் தீர்வுபற்றி பேச்சுவார்த்தை நடத்த சந்தர்ப்பம் இருக்கின்றது என்பதுவும், புலிகளுக்கு அரசின் பிரேரணையை அனுப்பிவைப்பது யுத்தம் ஒருதடையாக அமையமுடியாது என்பதுவும் புதிய விடயங்கள் அல்ல. புலிகள் பேச்சு

16→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வீட்டுப் பணியாட்களுக்கு சட்ட ரீதியான பாதுகாப்பு இல்லை!

—ஐ.பயாஸ் றெஸ்ஸாக்

இலங்கையின் சட்ட அமைப்பில் வெளிநாடுகளில் தொழில் புரியும் ஊழியர்களின்சேமநலன்களை கருத்திற் கொண்டு தொழில் முகவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையிலான எழுத்து மூல ஒப்பந்தங்கள் (Written Agreement) கைச்சாத்திடப்படுகின்றன. இவ்வாறான ஒப்பந்தங்கள் பல்வேறு வகையில் நன்மை பயப்பனவாய் உள்ளன. தொழிலாளியின் வேலைத் தளம், வேலை செய்ய வேண்டிய அளவு, ஒய்வு நாட்கள், ஊதியம், மருத்துவ, பிறசேவைகள் என்பன இவ் எழுத்து மூல ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டிருக்கும். அத்தோடு இவ்வொப்பந்தத்தில் குறிப் பிட்ட விதிகளும், பரிமாணங்களும், மீறப்படுமாய் இருந்தால், இதற்கான சட்ட நடவடிக்கை எவ்வாறு மேற்கொள்ளப் படவேண்டும் என்பது பற்றியும் எழுத்துமூல சாசனத்தில் குறிப்பிடப்பட் டிருக்கும். இது இருதரப்பினருக்கும் முக்கியத்துவமாய் அமையும். இவ்விரு வர்க்கத்தினரிடையே பரஸ்பர ஒற்றுமை யினையும், நல்லெண்ணத்தையும் கட்டி யெழுப்ப முடியும். இஃது யாப்பு ரீதியாக வெளிநாட்டில் வேலை பார்ப்போரை ''பாதுகாக்கும்'' செயற்திட்டமாகும்.

ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரை வீடுகளில் பணியாட்களாக (Domestic Helpers) அமர்த்தப்பட்டுள்ளவர்கள் தொடர்பாக எவ்விதமான சட்ட ஏற்பாடும் பிறிதாக அல்லது விஷேடமாக ஏற்பாடு செய்யப்படவில்லை. இவ் வேலையாட்கள் தொடர்பான எழுத்து மூல உடன்படிக்கை ("Written Contracts") அமுல் செய்யப்பட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

வீடுகளில் உதவியாளர்களாக இருப்போர் தொடர்பான குறிப்பிடும் படியான சட்ட அமைப்பு (Legal System) இல்லாத காரணத்தினால் அவர்கள் பல அனர்த் தங்களை எதிர்நோக்கவேண்டி இருக்கின் றனர். அவர்களுடைய கொடுப்பனவு களில் அநீதி இழைக்கப்படுகின்றது. பணியாட்களின் வேலை அளவு, ஒய்வு நாட்கள், மருத்து வசதி, பிற வசதிகள் என்பன பற்றி சீர்மைத்தன்மை எதுவும் கிடையாது. நகர்ப்புறங்களில் வீட்டுப் பணியாட்களாக (குறிப்பாக பெண்கள்) கடமையாற்றுவோர் பல்வேறுபட்ட கொடுமைகளுக்கும், சித்திரவதை களுக்கும் உள்ளாக்கப்படுகின்றார்கள். அடிப்படை உரிமைகள் மறுக்கப்படு கின்றன. அவர்களுடைய சேமநலன் களில் எவ்விதமான அக்கறையும் காட்டப்படுவதில்லை. நிம்மதியான நித்திரையின்மை, பசி, விரக்தி என்பன வீட்டுப் பணியாட்களை தற்கொலை முயற்சிக்கும் கொண்டு சென்றிருக்கிறது.

துரதிருஷ்டவசமாக எமது நாட்டின் சட்ட ஏற்பாடுகளில் விஷேடமான பிரிவு வீட்டுப்பணியாட்கள் (Domestic Servents) தொடர்பாக சொல்லப்படாவிடி னும், பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் (1871) ஏற்படுத்தப்பட்ட Domestic Servents Ordiance தொடர்பாக மக்கள் அறியாதவர்களாக இருக்கின்றனர். இச் சட்ட ஏற்பாடானது செயற்பாட்டில் இல்லை. இருப்பினும் இது இன்னமும் சட்ட ஏற்பாட்டில் இருந்து விலக்கப்பட வில்லை. இதன்மூலமாக பணியாட்களின் சட்டப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணக் கூடியதாய் இருக்கும். அத்தோடு இதற்கு மேலதிகமாய் கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் ("Industrial Dispute Acts") சில பிரிவுகள் வீட்டுப் பணி யாட்கள் சம்பந்தமாய் சில சரத்துக்களை விளக்குகிறது.

1871 Domestic Servents Ordiance ஆனது பொதுவாய் தொழில் வழங்குந ரைப் (Employer) பாதுகாப்பதாகவே அமைந்தது. இவற்றின் மூலம் பணி யாட்கள் (Helpers) பொலிஸ் நிலையத் தில் தம்மை பதிவு செய்துகொள்ள வேண்டும். இதன் உள்ளார்த்தம் களவு, திருட்டு போன்றவற்றில் இருந்து தம்மைப் பாதுகாப்பதே. ஒரு வகையில் தொழி லாளிக்கும் (Employer) இது பாதுகாப் பாய் அமைந்தது.



மேலும் கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் (IDA) வாயிலாகவும் பணியாட் கள் நன்மை பெற முடியும். தமக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக அல்லது தாம் வேலையில் இருந்து நீக்கப்பட்ட நேர்மையின்மை சம்பந்தமாக அவர்கள் தொழிலாளர் பிணக்குகள் சபைக்கு (Labour Tribunal) விண்ணப்ப மனுவை சமர்ப்பிக்க வேண்டும். இச்சபை யின் அதிகாரத்தைப் பயன்படுத்தி நியாய மான தீர்வைப் பெற முடியும்.

இதற்கு 1979ல் இடம்பெற்ற பேபிஹாமி எதிர் விஜேதீர Baby hamy Vs wijey weera வழக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாய் அமைகிறது. பேபி ஹாமி எனும் பணியாள் (Domestichal) தமது தொழில் வழக்குநருக்கு (Employer) எதிராக தொழிலாளர் பிணக்க சபையில் (Labour Tribunal) வழக்குத் தொடுத்தார். இவ்வழக்கில் பேபி ஹாமியே வெற்றி பெற்றார்.

தொழிலாளர் பிணக்க சபையின் தீர்ப் பிலே அதிருப்தி கண்ட விஜேதீர தீர்ப்புக் கெதிராக மீயுயர் நீதிமன்றத்திலே ("Supreme Court") மனுச்செய்தார். ஆனால் இதனை விசாரணைக்கெடுத்த நீதிமன்றம் பேபி ஹாமிக்கு ஆதரவாகவே தீர்ப் பளித்தது.

பெரும்பாலான பணியாட்கள் எழுத்தறிவு கல்வியறிவு, அற்றவர்களாகவே காணப் படுவதனால், இவ்வாறான சம்பவங் களும், சட்ட ஏற்பாடுகளும் பற்றி, அறியாதவர்களாகவே காணப்படு கின்றனர்.

வீட்டுப்பணியாட்களின் கூடிய வேலை அளவு, ஊதியம், மருத்துவம், சம்பந்த மாய் எவ்விதமான எழுத்துருவிலான சட்ட ஆவணம் கிடையாது. ஆனால் Section 17of the shop and office Act பிரிவு 17வது கடை, காரியாலயச் சட்டத்தின்கீழ் இவை தொடர்பான வசதிகளும், பரிமா ணங்களும் சொல்லப்பட்டிருந்தாலும் இவற்றினுள் பணியாட்கள் என்ற பகுதி அடங்கவில்லை. அதனால் பணியாட்கள் தொடர்பாய் இச்சட்டத்தினைப் பயன் படுத்த முடியாது.

எனவேதான் பணியாட்களை தொடர் பான சேமநலன்களைக் கருத்திற் கொண்டு,

ஒருநாளில் அவர்கள் வேலை செய்ய வேண்டிய மணித்தியாலம்.

மாதாந்த ஓய்வு.

மருத்துவ வசதி, ஊதியம் என்பனவற்றை உள்ளடக்கிய எழுத்தாலான உடன்பாடு (Written Contracts) அவசியத்திலும் அவசியமாகின்றது.

அரசசார்பற்ற ஸ்தாபனங்களும் (NGO), மனித அடிப்படை உரிமை இயக்கங் களும், தொழிலாளர் ஸ்தாபனங்களும், வெளிநாட்டுப்பணியாட்கள் தொடர்பாக அதிக அக்கறையோடும், விழிப்புணர் வோடும், செயற்படும் அதேவேளையில், அனர்த்தங்களையும், அகோரங்களையும், அநீதிகளையும் தாங்கிக்கொண்டு, வெளி உலகிற்கு தம்மை இனங்காட்ட முடியாத வராய் முடங்கிக்கிடக்கும் உள்நாட்டு பணியாட்களையும் சற்று கவனத்திற் கெடுக்க வேண்டும்.

இலங்கையில் நூற்றுக்கு மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் இவற்றில் ஒரு சங்கமாவது வீட்டுப்பணியாட்கள் தொடர்பான பாதுகாப்பு நோக்கோடு செயற்பட வில்லை என்பது கவலைக்குரியதே. ஆகவே, சட்டங்களில் மாற்றம் கொண்டு வர உத்தேசிக்கும் இக்காலத்தில் வீட்டுப்பணியாட்கள் (Domestic Helpers) பாதுகாப்பு சங்கங்கள் தோன்ற வேண்டும்.

வீட்டு உதவியாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் விடயத்தில் அரசாங்கமும், அசமந்தமாகவே இருக்கின்றது. இவர்க ளின் நலனை கவனத்திற்கெடுத்து, பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். அடிப்படை உரிமை களில் சேதம் ஏற்படாதவாறு சட்டத்தில் மாற்றம் கொண்டு வரவேண்டும்.

1871Domestic Servents Ordiance இனை புனர் செய்து அவற்றில் உள்ள விடயங்களினோடு புதிய சட்ட ஏற்பாடு களையும் சேர்த்து அதனை செயற்தி றனுடைய சட்டமாய் மாற்ற வேண்டும்.

அச்சட்டத்தில் தொழில் கொடுப்போருக்கு (Employer) இருக்கின்ற ஏக போக உரிமை நீக்கப்பட்டு சமத்துவ சம அதிகார நிகழ்வுகளை ஏற்படுத்த வேண்டும்.

அத்தோடு 17வது பிரிவு கடைகாரியாலய சட்டத்தின் சட்ட வகுதிக்குள் வீட்டுப் பணியாட்களும் இடம் பெற வேண்டிய சட்டமாற்றங்களை செய்ய வேண்டும். இதன் மூலம் உள்நாட்டுப் பணியாட்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதி, அதிகாரத் துஷ்பிரயோகம் என்பனவற்றில் இருந்து சட்ட ரீதியான பாதுகாப்பைப் பெற முடியும்.

---

ஓர் எழுத்தாளன் தன்னுடைய படைப்பு தோல்வியானது என ஒரு போதும் எண்ண மாட்டான். இதற்குக் காரணம், அவனுள் இருக்கும், ஆத்மார்த்த பெருமை ஆகும். தன்னுடைய படைப்புக்கு பாராட்டுதல்கள் கிடைக்கப் பெற்றால் பாராட்டுபவர்களும், விமர்சகர்களும், சிறந்தவர்கள் என ஏற்றுக் கொள்வான். அவ்வாறு இல்லாவிடின், அவர்களைக் குறை கூறி, தூஷண வார்த்தைகளால் பேசுவான். அவனால் வேறு என்ன தான் செய்ய முடியும்? எனினும், ஆத்மார்த்த பெருமை இல்லாதவர்கள், இலக்கியம் படைப்பார்களா? "நிறைவான பயணக் குறிப்பு" என்ற புத்தகத்தில் சரச்சந்திரவினால் எழுதப்பட்ட குறிப்பு அது. அவர் கலைஞனையும், கலைத்துறையையும் உணர்ந்தவர் என்பது, இச் சிறு குறிப்பு மூலம் தெரிய வருகின்றது.

50களின் முற்பகுதியும், 60களின் இறுதிப் பகுதியும் பேராதனை கலை இலக்கியத் துறையின் பொற்காலமாகும். இப்பொற்காலத்தின் காரணகர்த்தா, சரச்சந்திர எதிரிவீர அவர்களாவார். குறிப்பாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களது நல்லாசானாகத் திகழ்ந்தவர். ஒரு மாணவனைக் கண்டவுடன் ஒரு பாடல் பகுதியைக் கொடுத்து, பாடச் சொல்லும், அவருக்கு தன்னுடைய படைப்புக்கு சிறந்த பாத்திரத்தை தேடிக் கொள்ளும் விசேட ஆற்றல் இருந்தது. பேராதனைப் பல்கலைக் கழகத்தின் சிங்கள நாடகத் துறையின் தலைவராகச் செயற்பட்ட சரச்சந்திர, அவர்கள் சிங்கள நாடகத் துறையின் உயர்ச்சிக்கு வழிகாட்டியாகவும், திகழ்ந்தார். அத்துடன் அவரை பாமரமக்கள் அதிகம் அறிந்ததும், இந்த சிங்கள நாடகத் துறையின் மூலமாகும். "ரத்தரன்", "எலொவ கிஹின் மெலொவ ஆவா" போன்ற நாடகங்கள் 1958ல் அவரால் தயாரிக்கப்பட்டன.

சரச்சந்திர அவர்கள் "மனமே" நாடகத்தை 1956 நவம்பர் 4ம் திகதி கொழும்புக்கு கொண்டு வந்தார். இவரின் முதல் தயாரிப்பான "பபாவதி" (1940) போன்று மனமே, கூட குறைந்த செலவுத் தயாரிப்பாகும், வாழ்க்கையில் இவரின் எளிமை, அடக்கம் தாம், அவரது நாடகத்துறையிலும் பிரதிபலித்தது எனலாம். நாடகத்துக்கு பின்னணி இசை வழங்குவதிலும், பாடல்கள் இசைப்பதிலும், பேராசிரியர் அவர்களுக்கு அதிக ஆற்றலுண்டு. ஜப்பானிலிருந்து 'கோதோ" என்னுமோர் இசைக்கருவியை அவர் கொண்டு வந்தார். "கதாவளு" நாடகத்தின் பின்னணி இசைக்கு அவர் இந்த 'கோதோ" இசைக்கருவியையே பயன்படுத்தினார்.

பெரும்பாலும், சரச்சந்திர அவர்களின் நாடகப் பிரதிகள் ஐரோப்பிய நாடக இயல்புகளில், ஒன்றான தற்காலிகமாக, குறைந்த அளவினை ஏற்றுக் கொள்ளல் (minimalist) என்ற இயல்பைச் சார்ந்தவை. "நான் என்னை அடையாளப் படுத்திக் கொள்ள முனைந்ததில்லை. எனது ரசிகர்களை அவர்களுக்குத் தெரிந்த மொழியில் மகிழ்விப்பதே எனது தேவையாகவிருந்தது" என சரச்சந்திர அவர்கள் குறிப்பிட்டிருந்தார். இதன் மூலம் ரசிகர்களின் மேல் பார்வையாளர்களின் மேல் நாடகத்தின் மேல் அவர் கொண்ட அக்கறை வெளிப்படுகின்றது.

சரச்சந்திர, அவர்களின் நாடக படைப்புகளில், "சிங்கபாகு" நாடகத்தில் சரச்சந்திர அவர்களின் கவித்துவம் இனிமையாகத் தெரிகின்றது. சிங்கபாகு எனும் இக்காவியத்தில் சிங்கமாக பிரதான பாத்திரம் ஏற்றிருக்கும் இக்கதாபாத்திரம் தனது உறவினர்களை இழந்து தவிக்கும் தவிப்பை பாடல்கள் மூலமே சரச்சந்திர வெளிப்படுத்த முனைகின்றார். சிங்கபாகு, நாடகத்துக்கு மூலாதாரமாகவிருந்த கதை இதுவாகும்:

சிங்கபாகு எனும், சிங்கம் ஒன்று அரசகுமாரி ஒருத்தியை மணமுடித்து இரு குழந்தைகளுக்கு தந்தையாகின்றது. வேட்டையாடச் செல்லும் போதும், உணவு சேகரிக்கச் செல்லும் போதும், அது ஒரு பாரிய குகைக்குள், அவர்களை சிறைப்படுத்தி விட்டுச் செல்லும். குழந்தைகள் வளர்ந்ததும் தங்கள் தந்தையைப் பற்றியும், சிறைப்படுத்தப்படுவதைப் பற்றியும், கேள்வியெழுப்புகின்றன. இறுதியில் சிங்கபாகுவை, பிரிந்து தம் நாட்டுக்குச் செல்கின்றனர். குழந்தைகளில் ஒன்றான ஆண் குழந்தை, தந்தையைக் கொல்லத் துணிகின்றது.

இதுவே சிங்கபாகுவின் சாராம்சமாகும். அதில் பெரும்பாலும் தகவல்கள் கவிதை வடிவிலும், பாட்டு வடிவிலுமே அமைந்துள்ளன. "அதில் ஒரு பாடல் புகழ்பெற்றதாகும். 'கல்லென பிந்தலா" எனத் தொடங்கும் பாடலே பிரசித்தமானது. சரச்சந்திர அவர்கள், பெரும்பாலும், தமது நாடகங்கள் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு இருக்கும் காரணத்தை பின்வருமாறு கூறுகின்றார்.


"எனது நாடகங்கள், பெரும்பாலும், வரலாற்றுக் கதைகளை அடிப்படையாகக் கொண்டது என்பதை ரசிகர்கள் அறிவார்கள். நான் அக்கதைகளை தேர்ந்தெடுப்பது, அவை நாடகத்தன்மைக்கு உகந்ததாக இருப்பதும் மற்றும் சமகாலத்தவர்களுக்கு அதில் பங்கேற்க முடிவதாலுமாகும். இவ்வாறான சாதாரண தன்மைகள் இல்லா விடின், அக்கதைகள் வெறும் குதூகலத்தை தரும் இறந்தகால கதைகள் மட்டுமே"

உதாரணமாக இன்றைய சிங்கள மேடை நாடகங்கள், மனமே, சிங்கபாகு நாடகங்களினை அடியொற்றியவையாக, அவற்றின் பரிணாமமாகவே அமைந்துள்ளன. மக்களின் சமூகநிலையையும் பொருளாதார நிலையையும், வெளிப்படுத்தும் வகையில் அவை அமைந்துள்ளன.

(வெஸ்ஸந்திர- அறிமுகம் புத்தகத்திருந்து)

சிங்கபாகு, தர்மிஷ்ட சமாஜய, சிங்கள நவகதா, மலகிய அத்தோ என்பன அவரால் எழுதப்பட்ட நூல்களாகும்.

சரச்சந்திர அவர்களின் வாழ்க்கைத் தன்மையே அவரது வெற்றிகளுக்கும் சாதனைகளுக்கும் காரணமாகும். "நான் மகானல்ல என் பால் அன்பு கொண்ட, என் அன்பிற்கும், கௌரவத்திற்கும் பாத்திரமான ஒருவர் ஒரு சபையில், ஒரு குழுவிற்கு என்னை "இவர் ஒரு மகான்" என அறிமுகப்படுத்தினார். அவர் என்னை அப்படிக் கூறியது அன்பு பிரவாகத்தின் காரணமாகும். எவ்வாறெனினும் இச் சென்மத்தில், என்னால் மகானாக முடியாது. அதற்கு நான் இவ்வாழ்க்கைப் படகில் அதிக தூரம் பயணிக்க வேண்டும்



## நான் மகான் அல்ல!

—சரத்சந்திர

என்கிறார் சரச்சந்திர் (சரச்சந்திர எழுதிய புத்தகத்தில் இருந்து.)

மிகவும் அடக்கமானவராகவும், 82 வயதிலும் தனது இலக்கியத்துறையை விட்டுக் கொடாதவராகவும் விளங்கியவர். தனது வாழ்க்கையை அவர் எவ்வளவு தூரம் அனுபவித்தார் என்பது இக் குறிப்பு மூலம் தெரியவருகின்றது. "ஓய்வாக இருப்பதற்கு, சுதந்திரமாக இயங்குவதற்கு, ஒவ்வொரு இடங்களுக்கும் சென்று மக்களின் நடத்தைகளை கவனிப்பதற்கு, ஆகாயத்தை நோட்டமிட்டு வானவில்லை ரசிப்பதற்கு ஓய்வு நேரம் மனிதனுக்கு தேவைப்படுகின்றது. ஓய்வில்லாத வாழ்க்கையை அர்த்தப்படுத்திக் கொள்ள முடியாது?

-கற்பனை உலகம் புத்தகத்திலிருந்து.

தமது இறுதிக்காலத்தில் அமைதியான இடத்திலமர்ந்து ஆக்கங்களை மேற்கொள்வதே அவரது பொழுது போக்கு.

நடமாடும் பல்கலைக்கழகமாக விளங்கிய அவர், இன்றைய சிங்கள மேடை நாடகத்துறையினதும், இலக்கியத் துறையினதும், தந்தையார் என்றால் மிகையாகாது. இதற்கு உதாரணமாக, சிங்கபாகு வரலாற்றுக் கதையாகவிருந்தாலும், அதில் சமூகப்பரிமாணங்கள் வெளிப்படுத்தப்பட்டன. தற்கால மேடை நாடகங்களான மீபுரவெசியோ, வரெந்து போன்றவற்றில் அந்தப் பாதிப்பு தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

இவ்வாறான கலைஞர் தனது நாடகங்களுக்காக மட்டும் உயிர் வாழ்வதில்லை. இலக்கியத்துறைக்காக தன்னையறியாமல் வாழ்ந்தவர். கலைஞர்கள் என்றுமே இறப்பதில்லை. தமது படைப்புகள் மூலமும், எச்சங்கள் மூலமும், அவர்கள் உலகத்தில் இறுதி வரை கலந்திருப்பர். அவ்வாறானதொரு உயர் கலைஞருக்கு கண்ணீரஞ்சலிகள் ஏற்புடையதல்ல. மாறாக அவரது, இயல்புகளை சிந்தனைகளை வாழவைப்பதே ஏற்புடையதாகும்: அடுத்த நூற்றாண்டின் இலக்கியப் பிரவேசத்திற்காக.

தமிழில்: ரட்னா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே. 10

***நவீன நிச்சயமின்மையும் அதன் விளைவும்***

ஒழுங்கு கட்டுப்பாடு (discipline) தொடர்பாக குழந்தைகளுடனான எமது பாட்டன் பாட்டி மாரது அணுகுமுறைக்கும் எமது அணுகுமுறைக்கும் இடையில் உள்ள வித்தியாசம் என்ன? பாட்டனார் எதைச் செய்தாலும் அதை ஒரு அதிகாரத்துடன் செய்தார். ஆனால் நாம் எதையாவது செய்யும் போது அதை ஒருவகை தயக்கத்துடன் செய்கிறோம். தவறு செய்கின்ற சந்தர்ப்பங்களில் கூட பாட்டனார்கள் ஒருவகை உறுதியுடன், நிச்சயத்துடனேயே அதைச் செய்கிறார்கள். ஆனால், நாமோ சந்தேகத்துடனேயே செயற்படுகிறோம். குழந்தைகள் தொடர்பான எமது இந்த நிச்சயமற்ற நிலை எங்கிருந்து வருகிறது? இப்போதெல்லாம் நாம் எல்லோரும் ஃபிராய்ட்டைப்பற்றி - அவரது மனோதத்துவ ஆய்வுகள் பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். இவற்றூடாக மனச்சந்தோசமற்ற, கவலையூட்டுகிற இளமைப்பருவம் பிற்காலத்தில் ஏற்படுத்தக்கூடிய மோசமான விளைவுகள் பற்றி எல்லாம் நாம் இப்போது கேள்விப்பட்டுள்ளோம். எனவே எமது குழந்தையை பழுதாக்கி விடக் கூடாது என்பதில் நாம் மிகவும் அக்கறை காட்டுகிறோம்.

கீழேயுள்ள ஒரு தாயின் கடிதம் இதை தெளிவாக விளக்குகிறது;

''என்னை மிகவும் ஆழமாகப்பாதிக்கின்ற விடயங்கள் தொடர்பாக வாய்மொழி மூலமாக என்னை வெளிப்படுத்துவது எனக்கு மிகவும் கடினமாக உள்ளது. எழுதும் போது ஒருவேளை என்னால் இதைத் தெளிவாக வெளிப்படுத்த முடியும் என்று நினைக்கின்றேன். நான் எதையாவது சொல்லாமல் விட்டிருந்தாலும் கூட அதையும் உங்களால் எனது வரிகளிற்கிடையே படித்து புரிந்து கொள்ள முடியும் என்று எனக்குத் தெரியும். எமது தேவாலயத்திற்கு வந்து,

பெற்றோர்களுடன் கலந்துரையாடல் குழுக்களை நீங்கள் மிகவும் கருணை கூர்ந்து செய்திருந்தீர்கள். நான் குழந்தை வளர்ப்பு பற்றி போதியளவு படித்தவளாக இல்லாததால் இந்தக் கலந்துரையாடல் எனக்கு அவ்வளவாக திருப்தியூட்டவில்லை. ஆனால் நீங்கள் அங்கு தெரிவித்த ஒரு கருத்து என்னை மிகவும் ஆட்கொண்டுவிட்டது. அதாவது எந்த ஒரு பெற்றோரும் திட்டமிட்டு தமது குழந்தையின் உணர்வுகளைக் காயப்படுத்துவதில்லை. ஆனால் தமது அறியாமையாலேயே அப்படிச் செய்கின்றனர் என்று கூறியிருந்தீர்கள். எங்களில் யாரும் எங்கள் குழந்தையின் உணர்வையோ, மனதையோ, நடத்தையோ சீர்குலைக்கும் நோக்கத்துடன் எதையும் செய்வதில்லை. ஆனால் நாம் அவற்றை செய்கிறோம். நான் யோசிக்காமல் சொன்ன சொற்களுக்காகவும், செய்த செய்கைகட்காகவும் அடிக்கடி என்னுள் அழுவதுண்டு. இத்தகைய செயல் இன்னொரு தடவை செய்து விடக்கூடாது என்று நான் ஆண்டவனை வேண்டிக்கொள்வேன். இச்செயல்கள் திரும்பச்செய்யப்படாமல் இருக்கலாம். ஆனால் அதேயளவு பாதிப்பைத் தரக்கூடிய இன்னொரு விடயம் பதிலுக்கு செய்யப்பட்டுவிடுகிறது. எனது குழந்தையை வாழ்நாள் பூராவும் காயப்படும்படி செய்து விட்டேன் என்று நான் உணரும் வரை இது தொடர்கிறது.....''

இத்தாயின் அர்ப்பணிப்பிலும் உண்மைத் தன்மையிலும் யாரும் சந்தேகப்பட முடியாது. ஆனால் இவள் தனது குற்றவுணர்வைக் குறைத்துக்கொண்டு செயல்நோர்த்தி உள்ளவளாக தன்னை மாற்றிக் கொள்வாளேயானால், மிகவும் பயனுள்ளவளாக இருக்க முடியும். இதை இன்னும் விளக்குவதாயின் கைமுறிந்த ஒரு நோயாளியை காணும்போது கதறுகின்ற அல்லது இரத்தத்தைக்கண்டதும் மயங்கி விழக்கூடிய ஒரு வைத்தியரால் எமக்கு பாதுகாப்புக் கிடைக்கும் என்று நாம் நம்பமுடியாது. ஒரு வைத்தியரிடம் நாம் எதிர்பார்ப்பதெல்லாம், தொழில் ரீதியான திறைமையையும் கொஞ்சம் அனுதாபத்தையும் தான். உணர்ச்சி வசப்படுகின்ற சாதாரண ஒரு நபரை நாம் அவரிடம் எதிர்பார்ப்பதில்லை. அவ்வாறே குழந்தைகளின் முதிர்ச்சியின்மையை அணுகுவது குறித்து ஓரளவான தொழில் ரீதியான திறமையினை பெற்றோர்கள் கற்றுக்கொள்ள முடியும்.

## கட்டுப்பாட்டு ஒழுங்கு: அனுமதிக்கக்கூடிய அளவும் அதன் எல்லையும்!

அருண்



பெருமளவுக்கு உணர்ச்சி வசப்படாமல் விடயங்கள் கையாளப்படும்போது பெரும்பாலான ஒழுக்கக்கட்டுப்பாட்டுப் பிரச்சினைகள் தீர்ந்து விடுகின்றன. மட்டுமீறிய உணர்ச்சிகளை வெளிப்படுத்திக் கையாளும் போது பிரச்சினைகள் பெரும்பிரச்சனைகளாகிவிடுவதுடன் பல காலங்களுக்கு பெற்றோர்களையும் பிள்ளைகளையும் பாதிக்கவும் கூடும்.

***பெற்றோரின் தேவைகளும் குழந்தையின் கொடுங்கோன்மையும்.***

ஒரு பெற்றார் தனது குழந்தையை விரும்ப வேண்டும். ஆனால் ஒரு நாளின் ஒவ்வொரு நிமிடமும் அவர்கள் தன்னை விரும்ப வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கக் கூடாது. தமது திருமணத்திற்கு நியாயம் காணவும் அல்லது தமது வாழ்விற்கு அர்த்தம் காணவும் குழந்தைகளை எதிர்பார்ப்பவர்கள் நிலைமை பாதகமாகவே இருக்கிறது. குழந்தையின் அன்பை இழந்துவிடுவோமோ என்ற அச்சத்தில் அவர்கள் குழந்தைக்கு எதையும் மறுப்பதில்லை. பெற்றோரின் அன்புப் பசியைப் புரிந்துகொள்கிற குழந்தை அதை நன்றாகவே இரக்கமற்ற விதத்தில் துஷ்பிரயோகம் செய்யக்கற்றுக் கொள்கிறது. அவர்கள் அன்புள்ள சேவகரிடம் ஆட்சிசெலுத்துகின்ற கொடுங்கோன்மையாளராக மாறிவிடுகின்றனர். பெரும்பாலான குழந்தைகள் தாம் தம்விருப்பத்தை விட்டுவிடுவதாக கூறி தாய்மாரை எப்படி மிரட்டுவதென்று கற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் மிகவும் குருட்டுத்தனமாக தாய்மாரை மிரட்டுகிறார்கள். அவர்கள் கூறுவார்கள்:-...'' நீங்கள்.... செய்யாவிட்டால் நான் உங்களை விரும்பமாட்டேன்...'' குழந்தையின் மிரட்டல் அல்ல இங்குள்ள சோகம். பெற்றோர்கள் இதற்கு மிரண்டு விடுவதுதான் உண்மையில் சோகமாகும். சில பெற்றோர்கள் குழந்தைகளின் சொற்களால் நன்றாகவே பாதிக்கப்பட்டு விடுகிறார்கள். அவர்கள் அழுதும் மன்றாடியும் தம்மை விரும்புமாறு குழந்தைகளிடம் கேட்கிறார்கள். அளவுக்கு மீறிய விட்டுக்கொடுப்பின் மூலமாக அவர்கள் குழந்தைகளை அமைதிப்படுத்த முயல்கிறார்கள்.

***விட்டுக்கொடுப்பும் மட்டுமீறிய விட்டுக்கொடுப்பும்.***

விட்டுக்கொடுப்பு, மட்டுமீறிய விட்டுக்கொடுப்பு என்பவை எவற்றைக் குறிக்கின்றன? விட்டுக்கொடுப்பு என்பது குழந்தையின் குழந்தைத் தனத்தை ஏற்றுக் கொள்ளும்மனோபாவமாகும்.


இது 'பையன்கள் பையன்களாகத்தான் இருப்பார்கள்' என்று ஏற்றுக்கொள்வதாகும். அதாவது, குழந்தையின் உடம்பிலிருக்கும் ஒரு துவைத்த சுத்தமான உடை நீண்ட நேரம் அப்படியே சுத்தமாக இருக்காது, குழந்தைகள் நடப்பதற்குப் பதில் ஓடுவதையே தமது இயல்பாக கொண்டிருப்பார்கள். மரங்கள் ஏறுவதற்கும் கண்ணாடிகள், முகத்தை விதம் விதமாக நெளித்துப் பார்ப்பதற்கு தான் இருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்வதாகும்.

விட்டுக்கொடுத்தலின் அடிப்படையான உண்மை என்னவென்றால், குழந்தைகட்கும் எல்லாவிதமான விருப்பங்களையும், உணர்வுகளையும் கொண்டிருக்க உரிமை உண்டு என்பதனை ஏற்றுக்கொள்வதாகும். விரும்புவதற்கான சுதந்திரம் முற்றுமுழுதானதும் தடுக்கப்பட முடியாததுமாகும். எல்லாவிதமான உணர்வுகளும், ஆசைகளும் எல்லாவிதமான சிந்தனைகளும் விருப்பங்களும் அவற்றின் உள்ளடக்கம் எதுவாக இருந்த போதிலும் ஏற்றுக்கொள்ளப்படவும் மதிக்கப்படவும் வேண்டும். அத்துடன் அவை பொருத்தமான குறியீடுகளினூடாக வெளிப்படுத்தப்படுவதை அனுமதிக்கவும் படலாம்.

அழிவு ரீதியான பழக்கங்கள் அனுமதிக்கப்படக்கூடாது. அப்படி ஏதாவது நடக்கும் போது அவற்றில் பெற்றோர் தலையிட்டு அதனை வேறு விடயங்களை நோக்கி திசை திருப்பி விட வேண்டும். இவ்வாறு திசை திருப்பக்கூடிய விடயங்களாக இலக்கை நோக்கிக் குறிபார்த்து ஈட்டி எறிதல், மரம் அரிதல், தன்னளவு உயரமுள்ள விளையாட்டுப் பொம்மையுடன் குத்துச்சண்டையில் ஈடுபடல், தமது கோபத்தில் எழுகின்ற எண்ணங்களை ஒலி நாடாவில் பதிவு செய்தல், ஆத்திர உணர்வை வெளிப்படுத்தும் கவிதைகளை எழுதுதல், கொலைச் சம்பவங்கள் நிறைந்த கதைகளை எழுதுதல் போன்றவற்றைக்கொள்ளலாம். சுருக்கமாகச் சொல்வதானால் விட்டுக் கொடுத்தல் என்பது கற்பனா ரீதியானதும், குறியீட்டுத் தன்மை வாய்ந்ததுமான குழந்தைகளின் செயல்களை ஏற்றுக் கொள்வதுதான்.

மட்டுமீறிய விட்டுக்கொடுப்பு என்பது நியாயமற்ற செயல்களுக்கும் அனுமதி வழங்குவதாகும். விட்டுக்கொடுப்பு மனத்துணிவை அழிப்பதுடன் மன உணர்வுகளையும், சிந்தனையையும் வெளிப்படுத்தும் ஆற்றலை வளர்க்கிறது. மட்டுமீறிய விட்டுக்கொடுப்போ ஒருவகை எதிர்பார்ப்புணர்வை ஏற்படுத்துவதுடன் கொடுக்கப்பட முடியாத வாய்ப்பு வசதிகளை தொடர்ந்து கோருகின்ற தன்மையையும் வளர்த்து விடுகிறது.

(வரும்)



கண்ணுக்குத் தெரியாது
கைநழுவிப் போய்க்கொண்டிருக்கும்
காலத்தைக் கைப்பற்றியாக வேண்டும்
எனது வாழ்வின் காலத்தை

முத்தமிட்டு விலகி
உரசிக் கடந்து
வலிந்து கைகுலுக்கிப் பிரிந்து
சிரித்துச் சிரித்துத் திரிகிறது
மரணம்
திறந்த விழிகளின் பார்வை குத்திடும்
நிலைகள் எங்கணும்
அதன் பசேலென்ற அழைப்பு

இனிய குரல்களின் பாடல்களைக்
கடித்துக் குதறிக் கிழித்துக்
கொக்கரிக்கும் போர்ச்சைன்யம்

ஒரு குருட்டு வௌவாலும்
பறக்க அஞ்சும் இரவின் தெருக்களில்
குப்புறவிழும் மனிதத்தின்
கூக்குரல்கள் மீளவும் மீளவும்.

விழிகளின் தீட்சண்ய ஒளியை
விழுங்கிக் கொண்டது வெளி
தாலாட்டை உறிஞ்சி
விறைத்துப் போயிற்று காற்று.

பாலுக்குக் கதறும்
பச்சை மண்களின் அழுகை கேளாது
பசியில் மெலிந்த எனது தாய்களின்
காய்ந்த மார்புகளை மேயும்
மனிதாபிமானம்.


முட்கம்பிச் சுருள்களின் பின்னே விரிகிற
சதுப்பு உவர்த் தரைகளினுள்ளிருந்து
சடலங்களாக மீட்கப்படும்
எமது கன்னிப் பெண்கள்.

எனது பாட்டனின்
முப்பாட்டனின் முப்பாட்டன்
வீறாய் நடந்து பரியேரிக்
குழம்பொலி முழங்க
வாளேந்திக் காவல் காத்துக்
களித்திருந்த என் தேசம்...

பாலையிலும் வெயிலிலும்
பனிமிகு இரவுக் கொடடுமையுடன்
வனங்களில் அலையும்
வீடிழந்த தலைமுறைகள்

மனசாட்சி நிமிர்ந்த
வாழ்தலுக்கான வேட்கையின்
மயிர்க்கால் சிலிர்க்க
கேட்கிறேன்

எங்கே எனது தேசம்?
எங்கே எனது தேசம்?



www.tamilarangam.net



# மு.பொ வின் விமர்சனமும் ஓர் ஆரம்ப நிலை வாசிப்பும்!

சரிநிகர் 105-107இல் வெளியான மு.பொவின், 90'களில் ஈழத்துக் கவிதைகளில் மாற்றம் ஏற்பட்டதா? என்ற தலைப்பின் கீழான வாசிப்பில் எழுதத் தோன்றியவை இவை. சோலைக்கிளி மீதான விமர்சனம் அவசியமாகியிருக்கிற காலகட்டம் இது. ஆனால் மு.பொ எதிர்நிலையில் நின்று சோலைக்கிளியை விமர்சித்திருப்பதாகவே படுகிறது. 'மாபெரும் கவிஞனாக எழவல்ல தன்னுடைய ஆற்றலை சிறுமைப்படுத்தி கொச்சைப்படுத்தி சிதைத்து விடுகிறார்'. என்று போகிற போக்கில் சொல்லிவிடும் கட்டுரையாளர், அந்த ஆற்றலை எங்கே சோலைக்கிளியிடத்தில் அடையாளம் கண்டார் என்று கட்டுரையில் ஒரு வரியில் கூட வெளிப்படுத்தவில்லை. மாறாக அவரே தான் சிறுமைப்படுத்தி கொச்சைப் படுத்துகிறார். சோலைக்கிளியினது கவிதை முயற்சியை ஒரு சூதாட்டம் போன்றதாகவே கொள்ள வேண்டும் என்கிறார்.

சோலைக்கிளி படிமக் கவிஞரல்ல; உருவகக்கவிஞர் என்றும் கூறிவிடுகிறார். புதுமையாகத்தான் இருந்தது. அவர் தெளிவாகவே விளக்கியிருந்தால் பிரயோசனமாக இருந்திருக்கும். படிமம், உருவகம் என்பவற்றுக்கிடையில் நிலவும் குழப்பகரமான விளக்கங்களுக்கு சில தெளிவுகளையாவது தர முயற்சித்திருக்கலாம்.

''அஃறிணைப் பொருட்கள் பற்றி அதிகளவு எழுதி அவற்றின் உயிர்ப்பை அழித்து விடுகிறார் சோலைக்கிளி'' என்கிறார். அதற்கும் ஒரு அளவு வைத்திருப்பது வேடிக்கையாக இருக்கிறது. மேலை நாடுகளில் குழந்தைகளுக்கான கார்ட்டூன் படங்களிலே கூட இந்த அஃறிணைப் பொருட்களை எவ்வளவு அற்புதமாகப் பேசவிடுகிறார்கள். பேசும் முறையே அதன் உயிர்ப்பை தீர்மானிக்கிறதேயொழிய கட்டற்று பாவிப்பதுதான் என்று வரையறை இடுதல் சரியானதாகத் தெரியவில்லை. மாறாக கற்பனைக்கு வேலியிடும் இந்தவகை சிந்தனை நொருக்கப்படுதல் வேண்டும் என்றே நினைக்கின்றேன். சோலைக்கிளியின் பலவீனம் ஒரேவகையான பேசும் முறை தானேயொழிய, கட்டற்று பாவிப்பது என்பதல்ல.

''சோலைக்கிளியின் கவிதைகள் ஆழமான பார்வையில் போதைவஸ்து பாவிக்கும் இன்றைய இளைஞர் மாதிரியாகி விட்டது'' என்கிறார் மு.பொ. போதைவஸ்து பாவிப்பவர்கள் பற்றி ஒழுக்க மதிப்பீடுகளின் அடிப்படையில் புரிந்து கொண்டதன் விளைவே இது. உண்மை என்னவென்றால், போதைவஸ்து பாவிப்பவர்கள் பலர் சமூக அமைப்பு முறைகளை விமர்சிப்பவர்களாகவும், பாசிசத்துக்கெதிராக குரல் கொடுப்பவர்களாகவும், நிறவெறிக்கெதிராக செயற்படுபவர்களாகவும், ஏன் அமைப்புகளாக (Autonome Group) செயற்படுபவர்களாகவும் கூட இருக்கிறார்கள் என்பது பலருக்குப் புதுவிடயமாக இருக்கலாம். நாம் நேரில் காணும் உண்மை இது. ஆக, அதற்கு ஒரு சமூகக் காரணம் இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சோலைக்கிளியின் கவிதையும் அப்படித்தான் என்றால் அதற்கும் ஒரு சமூகக் காரணம் உண்டு. சும்மா தட்டிக் கழிப்பதைவிட்டு, தனது மதிப்பீட்டு அளவுகோலை கட்டுரையாளர் கேள்விக்குள்ளாக்குவது நல்லது.

சோலைக்கிளி தனது கவிதை வெளிப்பாட்டு முறையை மாற்றிக் கொள்ள முடியாமல் அவதியுறுவதாகப் படுகிறது. இதற்கு முக்கிய காரணம் சமூக அரசியல் பார்வையின் வளர்ச்சியின்மை எனலாம். இவை வெளிப்படும் தளங்களில் மட்டும் நிற்பதாலேயே மனிதாபிமானம், மனித விழுமியங்கள், வாழ்வியல் நெறி பிறழ்வின் மீதான விசனம், அவலங்கள் என்பவற்றில் வேரூன்றி கவிதைகள் விளைகிறது அவரிடத்தில். பெண்களை சமூகம் வரையறுத்த 'பெண்ணாகவே' காண்கிறார். 'பெட்டையாய் பாடல்கள்' என்ற கவிதையில் 'வேண்டுமென்றால்/ பெட்டையாய் பாடல்களை பிரசவிப்பேன் / போசாக்கே இல்லாது...' என்று எழுதுகிறார். (பெண்ணியம் என்றளவுக்குக் கூட வேண்டாம்) பெண்கள் சம்பந்தமான வரட்சியான பார்வையையாவது மு.பொ சுட்டிக்காட்டாமல் போனது ஒன்றும் அதிசயமில்லை. ''...இத்தரிசன முள்ளந்தண்டே ஒவ்வொரு கவிதையிலும் ஆண்மைப்படுத்தி நிமிரவைக்கும் சொல்லாக்கத்தைத் தரவல்லது'' என்று எழுதவும், ''...காலைச் சூரியனைக் காணும் போது குகை வாயிலில் வந்து காலை நீட்டி நமஸ்கரிப்பதுபோல் தின வெடுக்கும் புலி, சிங்கங்களின் ஆண்மையாக அவர் கவிதை இல்லை'' என்று குறைப்படவும் மட்டுமே மு.பொ வால் முடியும் போது சோலைக்கிளியிடம், இந்தத் தவறை அவர் எப்படிக் காண்பது. கவிதையை 'தெளிந்த நீரோடைபோல்' பார்க்கும் ஆசை கவிதையை ஒற்றைப் பரிமாணத்துள் அமிழ்த்திவிடும் சந்தர்ப்பம் உள்ளது. தர்க்கவியலுக்குள்ளோ விஞ்ஞான உண்மைகளுக்குள்ளோ நுழைத்துப் பார்க்கும் வாசிப்பு முறை கவிதையின் ஜீவனைக் கொன்று விடுகிறது. கற்பனையைக் கேலிக்கூத்தாக்குகிறது. சொற்களிற்கு நேரடி அர்த்தங்களைப் பிரதியீடு செய்து கவிதையைப் புரிய முயற்சிப்பது பல சந்தர்ப்பங்களில் அதன் மற்றைய பரிமாணங்களை மறைத்து விடுகிறது. 'மாடு சப்பிய சூரியன்' மாடு சூரியனைச் சப்பியது என்று காட்சிப்படுதலை கவிதையின் உள்ளடக்கமாக்குவது மட்டரகமான கவிதாரசனை. கவிதை பிறந்த சூழலின் பின்னணியில் கவிதையின் முழுமையான வாசிப்பு - இத்துடன் சேர்த்து மனநிலை, கருத்து நிலை என்பனவும் கூடபல பரிணாமங்களைத் தரும். சூரியனை மாடு சப்புவதாகவோ சந்திரனை ஆடு சப்புவதாகவோ கொச்சைப்படுத்தி கவிதையின் முழுமையிலிருந்து உருவியெடுத்து பல்லுக்குத்தும் குச்சியாக்குவது கவிதையை கொல்வது போலாகிவிடும்.

அஃறிணைப் பொருட்களையும் அவற்றின் இயக்கங்களையும் இடம் மாறிப் பாவிப்பதில் என்ன பிரச்சினையிருக்கிறது? எல்லாம் அந்தந்த இடத்தில் 'ஒழுங்காக' வைத்துப்பார்ப்பது என்பதில் ஒரு நியதி இருக்கிறதா? என்ற கேள்விகளுக்குத் திருப்தியான பதிலேதும் கிடைப்பதில்லை. 'நாயைத் தூக்கி எங்கே வைப்பாய்?' என்ற கேள்விக்கு ஓர் இலங்கைச் சிறுமி வாசலுக்கு வெளியே என்கிறாள்; ஒரு சுவிஸ் சிறுமி படுக்கை அறைக்குள் என்கிறாள். இதில் நாயை எந்தச் சிறுமி இடம்மாறிப்பாவித்தாள்? என்று சொல்ல முடியுமா, என்ன!. 'அழகான வளையமொன்று அணிந்திருக்கிறாள் அவள்' என்றால் உடனே வளையம் காதில் தொங்குவதாக நினைவுக்கு வருகிறது; ஆனால் அவளோ தன் கண் புருவத்தில் அணிந்திருந்ததைப் பார்த்தவுடன் 'வழமைக்கு மாறானதாகப்' படுகிறது. ஏன் அப்படி அணியக்கூடாது? காதில் மட்டும் ஏன் அணிய வேண்டும்? என்ற கேள்விக்கு விடையில்லை. இருந்தாலும் மனசு ஜீரணிக்க மறுக்கிறது. நோய் என்னிடத்திலா? அவளிடத்திலா? ஒரு மனிதஜீவி தன் அங்கங்களை தான் விரும்பியவாறு மாற்றியமைத்துக்கொள்ளலாமென்று இருந்தால் அந்தத் தோற்றங்களை நினைத்துப் பார்க்க ஜனரஞ்சகமான உணர்வு கிளர்கிறதல்லவா.! அந்த உணர்வுக்கு ஏன் தடை விதிக்க வேண்டும்?. சாத்தியமானதையும், கற்பிதம் செய்யப்பட்டதையும் தாண்டி செயல்படுவது தானே கற்பனை.

சோலைக்கிளி இந்த இடங்களில் உலாவுகிறார். அதனால் அவர் புதிய பரிமாணத்தை தமிழ்க் கவிதையுலகுக்குத் தர முடிந்தது. ஆனால் அதுவே மீண்டும் மீண்டும் ஒரே சொல்லாடல்களால் பிரதிப்பண்ணப்படும்போது அதன் ஜீவன் அழிக்கப்படும் ஆபத்தும் வளர்ந்தே செல்கிறது.

தமிழ்க் கவிதைப் பற்றிய விமர்சனம் இன்னும் பூரணமாக பரந்த ஆய்வுமுறையில் செய்யப்படவில்லை என்ற மு.பொவின் கூற்றில் முழு உடன்பாடு உண்டு. ''இன்றைய கவிதை பற்றிய பலபக்க வாசிப்பின்மை, பிறமொழிக் கவிதைகள் பற்றிய அறியாமை, கூடவே சிறந்த விமர்சனம் இன்மை...' என்று அவர் குறைப்பட்டுக்கொள்கிறார். உண்மை!. இப்படி இருக்க இந்தக் குறைவளர்ச்சி நிலையைத் தாண்டி மு.பொ. சோலைக்கிளியை காப்பாற்றிவிடும் 'இரட்சகராக' மாறிவிடுவது எப்படி என்று புரியவேயில்லை. (அவரின் முடிவுரையாக எழுதப்பட்ட கவிதையில் காண்க) ''பூரணமான ஆய்வு சேற்கொள்ளப்படும்போது நாம் கூறியவற்றின் உண்மை இன்னும் துலக்கமுறும்'' என்று மேதாவித்தனமாக எழுதுகிறார். அவரே கூறும் இந்தக் குறைவளர்ச்சி நிலையைக் கடப்பதற்கு பரஸ்பர கருத்துப்பரிமாற்றங்கள் தேவை, மேதாவித்தனம் புரியாத விவாதங்கள் தேவை; பிறமொழிக் கவிதைகளை தமிழுக்கு தாராளமாக அறிமுகப்படுத்தும் முயற்சி தேவை; கவிதை பற்றிய ஆய்வுகள் தேவை. இவையெல்லாம் குறைபாடுகளோடு முன்னெடுக்கப்படும் சாத்தியத்தை அங்கீகரிக்கும் பக்குவமும் தேவை; இதனால் எமது முடிவுகள், மதிப்பீடுகளை மாற்றிக்கொள்ள வேண்டிவரலாம் என்ற புரிதலும் தேவை. இவையெல்லாவற்றையும் உதாசீனம் செய்வது போல சோலைக்கிளி பாணி கவிதையொன்றுடன் முடிப்பதாக மு.பொவின் பேனா கவிதையொன்று ஒழுகி சுகம் அனுபவிக்கிறது.

இன்னுமொன்றை சொல்லாமலிருக்க மனசுவிடுகுதில்லை. 80'களிலிருந்தான கவிஞர்கள் பற்றி சிலாகிக்கும்போதெல்லாம் பலருக்கு செழியன் என்றொரு கவிஞன் இருந்தான்/ இருக்கிறான்(?) என்பது கூட மறந்து போய்விடுகிறது.

பெண் கவிஞர்கள் என்று சிலரின் பெயர்களை மட்டும் தவறாமல் உச்சரித்துவிடுகிறார்கள் - பெண்களை தாம் மறந்துவிடவில்லை என்பதைக் காட்ட வேண்டியோ என்னவோ!

*ரவீந்திரன்*
*(சுவிஸ்)*

# பரமார்த்த குருவின் ஒரு சீடன் !

1996 ஒக்டோபர் 24 நவம்பர் 6 வரைக்கும் உரிய 'சரிநிகரில் என். ரஞ்சகுமார் பாவியா(கா)திருப்பாயாக 11 வது கட்டளை' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையை நான் வாசித்தேன். முற்று முழுதாக அக்கட்டுரை என்னைச்சுற்றியே பின்னப்பட்டுள்ளதென்பதை எவரும் மறுக்கமாட்டார்கள்.

என். ரஞ்சகுமார் குழந்தைத்தனமான கோளாறு உள்ளவர் என்பதை இக்கட்டுரை மூலம் நான் தெளிவாக அறிந்து கொண்டேன்.

''1995 ஆம் ஆண்டிற்கான கலந்துரையாடல்களின் போது சொந்த விவகாரச் சிக்கல்களின் காரணமாகக் கலந்து கொள்ள முடியவில்லை' என்று இவர், கூறும் காரணம் சிரிப்புக்கிடமானது. கொழும்பில் வாழும் இவர் இலக்கியத்தில் ஆத்மார்த்த ஈடுபாடு கொண்டுள்ளதாகத் தம்பட்டம் அடிக்கும் கூட்டத்தைச் சேர்ந்த இவர். இராமகிருஷ்ண மண்டபத்தில் மாலையில் நடந்த கலந்துரையாடலில் இரண்டு மணித்தியாலங்களுக்குக் கலந்து கொள்ள முடியாத அளவுக்குச் சொந்த விவகாரச்சிக்கல்களின் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தாரா? அவரது சொந்த விவகாரச் சிக்கல்களை அவிழ்த்த பின்னர் தாமே எழுதத் திராணியற்ற நோஞ்சான்கள் கூறியவற்றை அப்படியே விழுங்கி தனது ஆத்மார்த்த தளத்திலிருந்து இக்கட்டுரையை எழுதினாரா? இவர் அந்த உரையாடலில் பங்குபற்றாததினால், பேரிழப்பு எதுவும் ஏற்பட்டதில்லை. ஆனால், ''அங்கு சிலகசப்பான சம்பவங்கள் நடந்ததாகக் கேள்விப்பட்டேன்' என்று கூறும் இவர் எத்தகைய துணிச்சலோடு அக்கலந்துரையாடலில் நடந்த சம்பவங்கள் (இது அவரது சொல்) பற்றிக் கருத்துக் கூறத்துணிந்தார் என்று கேள்வி கேட்க வேண்டிய அவசியம் இல்லை. இவர் கேள்விச் செவியால் ஊரைக்கெடுக்கும் பரமார்த்த குருவின் ஒரு சீடன் தானே! அதனால்தான் இவருக்குக் கூறுகின்றேன். 'நீர் வாயால் புகையும்.. ஆனால் காதாற் புகைக்காதிரும்.

1992 இல் தமிழில் வெளியான சிறுகதைத் தொகுதிகளை மதிப்பீடு செய்வதில் நானும் ஒரு நடுவராகப் பணியாற்றியது உண்மை தான். ஆனால் இறுதி முடிவு எடுக்கின்ற போது ரஞ்சகுமார் என்னுடன் கலந்தாலோசிக்கவேயில்லை. ''அச் சமயம் நண்பர் பெனடிக்ற் பாலன் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தார். இறுதி நேரத்தில் அவருடன் கலந்தாலோசிப்பது அவரது உடல்நலம் காரணமாக இயலாதிருந்தது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். நான் நோய்வாய்ப்பட்டிருக்கவில்லை. நோயுற்றிருந்தேன் என்பது உண்மை தான். அந்நிலையில் தான் சிறுகதைத் தொகுதிகளைப் படித்து மதிப்பீடு செய்தேன். நான் என் கருத்தை வாய்விட்டுக் கூறமுடியாத மயக்க நிலையிலோ கலந்துரையாடலின் போது மூச்சடங்கி மயங்கி விழும் நிலையிலோ இருக்கவில்லை. ரஞ்சகுமார் தான்தோன்றித்தனமாகத் தான் எடுத்த முடிவை என் தலைமீதும் சுமத்தப் பார்ப்பது சுத்த அயோக்கியத்தனம். கண்ணியமில்லாத செயல். என்னோடு கலந்துரையாடியிருந்தால், அவர் அறிவித்த முடிவு நிச்சயமாக மாறியிருக்கும். தான் எடுத்த முடிவை அறிவித்துப் பாவியாகிவிட்ட அவர் அன்று ஏற்பட்ட குற்றமனப்பான்மை (இச்சொல்லும் பொருத்தமற்றது) இன்று வரை என்னை விட்டு நீங்கவில்லை என்று கழிவிரக்கப்படுவது வேசம்தான்.

''இன்று வரை நண்பர் ஹனிபாவோ அல்லது வேறு எவருமோ இந்த விவகாரம் பற்றி மூச்சுக்கூடக்காட்டவில்லை'' என்று பெருமிதமாக ரஞ்சகுமார் கூறுகின்றார். இதன் கருத்தென்ன? எது நடந்தாலும் மூச்சுக் காட்டாதிருக்கும் மக்களையா இவர் விரும்புகின்றார். சுதந்திர இலக்கிய இயக்கத்தின் கோட்பாடுகளுக்கு அது ஏற்றதா? நெற்றிக்கண் இல்லாத இவர் போன்ற குமாரர்களுக்கு இத்தகையோர் தான் தேவை.

நண்பர் பெனடிற்க்பாலன் அவர்களது நிலைப்பாட்டினை நான் அறியேன் என்று இந்தக் குஞ்சு கூறுகின்றது. இந்தக் குஞ்சால் எனது நிலைப்பாட்டைப் புரிந்து கொள்ளமுடியாதுதான். நான் கடந்த 38 ஆண்டுகளாக அரசியல், இயக்கயத்திலும் கலை இலக்கியத்திலும் ஈடுபட்டு உழைத்து வந்தவன், வருபவன். எமது போராட்டத்தின் விளைவாகவே 'இலங்கை தமிழ்த்தேசிய இலக்கியம்' என்ற தனித்துவம் நிலை நாட்டப்பட்டது. முந்த நாள் பெய்த மழைக்கு நேற்று முளைத்த காளான்களுக்கு என் நிலைப்பாடு தெரியாது தான். அவர் கூறுவதை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

''இனி 1995ஆம் ஆண்டிற்கான கலந்துரையாடலின் போது நிகழ்ந்தவற்றுக்கு வருவோம் என்று தொடங்கும் இவர் அக்கலந்துரையாடலில் பங்குபற்றாது எவ்வாறு கருத்துக்கூற முடியும்? பரமார்த்த குருவின் சீடன் ஒருவனால் அது முடியும். இச்சீடனின் ஆத்மார்த்த தளம் அத்துணை உறுதி வாய்ந்தது.

''ஆனால் குறிப்பிட்ட ஒரு படைப்பாளி நடுவர்களின் தகுதியைப் பற்றிக்கேள்வி எழுப்புவதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது'' என்று கேள்விச் செவியால் எழுதுகின்றார். கலந்துரையாடல் என்பது சுதந்திரமாகக் கருத்துக் கூறுவதற்காகவே சுதந்திர இலக்கிய இயக்கத்தினரால், ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு நிகழ்வு. எவரும் எதையும் கூறச் சுதந்திரமுண்டு. யாரும் அனுமதியளிக்கத் தேவையில்லை. இவர் கூற்றில் உள்ள ஓர் உண்மை என்னவென்றால், இந்தப் படைப்பாளிக்கு முன்கூட்டியே சுதந்திர இலக்கிய விழாவின் தமிழ் மொழித் துறைக்குப் பொறுப்பானவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதென்ற ஒரு கண்மூடித்தனமான தீர்மானம் வெளிப்படுவதுதான்.

''அந்தப் படைப்பாளி ஆட்சேபத்துக்குரிய வார்த்தைகளையும் நகைப்புக்கிடமான கருத்துக்களையும் கண்ணியக் குறைவான நடத்தைகளையும் கலந்துரையாடலின் போது பாவித்துள்ளார்'' என்று இந்த பரமார்த்த குருவின் மு. சீடன் கூறுகின்றார். கேள்விச் செவியன் ஊரைக்கெடுப்பான் என்று நமது முன்னோர் அனுபவத்தின் மூலம் கூறிய மொழி இது. முட்டாள்களுக்கு துணிவே துணை என்பது புது மொழி.

ஆட்சேபத்துக்குரிய வார்த்தைகள், நகைப்புக்கிடமான கருத்துக்கள் கண்ணியக்குறைவான வார்த்தைகள் என்னவென்று இவருக்குக் கூறிய நண்பர்களிடம் இந்தப் பரமார்த்த குருவின் சீடன் கேட்டிருக்கலாமே. அவற்றை இக்கட்டுரையில் சேர்த்திருக்கலாமே. எனக்கு அடிக்கடி மறந்து போகின்றது. ஆம், அவர் பரமார்த்த குருவின் ஒரு சீடன் தானே?

''மூத்த எழுத்தாளர்களைப் புறக்கணித்து இளம் எழுத்தாளர்களின் நூல்களுககுப் பரிசு வழங்கல் தகாது'' என்று சுதந்திர இலக்கிய விழாவின் தமிழ் மொழிக்குரிய பொறுப்பாளர் கூறவேயில்லை. கலந்துரையாடலில் தானே வந்து கலந்து கொண்டால் தானே உண்மையான கூற்று தெரிந்திருக்கும். அவர் மூத்த எழுத்தாளர் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை மட்டுந்தான் கூறினார். அக்கூற்றிலே இலக்கிய வரலாற்று ரீதியான உண்மையும் நடுவர்களைத் தெரிவு செய்வதில் ஏற்பட்ட தவறும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இக்கட்டுரையிலே ''இவ்வாறான கேலிக்

→ 13

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சங்காரநேத்ராலயாவுக்கு சிகிச்சை பெற வந்திருந்த ஒருவரை தற்செயலாக சந்தித்தபோது நிறைய விஷயங்களை பகிர்ந்து கொண்டார் - நிறைய காடுகளும், எண்ணெய் வளமும், தேயிலைத் தோட்டங்களும் கொண்ட அஸ்ஸாம். அஸ்ஸாமிகளின் சோம்பேறித் தனத்தில் பின் தங்கியிருப்பதாக வருத்தப்பட்டார்; எண்ணெய் வளத்தின் பெரும் பகுதியை மைய அரசு உறிஞ்சிக் கொள்ள, சுத்திகரிப்பு நிறுவன வேலைகளை மற்ற மாநிலத்தார் எடுத்துக்கொண்டு விட்டனர் என்றார். பல பழங்குடியினர் வாழும் அம்மாநிலத்தில் அஸ்ஸாமியை ஆட்சிமொழியாக்கியது பழங்குடியினரிடையே அதிருப்தியை உண்டு பண்ணிவிட்டது. அஸ்ஸாமி பேசுவோர் அங்கு 45சதமே.

நவீன அஸ்ஸாமி இலக்கியத்தில் அரசியல் நோக்கிலான இலட்சியவாதமே எண்பதுகள் வரை மேலோங்கியிருந்தது என்றும் அதன்பின் தேசியவாதம் எழுச்சிபெற்றுள்ளது என்றும் குறிப்பிடுகிறார் அசோக் பகவதி.

இந்திய - ஆரிய கலப்பில் உருவானமொழிகளுள் ஒன்று அஸ்ஸாமி. வங்கம், ஒரியா போலவே மகதி மொழியிலிருந்து உருவானது. 1228இல் தங்கள் மீது படையெடுத்து வந்தவர், ளைகே அஸ்ஸாமியர்கள்' என்று அப்பிரதேசத்தினர் குறிப்பிட அதுவே நாளடைவில் அப்பிரதேசத்தினர் அனைவருக்குமான பெயராகியிருப்பது வரலாற்று முரண்களின் ஒன்றுதான். இப்பிரதேசத்தின் பழைய பெயர் காமரூபம்.

- மொழிபெயர்ப்பாளர் -

# பிணம் தின்னும் கழுகு



மனோஜ்குமார் கோஸ்வாமி

ஒரு மோட்டார் வண்டி!

கோனுதான் விஷயத்தைத் தெரிவித்தது. ஆற்றின் மறுபக்கத்தில் சென்று கொண்டிருந்த வாகனத்தைப் பற்றி அவன் விவரித்தான். ஆனால் குடு, ருத்ரா, கோன் - யாருமே நம்பவில்லை. அவ்வப்போது தமாஷ் பண்ணுவதில் கோனு கைதேர்ந்த நபர். சிறிது நேரத்தில் பூட்டு மூச்சிறைக்க வந்தான். ஆமாம், அவனும் ஆற்றில் அக்கரையில் கார் செல்வதை பார்த்திருக்கிறான்.

ஆகவே அருகாமையில் கார் ஒன்று ஓடிக்கொண்டிருக்கிறது என்பது உண்மையாகவே இருக்க வேண்டும். பல வருஷங்களுக்குப் பிறகு கார் ஒன்று கிராமத்தருகே வந்திருந்தது- என்பதையும் அது குறித்தது. அவர்களைப் பொறுத்த வரை காரைப் பார்ப்பதானது, தெளிவற்ற கனவை காண்பது போன்றது. ஒரு சமயம் பொதுத்தேர்தலின்போது, வாக்குசேகரிப்பதற்காக வேட்பாளர் ஒருவர் காரில் வந்தார். காரில் வருவோர் கொழுத்த பசுக்கள் போன்றிருந்தனர். அப்போதும் கார் பூட்டுவின் வீட்டுக்கு வெளியே நின்றது. ஆகவே இப்போது பூட்டுவை நம்பாதிருப்பது அர்த்தமற்றதாகும்.

அது காராகவே இருக்கும்.

வேறுயாருக்கும் விஷயத்தை தெரிவிக்க அவர்கள் கருதவில்லை. லாலுக்கு நிச்சயமாக தெரிவிக்க வேண்டும். எனவே லாலுவைத்தேடினர். கடைசியில் கொல்லைப் புறத்தில் பழுக்காத கொய்யாக்களை அவன் கொறித்துக்கொண்டிருப்பதை கோனு பார்த்துவிட்டான். விழிகள் பிதுங்க பூட்டு கூறுவதை லாலு கவனித்தான், பூட்டு கூறிமுடித்ததும் கொச்சையாக திட்டினான். இந்த வயதிலேயே அலட்டிக் கொள்ளாமல் திட்டுவது, அவன் பால் மரியாதை பிறக்க காரணமாயிற்று. அவன் பேசும் பாணியும் வயது வந்தவர்களுடையதைப் போன்றிருந்தது.

'நல்லது, நாம் போக வேண்டும். காரைப்பார்க்க வேண்டும்' பசிய கொய்யாவை வாயால் கடித்தபடியே லாலு அறிவித்தான். சிறிது நேரம் யோசித்துவிட்டு தனக்குத்தானே கூறிக்கொள்வது போல வண்டி எங்கே போகும்? ஓடையருகே ரோடு சரியல்லையே' என்றான்.

'ஒருவேளை நகரணிக்கு போலிஸ் வரலாம்' என்றான் ருத்ரா.

ஆமாம், இருக்கலாம், கொல்லப்பட்டவர்களை கணக்கிட வரலாம்'

'என் அப்பாவும் அம்மாவும் காலையில் கூறியதை கேட்டுக்கொண்டிருந்தேன். நகரணியில் ஒரு ஜீவன் கூட உயிரோடு இல்லை என்றார் அப்பா?

சம்பவம் பற்றி அவர்கள் இப்போது அறிந்தனர். நான்கு தினங்களுக்கு முன் நள்ளிரவில், ஆண்களும் பெண்களும் கூக்குரல் போடுவதைக்கேட்டு எழுந்தனர். ஆற்றின் தென்கரையில் தீப்பற்றி எரிவதைக் கண்டனர். மறுநாள் காலையில் ஒரு கிராமமே எரிந்து நாசமானதை தெரிந்து கொண்டனர். தென்கரையிலிருந்து நகரணிக்கு வந்தவர்கள் எல்லோரையும் வெட்டிவீழ்த்திவிட்டதாக நேற்று காலையில் மீண்டும் கேள்விப்பட்டனர். இது அவர்களிடம் எந்த எதிர்வினையையும் ஏற்படுத்த இயலவில்லை. சாவின் கோரங்களை அவர்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. அவர்களது தந்தையர் சந்தைக்கு போகவில்லை என்பதை மட்டுமே பார்த்திருந்தனர். ருத்ராவின் ஒரு அண்ணன் தென்கரையிலிருந்து திரும்பியிருக்கவில்லை. ஆற்றில் ஓரிரு பிரேதங்கள் மிதந்து வந்தன. உணவு இருப்பு குறைந்தது. பசியைத் தணிக்க காலையில் மட்டுமே ஏதாவது கிடைத்தது. இரவுச்சாப்பாட்டுக்கு கிடைப்பதை எடுத்துக்கொண்டு வீடுகளுக்குள் போய் தாளிட்டுக்கொண்டனர். கிராமம் மயானத்தைப் போன்றிருந்தது.

''கார் பெரியதா, பூட்டு?' என்று வினவிய லாலு, இப்படி கேட்டுக்கொண்டான். ''போகலாம். ஆலமரத்தருகே ஆற்றைக்கடந்து போனால், சிதிலமடைந்த சாலைப்பகுதிக்கு சென்று விடலாம்''

ஆவலைத் தூண்டும் இக்கோரிக்கையை மறுப்பது அவர்களுக்கு இயலாததாயிருந்தது. ஆனால் பெரியவர்களே கிராமத்து எல்லையைத் தாண்டத் துணியாத போது சிறியவர்கள் எம்மாத்திரம்.

'கோனு வரக்கூடாது, பொலிஸ் துரத்தினால், அவனால் சமாளிக்க முடியுமா?' கோனு சோர்வுறுமாறு செய்திட ருத்ரா முயன்றான். கோனுவின் முகபாவத்தைக்கண்டதும் அவனையும் சேர்த்துக் கொள்ள வேண்டியிருந்தது. கோனுவுக்கு இப்போது தான் 4 வயது முடிந்தது.

மூங்கில் காட்டின் வளைந்து செல்லும் பாதைகளின் வழியே மூங்கில் இலைகள் சலசலக்க அவர்கள் நடையைத் தொடங்கினர். அவர்களுக்கு சுமார் 10 வயதிருக்கும். கோனு அம்மணமாயிருந்தான். லாலு கிழிந்த பனியனைப் போட்டிருந்தான். கழற்றினால் மீண்டும் போட முடியாதவாறு இருந்தது.

வழியெல்லாம் நிசப்தம் மண்டிக்கிடந்தது. வழியில் யாரும் எதிர்ப்படாதது தமது அதிருஷ்டம் என எண்ணிக்கொண்டனர்.

இடையர்கள் பாடும் தெம்மாங்கு, அக்கரையிலிருந்து வரும் விசில், நிசப்தமான ஆற்றுநீரைக் கிழித்துச் செல்லும் துடுப்பு சப்தம் போன்ற பழக்கமான சப்தங்கள் இல்லாதிருந்தது. சூல்கொண்ட நிசப்தம் எங்கும் கவிந்திருந்தது.

குளிர்கால நதி ஆழமின்றி இருந்தது. மதியநேரம். ஆற்றுத்துறையில் பகல்பொழுது குட்டித்தூக்கம் போட்டுக்கொண்டிருந்தது.

துணிமணிகளை அவிழ்த்து ஒரு கையில் தூக்கிப்பிடித்துக் கொண்டு, ஆற்றில் நீந்தினர்.

முந்தின இரவில் இலேசான தூறல் இருந்தது. எனவே சாலையில் காரின் டயர்த்தடங்கள் தெளிவாகியிருந்தன. உற்சாகம் கொண்ட அவர்கள் பெரியவர்களைப்போல் விவாதிக்கத் தொடங்கினர். கார் எவ்வளவு பெரியதாயிருக்கும், என்ன வேகத்தில் ஓடியிருக்கும் என்று.

அப்புறம் எங்கேயும் நிசப்தம், பயங்கரம் தரும் மோனம் கீச்சிடும் பறவைகள் எங்கோ சென்றிருக்க வேண்டும். எந்த இடத்திலும் மனித ஜீவனைக் காணமுடியவில்லை. ஆற்றுக்குப் பக்கத்திலிருக்கும் பிரம்புப் புதருக்குப் பின்னே மாட்டு வண்டி ஒன்று கவிழ்ந்து கிடந்தது.

'அதோ ஒரு மனிதன்' சட்டென்று அலறினான் கோன். புதர் முடியுமிடத்தில் முகங்கவிழ்ந்து ஒருவன் கிடந்தான். முதுகில் பாய்ந்த ஈட்டி நிலத்தில் சாய்ந்திருந்தது. முதுகிலும் பக்கத்துப் புல்லிலும் இரத்தக் கறைகள். கைகள் விரிந்து கிடந்தான். அவனது இறுதி ஆசை ஆற்றைத் தொட வேண்டும் என்பது போன்றிருந்தது.

லாலுவும் கூட்டாளிகளும் அமைதியாய் நின்று, மூச்சுவிட்டனர். அவனிடமிருந்து விழிகளை உயர்த்தியவர்கள், மனிதர் நிகழ்த்தியிருக்கும் கோரங்களை கவனித்தனர். சாம்பலாகிப்போன வீடுகள், அரைபாதி எரிந்த மரங்கள், சேறு பூசி சுருண்டு கிடக்கும் பெண்ணுடல், தலை இழந்த இளைஞனின் முண்டம், வாழை மரத்தில் ஈட்டியால் சொருகப்பட்ட குழந்தை...

பேசாதபடி நகர்ந்தனர். விழிகளெல்லாம் திகைப்பு. இவர்களெல்லாம் ஏன் கொல்லப்பட்டனர் என்பது புரிபட வில்லை. கொல்லப்பட்டவர்களும் கூட தாங்கள் ஏன் மடிய வேண்டும் என்பதை அறிந்திருக்க மாட்டார்கள்.

'அதோ இருக்கிறது கார், அங்கே' ஆச்சரியத்தில் கூப்பாடு போட்டான் டுடு.

சீர்கெட்டிருந்த இடத்திலிருந்து, மாட்டுவண்டி செல்லத்தக்க அளவிலான சந்தாக, ஆற்றோரத்தில் சாலை சென்றது. கீழேயுள்ள வெளியில் ஒரு ஜீப் நின்றது. அவர்கள் ஜீப்பை அடைந்தனர். இதற்கிடையில் சிலர் ஜீப்பிலிருந்து இறங்கியிருந்தனர்.

முன்புறத்து புல்வெளியில் சில குழந்தைகளின் பிரேதங்கள் கிடந்தன. பெரியகாயங்கள் ஏதும் தென்படவில்லை உடல்களில்.

'எப்போதும் தூண்டிலுடன் திரியும் பையன் அவன்' பூட்டு வியப்படைந்தான் பையனின் முகம் அவர்களுக்கு மிகவும் பரிச்சயமானது. ஆற்றின் அக்கரையில் காலையிலிருந்து மாலைவரை தூண்டிலுடன் அவன் அமர்ந்திருப்பதை அவர்கள் பார்த்திருந்தனர். மற்ற சிறுவர்களைப்போல மாங்காய்தேடி அவன் வரவில்லை. நீந்துவதற்கும் அவ்வளவாக வரமாட்டான். மீன்பிடிக்க முடியாத போதும், அவன் ஆச்சரியப்படும் படியான கவனக்குவிவும், திட நோக்கு, துவண்டுவிடாத உறுதியும் பிடிவாதமும் கொண்டிருந்தான். இப்போதும்கூட மடிந்து கிடக்கும் அவன் முகத்தில் நிதானமான தோற்றமிருந்தது. எந்த நேரத்திலும் எழுந்து நின்று தூண்டிலை எடுத்துக் கொண்டு கரை நோக்கிப் போகலாம் என்பதுபோல.

'எங்கிருந்து திடீரென இவர்கள் தோன்றியிருக்கிறார்கள்? ஒரு வேளை குட்டி பூதங்களாயிருக்கலாம்' ஜீப்பிலிருந்து இறங்கியவர்களில் ஒருவன், கோனுவையும் கூட்டாளிகளையும் பார்த்து கிண்டலடித்தான். மெலிந்து நெடிதுயர்ந்த இளைஞன் ஒருவன் புல் மீது சிதறிக் கிடக்கும் சிறாரின் சடலங்களை நுணுகி கவனித்தான் வெவ்வேறு நிறுவனங்களின் மூன்று கேமராக்கள் அவன் தோளில் தொங்கின.

'கொடுமையானது. இல்லையா ரகு?'

'இதைவிட கொடூரமானதையெல்லாம் பார்த்திருக்கிறேன்' கண்ணாடி அணிந்த ரகு சுரத்தின்றித் தெரிவித்தான். 'மால்டாவில் நடந்தது நினைவிருக்கிறதா சஞ்சய்? நான் எடுத்த நிழற்படங்களைப் பார்த்து இந்தியாவில் உள்ளவர்களெல்லாம் வியப்புற்றனர். பெரிதும் ஆச்சரியமடைந்த ஹரதான் பாபு இரண்டு புட்டி 'சாம்பெய்ன்' தந்தார்.'

கோதுமை நிறத்து சஞ்சய் பதிலுக்கு தலையாட்டினார். வியர்வை அவன் நெற்றியிலிருந்து ஆறாய்க் கொட்டியது, அடிக்கடி கைக்குட்டை எடுத்து துடைப்பதில் அலுப்படைந்து விட்டான்.

'கடவுளே என்ன வெய்யில், என்ன புழுக்கம். இவ்வளவு உஷ்ணத்தில் மக்கள் எப்படி இங்கே வாழ்கிறார்கள்? அருகில் குளிர்பானக் கடை கிடையாதா?'' சஞ்சய் விரக்தியில் முணுமுணுத்தான்.

'பவிஷாகப் பேசுகிறாய். இது பாஸ்டன் நகரமல்ல மோட்டார் செல்லும் சாலையிலிருந்து 20கி.மீ. தூரத்தில் இருக்குமிடங்கள் பக்கத்து காவல் நிலையம் 40கி.மீ. தூரத்தில் இருக்கிறது. மின்விளக்கைக் காண 50 கி.மீ. போயாக வேண்டும். என்பது போன்ற இடங்களெல்லாம் இன்னும் பூமியில் இருக்கின்றன என நீ நியூயார்க் டைம்ஸில் எழுதலாம்' என்றான் மெலிந்து நீண்ட இளைஞன்.

ஜீப்பில் வந்தவர்களைக் கண்டதும் அவர்கள் இன்னொரு உலகைச் சேர்ந்தவர்கள் என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம். அவர்களது பேச்சு, அரட்டை, நடத்தை, சிரிப்பெல்லாம் கோனு மற்றும் கூட்டாளிகளுக்கு முற்றிலும் அந்நியமாகப்பட்டன.

கலர் கலரான துணிமணிகளும் கண்ணாடிகளும் அணிந்திருந்தனர். கேமராக்களும், டேப் ரெக்கார்டர்களும் தோள்களில் தொங்கின. பளபளப்பான உலோக பாகங்களை சூரிய ஒளி பிரதிபலித்தது.

'நல்லது, படங்களைச் சீக்கிரம் எடு. இம்மரங்களிலிருந்து விரைவிலேயே நிழல் கவிழ்ந்து விடும். சீரான ஒளியில்லாவிட்டால் எந்த நிழற்படமும் சரிவர இருக்காது' ரகு கூறினான்.

அவர்கள் துரிதமாய் காரியத்தில் இறங்கினர். நீண்டு மெலிந்திருந்த இளைஞன் தேர்ச்சிகொண்ட கைகளால் கேமராவை குவித்தான். விலை உயர்ந்த கேமராக்கள் ஒளியில் மின்னின.

'வெகு சீக்கிரத்தில் நாம் இங்கே வந்திருப்பது அதிருஷ்டமே. நாளைக்கு இச்சடலங்களின் நெடி தாங்க முடியாததாகிவிடும். என்ன சொல்கிறாய் லிமா?'

'நெடியிலிருந்து தப்பித்தது எனது அதிருஷ்டம். என்னால் தாங்க இயலாது. புயல்பாதித்த ஆந்திராவில் இரண்டு நாட்களுக்கு எனக்கு சாப்பாடு கிடைக்காது போய்விட்டது. நினைவிருக்கிறதா, ஹேமன்?'

'ஹேமன், இறந்து விட்ட குழந்தையின் முன் அழுது கொண்டிருந்தானே, அவனுடன் பேசினாயா?' ரகு சத்தம் போட்டு வினவினான்.

'அக்குழந்தை அவனுடைய மகன். அவன் மனைவியும் இறந்து விட்டாள், என்னிடம் கூறினான்...'

'அருண், அவனை படம் பிடித்தாயா?'

'ஆம், ரகு'

பொறு, பையன் இறந்து விட்டானா, இல்லையா என்று உறுதியாக கூற முடியாது. இக்குழந்தை எப்படி இறந்திருக்கும். உடலில் காயமேதும் இல்லை. அம்பால் துளைக்கப்பட்டிருக்கும் குழந்தையின் முன் அவனைக்கொண்டு வந்து நிறுத்து. சீக்கிரம். நகோனில் நமக்காக காத்திருப்பதாக திரு. பட்டா உறுதியளித்தார். நமக்காக மதுவகைகளையும் ஏற்பாடு செய்கிறார்'

'ருத்ரா, கான்ஷிராமில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. இதைப்போன்றே, ஹரிஜனங்கள் சம்பந்தப்பட்டது, நினைவிருக்கிறதா?' லிமா வினவினான்.

'சர்மாவின் இக்கேமராமுன் ஏகப்பட்ட சம்பவங்கள் கடந்து போயிருக்கின்றன. எவற்றை நினைவில் வைத்திருக்க முடியும்?'

இளைஞன் ஏதோ சிரமப்படுவதாய் தோன்றியது. சிதறிக்கிடக்கும் சிறுவர் சலடங்களையெல்லாம் சேர்த்து ஒரு படம் எடுக்க முயன்று கொண்டிருந்தான். நெற்றிச் சுருக்கங்கள் அவனது தீவிர யோசனையை சுட்டிக்காட்டி. பொருத்தமான கோணத்தை கண்டறிய முடியவில்லை. 'ஹேமன் நடுவிலிருக்கும் சில பிரேதங்களை எடுத்து இப்பக்கமாக போட முடியாதா! இப்போது ஒவ்வொரு கோணத்திலும் பெரிய திறந்த வெளி உள்ளது. நிழற்படம் முழுவதும் சடலங்கள் சிதறிக்கிடக்க வேண்டும். அப்போதுதான் இக்காட்சி எவ்வளவு கொடூரமானது என்பதை புரிந்து கொள்ள இயலும். நிழற்படம் எல்லாம் பிரேதங்கள் அடைத்திருக்க வேண்டும் சரியா ரகு?'

'இல்லை சரியில்லை' சஞ்சய் கடுமையாக மறுதலித்தான். 'நடுவிலிருந்து எடுப்பது நெறியல்ல. ஆனால் சடலங்களுக்கிடையே இடைவெளியிருப்பின், புகைப்படத்தால், பீதியடைச் செய்யவும் இயலாது.

அனைவரும் அமைதியாக அப்பிரச்சினையைப்பற்றி யோசித்தனர். முதிர்வு பெற்ற ரகுகூட விரக்தியில் கேமராவை கழற்றினான்.

கோனுவும் கூட்டாளிகளும் இருந்த திசை நோக்கி உன்னிப்பாக கவனித்தாள் லிமா.

'ஹேமன், கவனியுங்கள். எனக்கு ஒரு யோசனை... ஆனால்....'

அஸ்ஸாயமினைப்போன்றிருந்த வழுக்கைத்தலையனும், மற்றவர்களும் நெருங்கி வர லிமா எதையோ கிசுகிசுத்தாள். விடுபட்டதில் அவர்கள் முகங்கள் பிரகாசித்தன. ரகு அவளைத் தட்டிக்கொடுத்து புகழ்ந்தான்.

ஹேமன் திடீரென கோனுவையும் அவன் கூட்டாளிகளையும் நோக்கினான்.

→

www.tamilarangam.net



'பையன்களா, இங்கே வாங்க'. பயப்படவேண்டாம், இங்கே வாங்க' அவன் அஸ்ஸாமியில் சொன்னான்.

கோனு லாலுவின் கைகளை கெட்டியாகப்பற்றினான். நாடித்துடிப்பு அதிகரித்தது. பீதியடைந்தனர்.

'பாவம் அவர்கள் கலவரம் அடைகிறார்கள், ஓடி விடுவார்கள் என்று கருதுகிறேன்' என்றான் அருண்.

'அவர்கள் வந்தாக வேண்டும், வருவார்கள். ஆப்பிள் பையை தாருங்கள்' ஹேமன் ஜீப்பிலிருந்து பையை இறக்கி, சில ஆப்பிள்களை எடுத்தான். சிவந்து பழுத்த ஆப்பிள்கள் ஆவலைத் தூண்டும் விதத்தில் ஒளிர்ந்தன.

'பையன்களா, வந்து எடுத்துக்கொள்ளுங்கள்' அவர்களைக் கொஞ்சும் தோரணையில் கூறினான்.

கட்டுண்டவனைப்போல லாலு முன் சென்றான். ருத்ரா, பூட்டு கோனு.. அவனைத் தொடர்ந்தனர்.... வயிற்றில் பசியின் நாவுகள் தலைநீட்ட அவர்களது விழிகள் ஆப்பிள்களில் பதிந்தன.

'ஆளுக்கொரு ஆப்பிள் கிடைக்கும். அதற்கு முன், நல்ல பிள்ளையாக இப்புல் மீது படுக்க வேண்டும்.

அருண், லிமா மற்றும் ரகு ஆகியோர் சேர்ந்து கொண்டு அநேகமாக கட்டாயப்படுத்தி அவர்களைப் படுக்க வைத்தனர். மாங்காய் திருடுவோர் தூண்டில் பித்து கொண்டவன் இவர்களது நாடித்துடிப்பில்லா சடலங்களின் அருகே அவர்கள் கிடந்தனர்.

எலும்பும் தோலுமாய், பீதிகொண்ட முகங்களுமாய் கிழிந்த ஆடையினருமாய் கோனுவும், அவன் கூட்டாளிகளும் இலகுவாக சடலங்களுடன் ஒன்றிணைய முடிந்தது.

சிலிர்க்க வைக்கும் இக்காட்சியை கேமரா உடனே பதிவு செய்தது.

''ஒரு சமயம் கோதாரின் படம் ஒன்றைப் பார்த்தேன். அதில் இதைப் போன்றே ஒரு காட்சி - பள்ளிக்கூட பேரூந்து ஒன்று விபத்தில் சிக்கிவிட, பையன்கள் தூக்கி எறியப்படுகின்றனர். ஒருவன் இன்னும் தன் பையைப்பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கிறான். பாடப் புத்தகங்களும் பயிற்சி ஏடுகளும் இரத்த வெள்ளத்தில் கிடக்கின்றன. எவ்வளவு பரபரப்பான காட்சி தெரியுமா! ஒரு காட்சியை எவ்வாறு உருவமைப்பது என்பது கோதாருக்கு தெரிந்திருக்கிறது' என ரகு விவரித்தான். இன்னும் அவன் முகம் சுரத்தில்லாமல் இருந்தது.

"All about Mrs Kere..." என்னும் கோதாரின் சமீபத்திய படத்தைப் பார்த்திருக்கிறாயா'

கோனுவும் நண்பர்களும் எழுந்தனர். தூண்டில் பிடித்துக்கொண்டவனின் அருகே லாலு படுத்திருந்தான். எழுந்ததும், துடிப்பற்ற உடலை கடுமையாகப் பார்த்தான். பின் தன், உடம்பை கவனமாக நோக்கினான். அப்புறம் கோனு மற்றும் பூட்டுவின் உடல்களைப்பார்த்தான். அவன் மூளையில் ஏதாவது கேள்விகள் எழுந்திருக்க வேண்டும். அவர்களை அனுப்பி விடும் சமிக்ஞையாக, ஆளுக்கொரு ஆப்பிளை விட்டெறிந்தான் இளைஞன்.

'அருண் தாமதம் செய்கிறாய், நகோனில் திரு. பட்டா காத்திருந்து காத்திருந்து அலுத்துப் போயிருப்பார்', ரஞ்சன் பொறுமையிழந்து கொண்டிருந்தான். அதோடு லாரிகட்டிற்கும் போவதாயிருந்தால்...'

'லாரிகட் இல்லை, ரஞ்சன். ல...ஹ்..ரி..:க..ட்' லிமா திருத்தினாள். பெயர்களும் புதர்களாக இருப்பதில் இம்மக்கள் கொடுத்து வைத்தவர்கள். இல்லாவிட்டால், இக்கிராமங்களின் பெயர்கள் உலகத்தவர்க்கு தெரிந்திருக்குமா? இப்போது இக்கிராமங்களின் பெயர்கள் ஒவ்வொரு தினசரியின் தலைப்புச் செய்திகளில் வருகின்றன'.

ஜீப் புறப்பட்டது.

வண்டியின் எஞ்சின் எப்படி உறுமிற்று, எப்படி புகை கக்கியது, எப்படி சக்கரங்கள் ஓடின, எவ்வளவு துரிதமாக ஜீப் சென்றது மற்றும் பார்வையிலிருந்து மறைந்தது என்பதை எல்லாம் கோனு மற்றும் கூட்டாளிகளின் ஊமைவிழிகள் கண்டன. கிராமத்துச் சாலையின் கள்ளமற்ற புழுதியைக் கிளப்பிவிட்டு ஜீப் பார்வையிலிருந்து மறைந்து விட்டது.....

கோனுவின் உள்ளங்கையிலிருந்த ஆப்பிளின் பருமன் படிப்படியாகக் குறைந்தது. ஆப்பிளின் ருசியை அவர்கள் ஒருபோதும் அறிந்ததில்லை. ஆற்றின் குறுகிய திருப்பத்தில் ஜீப் மறைந்ததும் அவர்களது கைகளிலிருந்த ஆப்பிள்களும் மறைந்து விட்டன.

நாவில் புதுவித ருசியும் எளிய விழிகளில் ஜீப்பின் சாகசமான காட்சியும் கொண்டிருந்த கனவுக்கண்கள் பெற்ற சிறுவர்கள் சிறிது நேரம் காத்திருந்து விட்டு, மெதுவாக வீடு திரும்பினர்.

நன்றி:
புன்னகை புரியும் இளவரசி.

*1994 சுதந்திர இலக்கிய விழாவுக்கான புதிய எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டி முடிவுகளை அறிவித்து நடுவர்களில் ஒருவரான எஸ். ரஞ்சகுமார் ஆற்றிய உரையும், அதைப் பற்றிய கலந்து ரையாடலும் அடங்கிய குறிப்புகள் :-*

# 90களில் புதிய படைப்பாளிகளின் போக்கு : வாசகரை அருட்ட முடியாமல் போன படைப்பாளிகள்

ஒவ்வொரு புதிய படைப்புக்கும், படைப்பாளி தன்னைத்தானே புதுப்பித்துக்கொள்கிறான், என்பது உண்மையே எனினும்; புதிய எழுத்தாளர்களாக பொதுவாக பின்வரும் வகையினரை அடையாளப் படுத்தலாம்.

1. புதிதாக எழுதத் தொடங்குபவர்கள்.
2. வாரவெளியீடுகளில் தமது ஆக்கங்கள் சிலவற்றைப் பிரசுரித்திருப்பவர்கள்.
3. சிறு சஞ்சிகைகளில் தமது ஆக்கங்கள் சிலவற்றைப் பிரசுரித்திருப்பவர்கள்.
4. தமது படைப்புக்களை இதுவரை நூலுருவில் தொகுத்துத்தரமுடியாமல் உள்ளவர்கள்.

ஏற்கெனவே, இதே சுதந்திர இலக்கிய விழா அமைப்பாளர்கள் நடாத்திய இரு சிறுகதைப்போட்டிகளுக்கும், வேறு சில அமைப்புக்கள் நடாத்திய சிறுகதைப் போட்டிகளுக்கும் மதிப்பீட்டாளனாக நான் பணியாற்றிய அனுபவத்தில், வர வர இவ்வாறான போட்டிகளின் கதைகளின் தரம் குறைவடைந்து கொண்டே செல்வதை அவதானிக்கிறேன்.

வசதி கருதி ''90களில் புதிய படைப்பாளிகளின் போக்கு'' என்னும் தலைப்பில் சில விடயங்களை கூற விரும்புகிறேன். நான் கூறப்போகும் அவதானிப்புகள் புனைகதை எனப்படும் இலக்கிய வடிவங்களுக்கு பொதுவான அம்சமாக காணப்படினும், எனது ஆய்வுக்குட்பட்ட சிறுகதைகளுக்கு அதிகளவில் பொருந்துவனவாக உள்ளன என நம்புகிறேன்.

முதலில் புதிய படைப்பாளிகளின் பகைப்புலன் என்ன என்பதை அவதானிக்கும் போது பின்வரும் காரணிகளையும், அவற்றின் விளைவுகளையும் முக்கியமாக நாம் கருத்திலெடுக்க வேண்டும்.

○ தமிழில் புனைகதைகளின் வரலாறு (நாவலுக்கு ஏறத்தாழ 100 வருடங்களும், சிறுகதை ஏறத்தாழ 70 வருடங்களும்).

○ இந்த காலப்பரப்பினுள் புனைகதை எனும் இலக்கியவடிவத்தில் தோன்றிய ஆளுமை மிக்கப்படைப்பாளிகளின் சாதனைகளும், அவர்கள் மற்றையவர்கள் மீது செலுத்தும் செல்வாக்கும்.

○ இலங்கைக்கே உரிய தனித்துவங்கள்.

○ இலங்கையின் கூர்மையடைந்த இன முரண்பாடு, தீவிரவாத இயக்கங்களின் தோற்றம், இனப்போராட்டம், தீவிரமடைந்த யுத்தம், தீவிரவாத இயக்கங்களின் சீரழிவு.

○ அகதிகளின் பெருக்கம், புலம்பெயர்வு, போர்க்கால வாழ்க்கை

○ மேலே கூறிய இரண்டு காரணிகளாலும் ஈழத்து இலக்கியத்தில் ஏற்பட்ட புதிய போக்குகள் சில குறிப்பிட்ட படைப்பாளிகளின் படைப்புகள் (அவை எண்ணிக்கையில் சொற்பமானவை; ஆனால் வீரியம் மிக்கவை)

○ 1983 இனக்கலவரம். அதன் பின்னர் இலங்கையில் வடக்கு, கிழக்கு பகுதிகளை நோக்கி புத்திஜீவிகள் மையம் கொள்ளுதல்.

○ தமிழ் தேசிய வாதத்தின் மீது படைப்பாளிகளினதும், விமர்சகர்களினதும் கவனம் குவிமையப்படுத்தப்படல்.

○ 1983 இற்குப் பிறகு தொடர்ச்சியாக தமிழ்ப்பிரதேசங்களின் மீது பிரயோகிக்கப்படும் இராணுவ அழுத்தம் அதனால் ஏற்பட்ட அவலங்கள்.

○ தீவிரவாத இயக்கங்களின் தூய இராணுவக் கண்ணோட்டமும், ஏனைய (சமூக, பொருளாதார, கலாசார, அரசியல்) காரணிகளை பின் தள்ளும் போக்கும்; அதன் காரணமாக புத்திஜீவிகளின் போக்கில் காணப்பட்ட தடுமாற்றமும், ஒதுங்கிக்கொள்ளும் தன்மையும்.

○ தமிழ் பேசும் இஸ்லாமியர்கள் தமது தனித்துவத்தை பேண எடுத்துக்கொள்ளும் கரிசனை.

○ மலையக மக்கள் பெறும் அருட்டுணர்வு.

○ தமிழ்த் தேசியவாதம் மட்டுமே, தற்காலத்துக்கு தேவையான தத்துவார்த்தப் பின்னணியை படைப்பாளிகளுக்கு வழங்கக்கூடியதா, எனும் ஐயம், படைப்பாளிகள் மத்தியிலும், விமர்சகர்கள் மத்தியிலும் வினவப்படும் இன்றைய சூழல்.

○ தத்துவத்தின் போதாமையை அவர்கள் உணர்ந்து கொள்வதும் தத்துவத்தின் நீட்சியை அவாவுவதும்.

○ வாசகர்கள் மீது புனைகதை தவிர்ந்த ஏனைய கலைவடிவங்கள் (உதாரணமாக; சினிமா, தொலைக்காட்சி நாடகங்கள் - பெரும்பாலும் சிங்கள, ஆங்கில, மொழிகள் மூலமான; ஓவியம்) ஏற்படுத்தியுள்ள ரசனைத் தேர்ச்சி.

○ வாசகனின் சொந்த அனுபவங்களின் பெருக்கம். (போர்க்கால வாழ்வு இதற்கு பெருந்துணை ஆகின்றது)

○ வாசகனின் மன விரிவு, அல்லது நேர் எதிரிடையாக மனம் மரத்துப்போதல்.

இலங்கையிலும், பிற தமிழ் வழங்கும் பிரதேசங்களிலும் 'கதை'களுக்கான தேவையின் அதிகரிப்பு; அதன் காரணமாக ஏற்பட்டுள்ள நீர்த்துப்போனதன்மை.

○ இலங்கையின் வார வெளியீடுகள் - வகை மாதிரியாக தினமுரசை எடுத்துக்கொண்டால், அது ஆக்க இலக்கியத்துக்கு ஏற்படுத்திக்கொண்டிருக்கும் பாதகமான அம்சங்கள்.

○ ஒரு மனிதன் ஸ்தூலமாகவும், சூக்குமமாகவும், தொற்றிக்கொள்ள இடமற்றுப்போன தற்போதைய அந்தரவாழ்வு, (அவன் வாசகனாயினும் சரி, விமர்சகன் ஆயினும் சரி, படைப்பாளி ஆயினும் சரி.)

இவையெல்லாவற்றையும் தொகுத்தும், வகுத்தும் பார்க்கும்போது இன்றைய சூழலில் புனைகதைகளின் தரம் தேக்கத்துக்குள்ளாவது தவிர்க்க முடியாதது என்னும் உண்மை புலப்படும்.

எனவே ஒரு புதிய படைப்பாளி மேற்கூறிய காரணிகளையும், அவை ஏற்படுத்தும் விளைவுகளையும் கிரகித்துக்கொண்டு, அவற்றின் உள்ளார்ந்து செல்லும் அதேசமயம்; அவற்றைக் கடந்தும் செல்ல வேண்டியவனாகிறான்.

இது, அவனுக்கு ஒரு பெரிய சவாலாகும். புதிய வடிவங்களை, புதிய உத்திகளை, புதிய மொழியை கையாள வேண்டிய நிர்ப்பந்தம் அவனுக்கு ஏற்படுகிறது. இல்லாவிடின் வாசகனின் மனதை அவனால் அருட்டி விட முடியாது போகும்.

அதாவது, வாசகன் புதிய படைப்பாளியிடம் (பழைய படைப்பாளியாயினும் சரி; தன்னைத்தானே அவன் புதுப்பித்துக்கொள்ளல் வேண்டும்) நிறைய எதிர் பார்க்கிறான்.

எனவே இந்த போட்டிக் கதைகளை நான் மிகுந்த ஆவலுடன், எதிர்பார்ப்புடன் வாசிக்க முயன்றேன். ஆனால் நான் பெற்றுக்கொண்டது ஏமாற்றமும் சலிப்பும் மட்டுமே.

ஒரு தட்டச்சுக் கடதாசியின் ஒரே பக்கத்திலேயே எழுதி முடிக்கப்பட்ட கதைகள் ஐந்தாறு காணப்பட்டன. முன்னொரு போதும் இல்லாத நிலைமை இது. என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியதுடன் கவலை கொள்ள வைத்தது.

பலர் எழுதிய கதைகளை ஒருங்கே படிக்கும் போது அவற்றுள் காணக்கிடக்கும் படைப்புக்களை (பெரும்பாலும் ஒன்றிரண்டு அல்லது மூன்று) தரிசிக்க நேர்கையில் வாசகன் மிகுந்த ஆனந்தமடைவான். நீரில் மிதக்கும் கற்பூர எண்ணெயைப் போன்றதொரு சுகானுபவம் அது.

இம்முறை அவ்வாறெதுவும் ஏற்படவில்லை. மேற்லோட்டமாகவாவது வாசிக்கப்படும் தகுதியை இழந்தனவாகவே பெரும்பாலான கதைகள் இருந்தன. வாசிக்கத் தகுந்த கதைகளில் கூட 'படைப்புக்கள்' என்னும் வரையறைக்குள் எதுவுமே அடங்கவில்லை. சராசரியான ஒரு ஆரம்ப எழுத்தாளன் எழுதிப்பயின்ற கதைகளாகவே அவை எனக்குத் தோன்றின.

இவை தவிர;

வடக்கு மாகாணத்திலிருந்தும், புலம் பெயர்ந்தவர்களிடமிருந்தும் எதுவித ஆக்கங்களும் இம்முறை கிடைக்கவில்லை.

கிழக்கு மாகாணத்திலிருந்து சில ஆக்கங்கள் கிடைத்திருந்தன. மொத்தமாக 48 கதைகள் மாத்திரமே இம்முறை போட்டிக்கென அனுப்பப்பட்டிருந்தன. கடந்த வருடங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட கதைகள் கிடைத்தமையையும், வடக்கு மாகாணத்திலிருந்தும், புலம்பெயர்ந்தவர்களிடமிருந்தும் சில கதைகள் கிடைத்தமையையும் இங்கு சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

இக்கதைகளை வாசித்து தரம் பிரிக்கும் மற்றொரு மதிப்பீட்டாளராக பணியாற்றிய நண்பர் விக்கினேஸ்வரனும் இதே மாதிரியான அபிப்பிராயங்களையே கொண்டிருந்தார்.

எனவே, நாங்கள் இறுதித் தேர்வுக்காக கதைகளை மறுபடியும் வாசித்து; பிரதேச மொழிவழக்கு, கதைகூறும் முறையில் சீரான ஓட்டம், சம்பவங்களின் நம்பகத்தன்மை போன்றவற்றின் அடிப்படையில் நிரல் படுத்தினோம். 'இஸங்களை' வைத்து அளந்து பார்க்கும் தேவை எமக்கு ஏற்படவில்லை!

நான் பின்வருமாறு பத்து ஆக்கங்களை நிரல்படுத்தினேன்.

*நாய்*
*இருட்டில்*
*பிணம் விற்ற பணம்*
*இக்ராமுடைய தன்மை*
*அவனும் மனிதன் தான்*
*இல்லாமல் போனவர்கள்*
*மையபித்து தந்த உரிமை*
*சிட்டுக்குருவி*
*பெற்ற மனம்*
*தலைமைத்துவம்*

ஆனால் இவை தங்களுக்குள்ளாகவே எதுவிதமான தரவேறுபாட்டையும் கொண்டிருக்கவில்லை. ஒரு சீட்டுக்கட்டை பிரித்து கலந்து விடுதலைப் போன்று எந்தக் கதையையும் எந்த இடத்திலும் செருகலாம்!

நண்பர் விக்னேஸ்வரன் பின்வருமாறு 4 கதைகளை நிரல்படுத்தினார்.

*இருட்டில்*
*அவனும் மனிதன் தான்*
*இல்லாமல் போனவர்கள்*
*இக்ராமுடைய தன்மை.*

இறுதியில் இருவரும் ஆலோசித்து பின்வரும் முடிவுகளை எடுத்தோம்.

*1ம் பரிசுக்குரிய கதை:*

**அவனும் மனிதன் தான்:-** வெகுளித்தனமான மனங்கொண்ட ஒரு வாலிபனை அனுதாபத்துடனும் கழிவிரக்கத்துடனும் சித்தரிக்க முயலும் கதை.

*2ம் பரிசுக்குரிய கதை:*

**இருட்டில்:-** தோட்டத்தொழிலாளர்களின், வதிவிடங்களின் பரிதாப நிலையை விபரிக்கும் கதை. இங்கு ''கழிப்பிட வசதி''யைப் பற்றிய அவலம் கையாளப்படுகிறது.

*3ம் பரிசுக்குரிய கதை.*

**இல்லாமல் போனவர்கள்:-** போர்க்கால வாழ்வின் அவலங்களை சித்தரிக்கும் கதை.

போட்டிக் கதைகளின் தரம் குன்றிச் செல்வதை சுட்டிக்காட்டும் நோக்குடன் இந்தத் தடவை பணப்பரிசிலை வழங்காமல் சான்றிதழை மட்டும் வழங்கலாம் என நான் சிபாரிசு செய்தேன்.

ஆனால், நண்பர் விக்னேஸ்வரன் சான்றிதழை வழங்காமல் பணப்பரிசிலை மட்டும் வழங்கலாம் என அபிப்பிராயப்பட்டார்.

கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுள் ஒருவரான நண்பர் கலைவாதி கலீல் அவர்களும் இதே கருத்தைத் தெரிவித்தார்.

ஆனாலும் இதற்கான இறுதி முடிவை எடுக்கும் கடமை 'விபவி'ஐச் சார்ந்தது. 'தமிழ் எழுத்தாளர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்' என்று குற்றச் சாட்டு எழுதுவதற்கும் வாய்ப்புகள் உள்ளன. என்பதையும் நாம் கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

அத்துடன், இதுவரை நடந்த சுதந்திர இலக்கிய விழாக்களுக்கான சிறுகதைப் போட்டிகள் யாவற்றிலும் பெறப்பட்ட கதைகளை மீள வாசித்து அவற்றிலிருந்து சில கதைகளை தேர்ந்தெடுத்து ஒரு தொகுப்பாக வெளியிடுதல் பிரயோசனமான ஒரு காரியமாக இருக்கும் எனவும் நான் கருதுகிறேன்.

இதற்கான முயற்சிகளை சுதந்திர இலக்கிய விழாக் குழுவினர் எடுக்க வேண்டும் என்று ஆவலாயிருக்கிறேன்.

-ரஞ்சகுமார்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சென்ற இதழின் தொடர்ச்சி..

# தாய்மை

(இறுதிப்பகுதி)

## சுய சித்திரவதையா?

**ஆணாதிக்க அறிவியலும் தாய்மையும்**

ஏனைய துறைகளில் போலவே, மருத்துவம், உளவியல் விஞ்ஞானம் போன்ற துறைகளிலும் ஆண்களே முன்னிலையில் நிற்பதுடன் இவையாவும், ஆண்களாலேயே வளர்த்தெடுக்கப்பட்டன. ஆண்கள் தம்மீது மேலாட்சி செலுத்தும் ஆணாதிக்க சித்தாந்தத்தின் நிமித்தம் தாம் கொண்டிருக்கும் ஆணாதிக்கக் கண்ணோட்டங்களின்படியே மருத்துவம், உளவியல் விஞ்ஞானம் போன்றவற்றையும் புரிந்து கொள்கின்றனர்.

மேலைநாடுகளில் தாய்மை, குழந்தை பராமரிப்பு பற்றி பெண்களுக்கு அறிவுரை கூறும் பல புத்தகங்களும் ஆண்களாலேயே ஆரம்ப காலங்களில் எழுதப்பட்டன. இந்த ஆண்கள் தத்தம் அறிவு, விருப்பு, வெறுப்புகளுக்கேற்ப தாய்மைக் கடமைகளையும் குழந்தை வளர்ப்பையும் எழுதித்தள்ளினர். மேலைநாட்டு மருத்துவ விஞ்ஞான முறைகளை, கருத்துக்களை பின்பற்றி வளர்ந்த நமது சமூகங்களும் அந்நாடுகளின் மருத்துவம், உளவியல் விஞ்ஞானம் பற்றிய கருத்துக்களை அப்படியே ஏற்றுக்கொள்ளப் பழகிவிட்டன. அவ்வாறே குழந்தை வளர்ப்புப் பற்றி காலத்துக்கு காலம் மாற்றம் பெறும் கருத்துக்களையெல்லாம் கண்களை மூடிக்கொண்டு பின்பற்றுவது நமது சமூகங்களின் வழக்கமாகி விட்டது. ஒரு காலகட்டத்தில் தாய்மைத் துறையில் வல்லுனர்களாய் புகழ் பெற்றவர்கள் கூறிய கருத்துக்கள் இன்னொரு காலகட்ட தாய்மை வல்லுனர்களால் நிராகரிக்கப்பட்டது. ஒரு கால கட்டத்தில் குழந்தை பராமரிப்புப் பற்றி தாய்மை வல்லுனர்களால் சொல்லப்பட்ட கருத்துக்கள் வருமாறு:

1. குழந்தைகளைத் தூக்கக் கூடாது
2. எவ்வளவு தான் குழந்தை அழுதாலும் அழவிட வேண்டும்.
3. நேரத்துக்குத்தான் ஆகாரம் கொடுக்க வேண்டும்.

........

இன்னொரு காலகட்டத்தில் இந்தக் கருத்துக்கள் தலைகீழாயின.

1. குழந்தைகளுக்கு அரவணைப்பு தேவைப்படுகிறது.
2. குழந்தைக்கு பசியெடுக்கும் போது எந்த நேரமானாலும் ஆகாரம் கொடுக்க வேண்டும்.

தாய்மாருக்குக் குழந்தை பராமரிப்பில் அறிவுரை கூறும் இந்த ஆண்நோக்கு கருத்துக்கள் காலத்திற்குக் காலம் முரண்பாட்டைக் கொண்டவையாக வெளிப்பட்டன. இதனால் தாய்மாரும் காலத்திற்குக் காலம் தமது தாய்மைக் கடமைகளை, குழந்தைப் பராமரிப்பை எது சரி? எது பிழை? எனும் நிச்சயமற்ற மனநிலையுடன் மாற்றிக் கொள்ள நேருகிறது. இந்நிலையில் சர்வவியாபகமான தாய்மை என்பது எங்குள்ளது? குழந்தை பராமரிக்கும் ஆற்றலை பெண்கள் இயற்கையாகக் கொண்டிருக்கிறார்கள் என்றால் பெண்களுக்கு எதற்கு வல்லுனர்களின் அறிவுரைகள்?

உயிரியல் ரீதியாக தாயே குழந்தையுடன் நேரடித் தொடர்பு கொண்டிருப்பதால் தாயின் நெருக்கம் குழந்தைகளுக்குத் தேவை என்கின்றனர். தாய்மை வல்லுனர்கள் நவீன மருத்துவம், உளவியல் விஞ்ஞானம் யாவும் தாயின் பாத்திரத்திற்கு கூடிய அழுத்தம் கொடுக்கின்றனர். குழந்தையின் உடல் நலன், உள நலன் யாவும் தாயினால் தீர்மானிக்கப்படுவதாகவும் கூறுகின்றன. குழந்தையொன்றை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றால் முதலில் வைத்தியர் கேட்கும் கேள்வி "குழந்தையின் தாய் எங்கே?"என்பது தான். தாய் வேறு வேலை காரணமாக குழந்தையுடன் இல்லாவிடில் வைத்தியர்கள் தாதிமார் அனைவரும் பொறுப்பற்ற தாயென குறிப்பிட்ட பெண்ணை குற்றம் சாட்டுவதுடன் குழந்தையின் நோய்க்குக் காரணம் அவளே என்றும் தீர்மானித்து விடுகின்றனர். அத்துடன் நில்லாமல் உளவியல் ரீதியான குழந்தையின் பாதிப்புகளுக்கும் குறைபாடுகளுக்கும் தாயின் பராமரிப்பில் குறைதேடப்பட்டு தாய் குற்றவாளியாக்கப்படுகிறாள். உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு வைத்தியர்கள் கூறும் முதல் நிவாரணம் தாய் அருகிலிருக்க வேண்டும் என்பதே. உடல் உள ஆராக்கியமான குழந்தைகள் உருவாக தாயின் பராமரிப்பும் அருகாமையும் குழந்தைக்கு அவசியம் என்பதை வைத்தியர்களும், உளவியல் நிபுணர்களும் அழுத்தி வருகின்றனர். தாய்மை பற்றி சமூகம் கொண்டிருந்த சிந்தனை மேலும் ஆழமாக்கப்பட்டு அது பெண்களை மேலும் அழுத்துகிறது. இது பெண்களை ஒடுக்கும் தாய்மைச் சித்தாந்தமும், மூடத்தனமும் விஞ்ஞானத்தின் பெயரால் வலுப்பெறக் காரணமாயுள்ளது.

உண்மையில் குழந்தைகளுக்கு உயிரியல் தாயின் நெருக்கம் தேவைப்படுகிறதா? குழந்தைகளுக்கு நம்பிக்கையான புகலிடம், அன்பு, பராமரிப்பு நெருக்கம் யாவும் தேவைப்படுகிறது. இவற்றில் ஏதாவதொன்று இல்லாமற்போகும் போது அவர்கள் தவிப்புக்குள்ளாகின்றனர். இதை வழங்குபவர் கட்டாயம் உயிரியல் தாயாகத்தான் இருக்க வேண்டுமென்றில்லை. குழந்தையுடன் தொடர்ச்சியான உறவை வைத்திருக்கும் அதனுடன் நெருக்கமான அதன் நம்பிக்கைக்குப் பாத்திரமான யாரும் அதன் உளவியல்-பௌதீக தேவைகளை பூர்த்தி செய்ய முடியும். அநேகமாக உயிரியல் தாயே குழந்தையுடன் நெருக்கமான உறவை வைத்திருப்பதால் உயிரியல் தாயாலேயே குழந்தையின் உளவியல் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும் எனும் ஐதீகம் விஞ்ஞானத்தின் பெயரால் உருவாக்கியுள்ளது. தந்தையால் இந்த கடமைகளைப் பூர்த்தி செய்ய முடியாதென்றில்லை.

தாய், சேய் நல மருத்துவ-சுகாதாரத் துறையின் வளர்ச்சியுடன் குழந்தையுணவு வகைகள், குழந்தை பராமரிப்பு சாதனங்களும் கூடியளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த குழந்தை பராமரிப்பு சாதனங்களின் வருகை பெண்களுக்கு குழந்தைப் பராமரிப்பில் உதவி செய்வதாகக் கூறினாலும் தாயின் வேலைகளைக் கூட்டி பெண்ணின் சிந்தனையை தாய்மைக் கடமைகளில் மேலும் மேலும் கட்டிப்போடுவதாயுள்ளது.

**தாயாவதன் மூலம் பெண்ணுக்கு கிடைக்கும் சமூக நன்மைகள் என்ன?**

குழந்தை பராமரிப்பில் ஈடுபட்டிருக்கும் பெண்கள் தமது முழு நேரத்தையும் கவனத்தையும் குழந்தை பராமரிப்பிலேயே செலவிடவேண்டியுள்ளது. இவர்களால் தமது சுய அறிவு வளர்ச்சியைத் தேடிக் கொள்ளும் வகையிலான கற்றலில் ஈடுபடவோ, போட்டிப் பரீட்சைகளில் பங்குபற்றி தொழிற்தளத்தில் பதவியுயர்வு தேடிக் கொள்ளவோ அல்லது புதிய தொழிலில் ஈடுபட்டு தமக்கான சொந்தப் பொருளாதாரத்தை உருவாக்கிக் கொண்டு சுயமாக வாழவோ முடியாதுள்ளது. தாயாகும் பெண்கள் எப்பொழுதும் பிறரின் தயவில் தான் வாழவேண்டியுள்ளது. கனவன், குடும்பத்தவர் ஆண் சகோதரர், அல்லது அரச உதவிப்பணத்தை எதிர்பார்க்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இது பெண்ணின் 'சார்ந்திருக்கும் நிலை" யை மீளுறுதிப்படுத்துகிறது.

குழந்தைகள் தாயைச் சார்ந்திருப்பதால், பொருளாதார பலமற்ற நிலையில் தமது சொந்த வாழ்க்கை பற்றிய எந்த விதமான சுயமான முடிவையும் எடுக்க முடியாதவர்களாய் பெண்கள் இருக்கிறார்கள். விவாகரத்து தேவைப்படினும் கூட பிள்ளைக்காக தாய்மார் தமது கணவனுடன் தொடர்ந்தும் சகிக்க முடியாத வாழ்க்கையை வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். தாய்மைக்கான பாதையை பெண்ணுக்கு முற்று முழுதாகத் திறந்து விட்டிருக்கும் சமூகம் ஏனைய சமூகத்துறைகளில் பெண்ணுக்காக அனைத்து வாய்ப்புக்களையும் அடைத்து விட்டிருக்கிறது. தாய்மைக்குள் காலடி வைக்கும் பெண் ஆணாதிக்கத்தின் திட்டமிட்ட பொறிக்குள் மிக இலகுவாக மீள முடியாத வகையில் சிக்கிக் கொள்கிறாள். தாய்மைக்குத் தூண்டப்படும், அதற்காகத் தயாரிக்கப்படும், அதை ஏற்றுக் கொள்ளும் பெண்கள் எந்த வித கேள்வியுமின்றி எதிர்ப்பால் திருமணமுறையையும், குடும்பத்திற்குள் ஆணாதிக்க அதிகாரங்களையும் பாலின ஒடுக்குமுறைகளையும் ஏற்றுக்கொள்கிறார்கள். தொடர்ச்சியான காலங்காலமாக பழக்கப்பட்ட இந்த வாழ்வியல் முறைக்குள் தம்மைத் தாமே கட்டிப் போட்டுக்கொள்ளும் பெண்கள் தாமே தமது சுய வளர்ச்சிக்குத் தடையானவர்களாகின்றனர்.

தாய்மைக்குள் செல்வதன் மூலம் தமது எதிர்கால சுய ஆளுமைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் பெண்கள் அதன் பின் தமது கனவுகள், இலட்சியங்கள், ஆர்வங்கள் யாவற்றையும் பிள்ளைகள் மீது குவிக்கிறார்கள். குழந்தைகள் அவற்றை நிறைவேற்றுவார்கள் எனும் நம்பிக்கையிலேயே திருப்தியுறுகிறார்கள். இதனால் தமது சொந்த விருப்பங்கள், ஆர்வங்களை அடியோடு கைவிட்டுவிடுகிறார்கள். இறுதியாகத் தாய்மாரிடம் எஞ்சியிருப்பது கற்பனைத்தனமான நம்பிக்கைகளும் இல்லாததில் திருப்தியுறுவதும் ஓயாத உழைப்பும், அலுப்பும், சுய தியாகமுமே.

தாய்மையை வழங்குவதன் மூலம், தமது ஒடுக்குமுறையை வலிந்து ஏற்றுக்கொள்ளச் செய்யப்பட்டதன் மூலம் பெண்கள் ஒருவித திருப்தி காண்கின்றனர். தாய்மை துயர்மிக்கது. ஆனால் நமது பெண்களுக்கு அதுவே உயர்வான வாழ்வாகக் காட்டப்பட்டுள்ளதால் துயர வாழ்க்கையை அவர்கள் விரும்பி ஏற்றுக் கொண்டுள்ளனர். இது ஒரு வித சுய சித்திரவதைக் கொப்பான நிலையே.

பாடசாலை, குடும்பம், மதநிறுவனம், தொடர்பு சாதனங்கள் யாவும் தாய்மைக்கு அழுத்தம் கொடுத்து அதை மேலும் மேலும் சித்தாந்த மறு உற்பத்தி செய்து வருகின்றன. இதனால் தாய்மைச் சித்தாந்தம் சமூகத்தில் ஆழ வேரூன்றி நிலைத்து நிற்கிறது.

**பெண் விடுதலையின் பாதையில். . . .**

தாய்மைச் சித்தாந்தமானது ஆணாதிக்கத்தை மீண்டும் மீண்டும் சமூகத்தில் வலுப்படுத்தி வருகிறது. தாய்மை பற்றிய சித்தாந்தம், ஐதீகங்கள் உடைக்கப்படாத வரையில் ஆணாதிக்க சமூக விதிகளுக்குள் சமூகம் இயங்குவது தவிர்க்கப்படமுடியாது. தாய்மை பற்றிய பொய்மைகள் உடைக்கப்படும் போது பெண் விடுதலைக்கான கதவுகள் அகலத் திறக்கப்படும் என்பதும் மறுக்க முடியாதது.

தாய்மை தமது சுய ஆளுமையைக் கட்டுப்படுத்துவதை உணரும் பெண்கள் தாம் தாயாவதைத் தவிர்த்துக் கொள்கின்றனர். இது சுதந்திர செயற்பாடு பற்றிய அவர்களது ஆர்வம் மாத்திரமல்ல, சமூக மரபுகளை எதிர்த்து சமூகத்துக்கு சவால்விடும் அவர்களது மனோபாவமுமாகும். தாய்மையை மறுதலிப்பதை பிற்போக்கு சமூகப் பாரம்பரியங்கள், மரபுகள், சமூக ஒழுங்கு விதிகளை சீர்குலைக்கும் ஒரு ஆயுதமாகவும் சில பெண்கள் காண்கின்றனர். சமூக ரீதியான தமது விடுதலையைக் கோரும் பெண்கள் தமது பூரண சுதந்திரத்திற்கு தடையாயிருக்கும் அனைத்து சமூகக் கட்டுகளையும் தகர்த்தெறிகிறார்கள். தாய்மையின் நிர்ப்பந்தங்களையும் சுதந்திர உணர்வுடைய பெண்கள் சகித்துக் கொள்ள மாட்டார்கள். மனித இன விருத்திக்கு பெண்கள் தாயாவது முக்கியமாயினும் தம்மை மனிதர்களாக ஏற்றுக் கொள்ளாத சமூகத்தில் சுதந்திர வேட்கையுள்ள எந்தப் பெண்ணும் வாரிசைத் தர முன்வர மாட்டாள். மனித சமூகம் நிலைத்திருக்க வேண்டுமானால் பெண்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்.



---

11ம் பக்க தொடர்---

**பாமர்த்த**

கூத்துகள்'' என்று இவர் கூறுவது எவற்றை? கூத்தாடியவர்கள் யார் யார்? இவரது இக்கூற்றிலே சுதந்திர இலக்கிய விழா அமைப்பாளர் கலந்துரையாடலுக்கு சுதந்திரம் அளிப்பதைக் கேலி செய்யும் தொனி உள்ளது.

''மூத்த எழுத்தாளர் எனப்படுபவர் யார்? அவரது மூப்பு எந்த அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. அவரது வயதினாலா? அவர் பெற்ற கல்வித்தகைமையினாலா? பட்டங்களினாலா அவர் வகிக்கின்ற உயர் பதவினாலா? அவர் கொண்டுள்ள ஜனரஞ்கத்தினாலா என்று இவர் கேட்கின்ற கேள்விகளிலேயே இவரது குழந்தைத்தனமான கோளாறு வெளிப்படுகின்றது. இந்த வார்த்தைகள் யாவும் என்னைப்பற்றியே கூறப்பட்டுள்ளன. அதிலே ஐயமில்லை. இவர் கூறிய இன்னொரு கூற்றும் இவற்றுடன் தொடர்புடையது. ''பாவித்து' விருதுகள் பெறப்பார்ப்பார்கள் என்பதே அக்கூற்று. இங்கு இவர் உண்மையில் சாடுவது என்னையில்லை. சுதந்திர இலக்கிய விழா இயக்கத்தினரை. லஞ்சம் கொடுப்பவர் குற்றவாளி இல்லை. லஞ்சம் பெறுபவர் தான் குற்றவாளி. அதேபோன்று செல்வாக்கு பாவிப்பவர் குற்றவாளி இல்லை. அந்த செல்வாக்குக்கு உட்படுபவர் தான் குற்றவாளி? இங்கு சுதந்திர இலக்கிய அமைப்பாளர்கள் நடுநிலையாளர்கள் இல்லை என்று கண்ணியக் குறைவாகச் சுட்டிக்காட்டுகின்றார். இந்தக் கூற்றை சுதந்திர இலக்கிய விழா அமைப்பாளர்கள் உன்னிப்பாகக் கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

இந்த ரஞ்சு குஞ்சுவின் ஆத்மார்த்த தளத்திலிருந்து இத்தகைய பேதமைகள் தான் வெளிவரும் போல.

அவர் கொண்டுள்ள ஜனரஞ்சகத்தினாலா' என்ற வார்த்தைகளை என்னைக் குறித்தே குறிப்பிட்டுள்ளார். மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளைக் கருப்பொருளாகக்கொண்டு மக்கள் விளங்கும் மொழியில் இலக்கியம் படைக்க வேண்டுமென்ற எமது அசைக்கமுடியாத கோட்பாட்டில் நின்று இலக்கியம் படைப்பவன் நான். இந்தியாவிலிருந்து வரும் ஜனரஞ்சகமான குப்பைச் சஞ்சிகைகளைத் தடை செய்ய இயக்கம் நடத்தி வெற்றி கண்ட முற்போக்கு அணியைச் சேர்ந்தவன் என்று கூறுவதில் பெருமைப் படுவன் நான். மக்கள் மத்தியில் வாழ்ந்து அவர்கள் அளிக்கின்ற ஞான ஒளியில் இலக்கியம் படைக்காது. மூலை முடுக்கு இருட்டுக்களில் இருந்து அவ்வப்போது தலையை நீட்டி 'அழுக்கு மூட்டைக் கதைகள்' கவிதைகள் படைக்கின்ற உள்வட்ட மூதேவிகளால் ஜனரஞ்சகம் என்ற சொல்லை எங்கு பயன்படுத்துவது என்று அறிந்து கொள்ளமுடியாது. இது ஒரு காளான்தானே மன்னிக்கலாம்.

'மூத்த எழுத்தாளர் புறக்கணிக்கப்பட்டதாகக்கூறமுடியாது. எக்கச்சக்கமான மூத்த எழுத்தாளர்களில் ஒருவருக்குத் தான்விருது சிபாரிசு செய்யப்பட்டுள்ளது' என்று இந்தக்குஞ்சு கூறுகின்றது. எக்கச்சக்கமான என்ற வார்த்தையின் அர்த்தம் எனக்கு இவர் பாவித்த இடத்தில் புரியவில்லை. இன்னொரு உண்மை. முடிவு அறிவிக்கப்படாத நிலையில் இவருக்கு இச்செய்தி எவ்வாறு கிடைத்தது...?இவர் காதால் புகைப்பவர் மட்டுமல்லர்; பாவித்தும் உள்ளார் என்பது வெள்ளிடைமலை. இவரது கட்டுரைபற்றிய எனது கருத்தை பின்வரும் கூற்றோடு முடிக்கின்றேன்.


''முட்டாள்கள் பல கேள்விகள் கேட்பார்கள்.
ஆனால் புத்திசாலிக்குப் பதில் சொல்வது தான் சிரமமானது'

*யோ. பெனடிக்ற் பாலன்.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## கௌரவ பா.உக்கு கலாநிதிப் பட்டம்!

சரிநிகர் 100வது இதழில் 15ம் பக்கத்தில் ''அது அரசியல் பழிவாங்கலே அல்ல'' என்ற தலைப்பில், தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் பொ. செல்வராசா அவர்களால் இ. புஸ்பவதி ஆகிய எனது இடமாற்றம் பற்றிக் கொடுக்கப்பட்டிருந்த தகவலை வாசித்து அறிந்தேன். அதற்கான உண்மையான விளக்கத்தை கீழே தருகிறேன்.

இ. புஸ்பவதி ஆகிய நான் கற்பித்து வந்த மட்டு. ஒந்தாச்சிமடம் சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் ஆசிரிய ஆளணியின் படி மேலதிக ஆசிரியராகக் காணப்பட்டதால், இடமாற்றசபை என்னை மேற்குறிப்பிட்ட பாடசாலையில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் தள்ளியுள்ள மட்டு. மகிழூர் சரஸ்வதி வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்திருந்ததாகவும் இதனால் நான் கௌரவ பாராளுமன்ற உறுப்பினரைச் சந்தித்து உதவி கேட்டதாகவும் அதற்கு அவர் எனது வசிப்பிடமான பெரிய கல்லாறில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும் மட்டு. கோட்டைக் கல்லாறு மெ.மி.த.க. பாடசாலைக்கு (ஆரம்ப பாடசாலை) இடமாற்றம் கொடுக்கும்படி களுவாஞ்சிக்குடி பிரதிக் கல்விப்பணிப்பாளருக்கு கடிதத்தை கொடுத்து உதவியதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் மட்டு. ஒந்தாச்சிமடம் சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் மேலதிகமான ஆசிரியர்கள் எந்தப்பிரிவிலும் காணப்படவில்லை.

எனினும் இப்பாடசாலையில் என்னுடன் கற்பித்த களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த ஆசிரியை மட்டும் இடமாற்றம் கோரி விண்ணப்பித்திருந்தார். அவ்வாசிரியைக்கு இடமாற்றம் கொடுக்கப்படவில்லை. 24-01-1996ல் களுவாஞ்சிக்குடி கோட்டக்கல்விப்பணிமனையினால் ஆசிரிய இடமாற்றப் பட்டியல் வெளியிடப்பட்டிருந்தது. இதில் எனது பெயர் இடம் பெறவில்லை. அப் பெயர் பட்டியலில் திருமதி. எஸ். ஞானராணி ஆசிரியை மட்டு. ஒந்தாச்சிமடம் சித்தி விநாயகர் வித்தியாலயத்திலிருந்து கோட்டைக் கல்லாறு மெ.மி.த.க. பாடசாலைக்கும், இதற்குப் பதிலாக மட்டு. களுவாஞ்சிக்குடி சரஸ்வதி வித்தியாலயத்திலிருந்து திருமதி ஆர். விஜயலெட்சுமி என்ற ஆசிரியை நான் கற்பித்த பாடசாலையான மட்டு. ஒந்தாச்சிமடம் சித்தி விநாயகர் வித்தியாலயத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டனர். எனினும் மேற்குறிப்பிட்ட திருமதி. எஸ். ஞானராணி பாராளுமன்ற உறுப்பினரைச் சந்தித்து தான் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியை அத்துடன் விடைத்தாள் திருத்துவதற்கு செல்வதால் இரத்துச் செய்யும் படி கூறியதன் காரணமாக அவரது இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டது.

பின்னர் கடந்த 09-01-1996இல் நான் பாடசாலைக்கு சென்றிருந்த போது அதிபர் பேரானந்தம் அவர்கள் மட்டு. மகிழூர் சரஸ்வதி வித்தியாலயத்திற்கு இடமாற்றப்பட்ட கடிதத்தை என்னிடம் தந்தார். அதற்கு நான் இடமாற்றம் கோரி விண்ணப்பிக்கவில்லை. அப்படியிருந்தும் ஏன் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டது என்பதை அதிபரிடம் கேட்டேன். இதுபற்றி தனக்கு ஒன்றும் தெரியாது என்றும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினரிடம் செல்லுமாறும் என்னைப் புதிய அதிபர் பேரானந்தம் அவர்கள் கேட்டுக்கொண்டார். நான் அரசியல்வாதியிடம் செல்லவில்லை என்று கூறிவிட்டு லீவைப் போட்டுவிட்டு வீட்டுக்குத் திரும்பினேன். இந்தப் புதிய அதிபர் பேரானந்தம் அவர்கள் நான் இடமாற்றப்படமுன் அந்த தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினரால் நியமிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் இதைக்கேள்வியுற்ற மாணவர்களின் பெற்றோர்கள் என்னை வீடு தேடி வந்து தங்களுடன் பாராளுமன்ற உறுப்பினரின் வீட்டுக்கு வருமாறு வற்புறுத்தினர். இதனால் அவர்களுடன் சென்றேன். கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் என்னிடம் பின்வருமாறு கூறினார்.

அதாவது ''இடமாற்றத்தை ஏற்றுக்கொள்ளுமாறும் ஏற்றுக்கொள்ளாவிட்டால் தண்ணீர் இல்லாத ஊருக்கு மாற்றுவேன் என்றும் கூறினார். என்னுடன் வந்த மாணவர்களின் பெற்றோர்கள் அவரிடம் கூறியும் அவர் எதையும் கேட்கவில்லை. இப்பெற்றோர்கள் உயிருடன் இருக்கிறார்கள். எனவே இதைவிடுத்து தான் எனக்கு உதவி செய்ததாகவும், அதை ஏற்காமல் வடகிழக்கு மாகாண ஆளுநர் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரிடம் சென்று நடவடிக்கை எடுத்ததாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் எனக்கு உதவி செய்திருந்தால் நான் ஏன் ஆளுநர் வரையும் செல்லவேண்டும்? அத்துடன் எனது இடமாற்றத்திற்கு யார் காரணம்? ஏன் செய்யப்பட்டது? என்பது பட்டிருப்பு தொகுதியில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நன்கு தெரியும். எனவே உறுப்பினர் அரசதிணைக்களங்களில் தலையிட்டு குழப்பியடிக்காமலும் மற்றவர்களின் மனதை பாதிப்படையச் செய்யாமலும் இருந்தாலே போதும். மற்றையது, நான் தோற்றவிருந்த பட்டப்படிப்பு (டிப்ளோமா) பரீட்சை நடைபெறவில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.

பட்டப்படிப்பு (டிப்ளோமா) பாடநெறியை உள்வாரியாக கொழும்பு, பேராதனை, யாழ்ப்பாணம் போன்ற பல்கலைக்கழகங்களும் வெளிவாரியாக மஹரகம தேசிய கல்வி நிறுவகமும், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகமும் நடாத்தி வருகின்றன. நான் தோற்றவிருந்த பரீட்சை இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் கடந்த 17-02-1996ல் ஆரம்பித்து 25-02-1996ல் முடிவுற்றது என்பதை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் தெரிந்து கொள்ள வேண்டும். இதை விடுத்து பொய்யான தகவலை வழங்கக்கூடாது.

அடுத்ததாக, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு அரசாங்கம் சம்பளம் வழங்குகின்றதா? இல்லை. ஆசிரியர்கள் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா படிப்பதற்கு சம்பளம் வழங்குகின்றதா என கேள்வி எழுப்பியிருந்தார்.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினருக்கு கூறிக்கொள்வது என்னவெனில், நான் தங்களைப்போன்று சந்தர்ப்பவசமாக ஆசிரிய தொழிலுக்கு வரவில்லை. ஆசிரியர்கள் கற்றுக்கொண்டு கற்பிப்பவர்கள். இந்த வகையில் நானும் ஒரு ஆசிரிய மாணவி என்பதை குறிப்பிட விரும்புகிறேன். வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர் ஆகியோரின் உத்தரவையும் மீறி பதவியின் நீடிப்புக்காக பாராளுமன்ற உறுப்பினரின் இரும்புக்காலைச் சுற்றியிருந்த கல்வி அமைச்சின் செயலாளர் கே. தியாகராஜா அவர்கள் களுவாஞ்சிக்குடி பிரதேச பிரதிக்கல்விப்பணிப்பாளர் க.இ. ராசநாயகம் ஆகியோரைக் கொண்டு எனது இடமாற்றத்தை நியாயப்படுத்தி அவரின் சுய இலாபத்திற்காக மாணவர்களின் நலனையும் கருதாமல் இடமாற்றங்களைச் செய்து வருவது நியாயமல்ல. மேலும் எந்த ஒரு ஆசிரியருக்கும் அநீதி இழைக்கப்பட்டால், அவர் நீதிமன்றம் சென்று தன்னுடைய உரிமையை நிலைநாட்டிக்கொள்ளமுடியும் என்று குறிப்பிட்டிருந்தார்.

நான் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு ஆயத்தமானபோது கௌரவ பாராளுமன்ற உறுப்பினரின் இரும்புக்காலை சுற்றியிருந்த முன்னை நாள் கல்வியமைச்சின் செயலாளர் அவர்களே நீதி மன்றம் போகவேண்டாம் என்று தடுத்தார்.

எனது இறுதி இரத்துக் கட்டளை மாகாண கல்விப்பணிப்பாளராலேயே செய்யப்பட்டுள்ளது. இதனை பிரதிக் கல்விப்பணிப்பாளர் மீறியுள்ளார் என்பதனை எப்படி உறுதிப்படுத்த முடியும்? என்று வினா தொடுத்தார்.

இரத்துக்கட்டளை தற்பொழுது வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு, கல்வித்திணைக்களம் ஆகியவற்றில் இருக்கிறது. அதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது களுவாஞ்சிக்குடி பிரதிக்கல்விப்பணிப்பாளரால் எனக்கு இரண்டாவதாக இடமாற்றம் வழங்கப்பட்ட ஆரம்பப் பாடசாலையில் இருந்து மீண்டும் நான் கற்பித்த மட்டு. ஒந்தாச்சிமடம் சித்திவிநாயகர் வித்தியாலயத்திற்கு நியமிக்கும்படி பிரதம செயலாளரின் உத்தரவிற்கிணங்க கல்வி அமைச்சின் செயலாளர் அதில் குறிப்பிட்டிருந்தார். எனவே இதைச் செய்யாமலே மூன்றாவதாக இடமாற்றக்கட்டளை மட்டு. மகிழூர் சரஸ்வதி வித்தியாலயத்திற்கு வழங்கப்பட்டது. எனவே பாராளுமன்ற உறுப்பினரின் துணையுடன் பிரதிக்கல்விப்பணிப்பாளர் மீறியுள்ளார் என்பது வெளிப்படை.

மேலும் எனது இடமாற்றப்பிரச்சினை ஆளுநர் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளரால் முன்வைக்கப்பட்ட போது எனக்கு இடமாற்றம் வழங்கிய பிரதேச பிரதிக்கல்விப்பணிப்பாளரை விசாரணையின் பின் இடமாற்றம் வழங்கும்படி ஆளுநரால் உத்தரவிடப்பட்டிருந்தது. எனினும் விசாரணைக்கு சென்ற செயலாளர் கே. தியாகராஜா அவர்கள் ஆளுநருக்கு பின்வருமாறு அறிக்கை செய்திருக்கிறார். அதாவது நான் இடமாற்றம் கோரி விண்ணப்பித்திருந்தாகவும் அதனால் பிரதிக்கல்விப்பணிப்பாளர் எனக்கு இடமாற்றம் வழங்கியதாகவும், பின்னர் கே. தியாகராஜா அவர்களை சந்தித்து எனது ஆதாரங்களை காண்பித்து மீண்டும் விளக்கி கூறினேன். அதாவது நீங்கள் என்னை நீதிமன்றம் செல்ல விடாமலும் தடுத்துவிட்டீர்கள். தற்பொழுது இடமாற்றப்பட்டு 45நாட்களுக்கு மேலாக சென்று விட்டது. எனவே சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என்று அவரிடம் கூறினேன்.

பின்னர் கல்முனை கல்வி மாவட்டத்திலுள்ள கமு/பெரிய நீலாவணை விஷ்ணு மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுத்தருமாறு பிரதம செயலாளரிடம் கூறினேன். விஷ்ணு மகாவித்தியாலயத்திற்கு நியமித்து தருமாறு அதிபர், பிரதம செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு தந்த கடிதத்தையும் கொடுத்தேன். இதற்கிணங்க பிரதம செயலாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கமு/பெரிய நீலாவணை விஷ்ணு மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் வழங்கும்படி கல்வி அமைச்சின் செயலாளருக்கு கட்டளைபிறப்பித்திருந்தார். அந்தக் கட்டளைக்கிணங்க செயலாளரால் எனக்கு கமு/ பெரிய நீலாவணை விஷ்ணு மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் கடந்த 02-03-1996 அன்று வழங்கப்பட்டது. இதற்கான ஆதாரங்கள் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செயலகம், பிரதம செயலாளரின் செயலகம், கல்வி அமைச்சு கல்வித்திணைக்களம் ஆகியவற்றில் பத்திரமாக உண்டு. இதன் பிரதியில் ஒன்றை ''சரிநிகர்'' பத்திரிகை ஆசிரியர் குழுவுக்கும் அனுப்பியிருக்கிறேன். அதைவிடுத்து நான் பொய் கூறியதைக் கண்ணுற்ற ஆளுநர் என்னை மட்டக்களப்பு மாவட்டத்திலே இருக்கக்கூடாது என்று கல்முனை கல்வி மாவட்டத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும் குறிப்பிட்டிருந்தார். எனவே கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் ''சரிநிகர்'' பத்திரிகையில் பொய்களை குறிப்பிட்டிருந்ததோடு அவற்றை நியாயப்படுத்தியும் இருந்தார். எனவே இவருக்கு பொய்கூறுவதற்காக கலாநிதிப்பட்டம் வழங்கலாம் போலிருக்கிறது.

*செல்வி. இ. புஸ்பவதி*
*(ஆசிரியை)*
*கமு/பெரிய நீலாவணை*
*விஷ்ணு மகாவித்தியாலயம்.*

## அது மிதவாதப் போக்கல்ல

ஐக்கிய தேசியக் கட்சியின் 50ம் ஆண்டையொட்டிய கட்டுரை (சரிநிகர் 107) தேசிய இனப்பிரச்சினையை மட்டுமே மனதிற்கொண்டு எழுதப்பட்டாற்போல் உள்ளதால் ஐ.தே.கவின் வர்க்கப்பார்வை பற்றி தமிழ் வாசகர்கள் அறிவதற்கு வாய்ப்பை மறுத்துள்ளது. கட்டுரையாளர் கூறுவதுபோலன்றி 1948 - 56 கால இடைவெளியில் அக்கட்சி மிதவாதப்போக்கைக் கடைப்பிடித்ததாகக் கருதுவது கடினம். திட்டமிட்ட குடியேற்றத்தின் விரிவாக்கமும் 1954 ஹர்த்தாலும் மிதவாதத்தின் வெளிப்பாடுகளல்ல. சிங்கள பௌத்த உணர்வு, முற்றிலும் தமிழர் விரோத நோக்கையுடையதுமல்ல. ஆங்கில ஆதிக்கம் கிறிஸ்துவ மதநிறுவனங்களது செல்வாக்குப் போன்றவையும் அதன் அன்றைய முக்கிய இலக்குகட்குள்ளடங்குவன. ஐ.தே.கவுக்கும், ஸ்ரீ.ல.சு.கவுக்கும் இடையே சிங்கள மக்கள் கண்ட வேறுபாட்டைத் தமிழ் மக்கள் அறிவது அவசியம். கட்டுரையாளர் இதுபற்றிக் கவனமெடுத்திருக்கலாம். ''சாதுவான சுபாவம்'' கொண்டவராகக் கூறப்படும் டட்லி சேனநாயக்க, 1960மார்ச் தேர்தலின் பின்பு தமிழரசுக்கட்சியுடன் சேர்ந்து அரசியல் அதிகாரத்தை தக்க வைக்கமுயன்று, அது தோல்வியுற்றதால், 1960 ஜுனில் நடந்த தேர்தலில் மிகவும் மோசமான தமிழர் விரோத பிரசாரத்துக்குத்தலைமை தாங்கினார். 1970க்கும் 77க்குமிடையிலான 'இனவாத அடக்குமுறை ஆட்சி' அதன்பின் வந்ததுடன் ஒப்பிடும்போது, மனிதாபிமானமுள்ளதாகவே தோன்றுகிறது. இந்த ஆட்சியின் பங்காளிகளாக வலது கம்யூனிஸ்ட் கட்சியும், ல.ச.ச.கட்சியும் இருந்தன. 1975வாக்கிலேயே வாசுதேவ நாணயக்கார பிரிந்து ந.ச.ச.கட்சி உருவாக வழிவகுத்தார். அந்த ஆட்சியின் மிக மோசமான நடவடிக்கைகளில் ஒன்றாக குடியரசு அரசமைப்புச் சட்டத்தைச் சிறுபான்மையினர்க்குப் பாதுகாப்பற்ற விதமாக வரைந்தவர் ல.ச.ச.கட்சித் தலைவர்களுள் ஒருவர். பாலகிருஷ்ணன், ஐ.தே.வின் ஒட்டுமொத்தமான தன்மை பற்றிக் கூறுவதற்கு முயன்றிருந்தால், ஒருவேளை இதைவிடச்சற்று நீளமான நியாயமான ஒரு கட்டுரையை நமக்குத் தந்திருக்கக்கூடும்.

தபுதாரன் என்ற சொல் இலங்கையின் தமிழ்ப் பாட நூல்களில் உள்ளதாகவும் அது சிலப்பதிகாரத்தில் வருவதாகவும் ஒரு நண்பர் மூலம் அறிந்தேன். மீண்டும் ஸ்டாலினுக்கு நன்றி.

ஏறத்தாழ ஒரு மாதம் முன்னர் என் கடிதத்தில் எழுதிய ஸிம்பாப்வே பற்றிய குறிப்புக்களில் ஒரு பாரிய தவறு நேர்ந்துள்ளது. ஸிம்பாப்வே ஆபிரிக்க தேசிய ஒன்றியம் (ஸானு), ஸிம்பாப்வே ஆபிரிக்க மக்கள் ஒன்றியம் (ஸாபு) எனும் இயக்கப் பேர்களை மாற்றி எழுதிவிட்டேன். ஸானு, முகாபே தலைமையில் இயங்கிய பிரதான விடுதலை இயக்கம். அது மாஓவின் கெரில்லாப்போராட்ட உபாயத்தை வெளிவெளியாகவே அங்கீகரித்தது. ந்கோமோ தலைமையிலான ஸாபு, சோவியத் சார்பு ஆலோசகர்களால் வழிநடத்தப்பட்டது. 1975ல் இரண்டும் மக்கள் முன்னணி என்ற அமைப்பில் இணைந்தன. பின்பு ஏற்பட்ட பிளவின் விளைவாக, ஸாபு, அயல் ஆதரவுடன் உள்நாட்டுக் கலவரத்தில் இறங்கித் தோல்விகண்டது. அண்மையில் நான் தேடிப்பெற்ற Challenge to imperialism, (Carol B. Thompson, Zimbabwe Publishing House, Harare, 1985) எனும் நூல் பல பயனுள்ள தகவல்களைக் கொண்டுள்ளது. வசதி கிடைக்கும் போது அவற்றைச் சுருக்கமாகத் தொகுத்துத்தர இயலுமென நினைக்கிறேன்.

*சிவசேகரம்*
*லண்டன்*

## திருமலை : நூலகத்தைத் திறக்க வகை செய்க

திருகோணமலை வாழ் தமிழ் பேசும் புத்திஜீவிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஆய்வாளர்கள், கலை இலக்கிய கர்த்தாக்கள் ஆகியோரின் கல்வி நிலையை மேம்படுத்தும் நோக்குடன் இப்பகுதியில் மனிதவள மேம்பாட்டு நூல்நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

மேற்படி நூலகத்தை வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவுத்துறை அமைச்சு நிர்வகித்து வந்தது. ஆனால் தற்போது மனிதவள முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி திணைக்களம் இந்த நூலகத்தை நிர்வகித்து வருகிறது. இதன் நிர்வாகத்தின் கீழ் பல குளறுபடிகள் ஏற்பட்டது.

நீண்டகாலமாக இந்த நூலகத்தை உபயோகித்து வந்தவர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதை மிகக் கவலையுடன் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். ரூபா. 350/=, 500/= செலுத்தக்கூடியவர்களுக்கு மாத்திரமே அங்கத்துவம் வழங்கப்படுகிறது. குறிப்பாக அரச, அரசசார்பற்ற ஊழியர்கள் மாத்திரம் உபயோகிக்க முடியும் என்ற நிலை இங்கு இருந்து வருகிறது.

இப்புதிய ஒழுங்கீனமற்ற நடைமுறைக்கு கராணம் மேற்படி நூலகத்தை தற்பொழுது நிர்வகித்துவரும் பணிப்பாளரின் கட்டளையே. இப்பணிப்பாளருடன் சம்பந்தப்பட்டோர் இந்த நூல்நிலையம் தொடர்பாக தெளிவான நிலையை நேரடியாக எடுத்துக்கூறியும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை கவலையுடன் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறோம்.

ஆகவே இப்பகுதியிலுள்ள அனைத்து மக்களுக்கும் பயன்படும் வகையில் மேற்படி நூலகம் செயல்பட ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*திருமலையைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்டோர் ஒப்பமிட்டு அனுப்பி வைத்திருக்கும் கடிதம் இது*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

சரிநிகர்
SARINIHAR
சரிநிகர்

## சந்திரிகாவின் நிபந்தனைகள்

தனது ஜனாதிபதிப் பதவியின் இரு வருடப் பூர்த்தியை முன்னிட்டு 'லங்காதீப' பத்திரிகைக்கு வழங்கியுள்ள பேட்டியில் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளுக்கு இரண்டு நிபந்தனைகளை விதித்துள்ளார் ஜனாதிபதி சந்திரிகா. ஒன்று புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்தல் வேண்டும். மற்றது பேச்சுவார்த்தை ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் என்பதாகும்.

இரு மாதங்களுக்கு முன்பு சென்னை 'புரொன்ட் லைன் சஞ்சிகையில் வெளியான இவரது பேட்டியில் மூன்றாவது தரப்பு உத்தரவாதத்துடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தாம் தயார் எனக் கூறியிருந்தார். ஆனால் மூன்றாவது தரப்பினராக ஈடுபடுவதற்கு பலர் முன்வந்தும் கூட அவர்களின் உதவியை ஏற்க மறுத்ததுடன் மிகவும் மிலேச்சத்தனமான வகையில் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதில் முழுமையாக ஈடுபட்டுள்ளார்.

புரொன்ட்லைன் சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டி சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கு வழங்கப்பட்டதா? இல்லையேல் இவ்வரசின் இனவாத யுத்தத்தை மீண்டும் நியாயப்படுத்த மேற்கொண்ட ஒரு முயற்சியா? ஜனாதிபதி அவர்களே, புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டால் பேச்சுவார்த்தை எதற்காக? அவர்களின் ஆயுதங்களின் ஒரு இலக்காக இருக்கின்ற பேரினவாத ஆதிக்கத்திற்கான சவால் இல்லாமல் போகும் போது நீங்கள் நடத்தும் யுத்தத்தின் உண்மையான தேவை நிறைவேற்றப்பட்டு விடும். அதன் பிறகு பேசுவதற்கு என்ன இருக்கிறது?

'புலிகளின் பயங்கரவாதத்திலிருந்து' தமிழ் மக்களை விடுதலை செய்வதுதான் 'ரிவிரச' இராணுவ நடவடிக்கையின் முழுமையான நோக்கம் எனக்கூறி தமிழர்களைப் பார்த்து முதலைக் கண்ணீர் வடித்த நீங்கள் இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்ட பகுதிகளுக்கு வந்த தமிழ் மக்களை உங்களின் இராணுவத்தினரின் 'பலிக்கடாக்களாக' ஆக்கியிருக்கின்றீர்கள் என்பதை மறந்து விடாதீர்கள். உங்களது இந்த முதலைக்கண்ணீருக்குப் பலியான கிருஷாந்தி குமாரசாமியைப் போல இன்னும் எத்தனை பெண்கள் இது வரைக்கும் பலியாகியிருக்கின்றனர்? இன்னும் எத்தனை பேர் பலியாகப் போகின்றனர்? இத்தகைய பெரும் சாதனைகளை ஏற்படுத்திவிட்டு இப்போது நிபந்தனை விதிப்பது ஒரு கேலிக்கூத்தாகவே தெரிகின்றது.

ஜனாதிபதி அவர்களே! உங்களது நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக உங்களது ஈராண்டு பதவிக்காலத்தில் எதையுமே நீங்கள் செய்ததில்லை. குறிப்பாகத் தமிழ் மக்கள் நம்பத்தகுந்த வகையில் இது வரை நீங்களோ உங்கள் அரசோ சாதித்தது என்ன?

உங்களது வாக்குறுதிகளை நம்பி முன்வந்த லட்சக்கணக்கான தமிழர்களுக்கு நீங்கள் வழங்கிய உத்தரவாதம் என்ன? அவர்கள் வைத்த நம்பிக்கையை இழந்தமை மட்டுமே இன்றுவரை அடைந்த சாதனையாகும்.

நீங்கள் ஆட்சித் தலைவிப் பொறுப்பை ஏற்றிருப்பது ஜனநாயக விரோத வழிமுறைகளில் பெரும்பான்மையின ஆட்சியை அங்கீகரிக்கின்ற ஒரு அரசியற் கட்டமைப்பிற்கு என்பதை மறந்து விடாதீர்கள். நீங்கள் தலைமை தாங்குகின்ற யுத்தமானது பெரும்பான்மையின ஆதிக்கத்தை அரசியலில் பாதுகாத்துக் கொள்ளும் ஒரே நோக்கத்தைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டு கடந்த பல தசாப்தங்களாக இதே நோக்கத்துக்காகவே தொடருகின்ற ஒரு யுத்தத்துக்கு என்பதையும் மறந்துவிடாதீர்கள். இந்த யுத்த நடைமுறை தான் தமிழர்களை ஆயுதம் ஏந்த வேண்டிய நிலைக்குத் தள்ளியது. எனவே பெரும்பான்மையின ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ள இலங்கையின் அரச கட்டமைப்பை மாற்றி அதை ஒரு பல்லினப்பாங்கானதும் பல்லின இணக்கப்பாட்டுடனானதுமான ஜனநாயக நடைமுறையை உத்தரவாதப்படுத்தக் கூடிய ஒரு அரசியற் கட்டமைப்பை தமிழர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் மாற்றியமைத்து விட்டு அவ்விதமான அரசியல் கட்டமைப்பின் தலைவியாக நின்று புலிகளை ஆயுதங்களைக் கீழே வைக்கச் சொன்னால் அவர்கள் வைக்க மறுத்தாலும் அவற்றைத் தமிழ் மக்கள் கீழே வைக்க வைப்பார்கள். ஏனெனில் புலிகளின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கக்கூடிய தகுதியுடையவர்கள் வட, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் மட்டுமேயாகும். இதற்குத் தேவையான வகையில் ஒரு அரச கட்டமைப்பை மாற்றியமைப்பதற்குத் தேவையான ஆதரவை நீங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் பெரும்பான்மையின மக்களிடம் இருந்து பெறமுடியுமா என்பது உங்களுக்கே சந்தேகமான விடயம் என்பது நீங்கள் அறிந்த விடயமே.

அவ்வாறு செயற்பட முடியாவிட்டால் ஜனநாயகக் கோட்பாடு பற்றியதும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஆற்றலும் நிபுணத்துவமும் கொண்ட, இரு சாராரினதும் நம்பிக்கைக்கும் பாத்திரமாகக் கூடிய ஒரு மூன்றாம் தரப்பு உதவியுடன் புலிகளும் ஐ.தே.கட்சியும் நம்பிக்கையுடன் பேச்சுவார்த்தையில் பங்குபற்றக் கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துங்கள்.

இவற்றை விடுத்து, வெறுமனே நிபந்தனைகளை விதிப்பதன் மூலம் யுத்தத்தை நீடிப்பதற்கான வழிமுறைகளை நாடும் உங்களது முயற்சியானது நாடு ஒரு பெரும் அழிவை எதிர்நோக்கவும் விடுதலைப் புலிகளின் மட்டுப்படுத்தப்பட்டுள்ள ஆயுதப் போராட்டம் முழு மக்களின் போராட்டமாக மாறுவதற்கே வழிவகுக்கும் என்பதை உங்களுக்கு முன்னெச்சரிக்கையாக கூறி வைக்க சரிநிகர் விரும்புகின்றது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உங்களுக்கு தேவையானது நேர்மையான கடைப்பாடு மட்டுமே என்பதையும் அது தெரிவித்துக்கொள்ள விரும்புகிறது.

## லிங்கநகர்: அவர்களாலும் முடியவில்லை

திருகோணமலை நகரை அண்டிய மலைப்பாங்கான கிரவல் மண்வளம் கொண்ட இயற்கைத் துறைமுகத்தின் வனப்பு நிறைந்த ஓர் அழகிய ஊர் லிங்கநகர்.

இவ்வூர் தமிழ் மக்களின் பழமைவாய்ந்த ஊராகும். எனினும் சிங்களக் குடியேற்றங்களால் காலத்துக்குக்காலம் மிகவும் நெருக்கப்பட்டு வரும் ஒரு ஊராகும். இதன் நுழைவாயிலில் திருமலை முன்னால்பா.உ. இரா. சம்பந்தன் அவர்களின் உறுதிக் காணியில் 100க்கு மேற்பட்ட சிங்களக்குடிகள் குடியேற்றப்பட்டுள்ளன. லிங்கநகரின் வலது கரையில் ''மட்கோ'' எனும் பெயரில் பெரியதொரு சிங்களக்குடியேற்றத்திட்டம் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இவ்வாறு சுற்றிவர சிங்களக்குடியேற்றங்களால் சூழப்பட்டுள்ள லிங்கநகரில் தற்போது நாகபூசனி அம்மன் கோயில் உட்படபின்அரைவாசிப்பகுதியினையும் இராணுவம் முகாமிட்டு ஆக்கிரமித்துள்ளது. அங்கிருந்து 300க்கு மேற்பட்ட தமிழ் குடும்பங்களை மிரட்டியும், அச்சுறுத்தியும் தொல்லை கொடுத்தும் வெளியேற்றி வருகின்றனர்.

இவ்வாறு வெளியேற்றப்பட்ட மக்கள் வீதிகளிலும் மரங்களின் கீழும், தனியார் காணிகளில்கொட்டில் கட்டியும் வாழும் அவல நிலையையும் இம்மக்களின் சோகங்களையும்தொடர்துயரங்களையும் கேட்பதற்கோ, பார்ப்பதற்கோ, உதவுவதற்கோ தான் எவருமில்லை.

கடந்த 1990இல் ஏற்பட்ட இரண்டாவது ஈழயுத்தத்தின் போது இடம் பெயர்ந்து அகதிகளாகவும், வாடகை வீடுகளில் வசித்தவர்களையும் ஈ.பி.டி.பி முன் னின்று உதவி 1994இல் லிங்க நகரில் மீண்டும்குடியேற்றியது. குழாய்நீர்வசதி, வீதி, மின்சாரம் என்பனவற்றையும் செய்து கொடுத்திருந்தது.

மக்கள்ஈ.பி.டி.பியை முழுமையாக நம்பினார்கள். ஈ.பி.டி.பியின் செல்வாக்கும் திருமலையில் சொல்லும்படியாக இருந்தது. ஆயுதங்களுடன் இருக்கிறார்கள். அரசுடன் மிகவும் நெருக்கமாக இருக்கிறார்கள். பாசிசப்புலிகளை அழித்து தமிழ் மக்களுக்குச் சுதந்திரம் வாங்கிக்கொடுக்க அரசுடன் இணைந்துள்ளவர்கள். ''மக்களின் குரலை'' மக்களுக்காக நடத்தியவர்கள். தேர்தல் மூலம் ஒன்பது பேர் பாராளுமன்றம் சென்றவர்கள். ஜனநாயகத்தின் சின்னங்களாய் அரசின் வெளிநாட்டுப் பிரச்சாரத்துக்கு உதவியவர்கள், சொன்னார்கள், உறுதியுரைத்தார்கள். மக்கள் பல இலட்சம் ரூபாய்களை செலவழித்து கடின உழைப்புடன் கடன் வாங்கியும் நகைகளை விற்றும் அடகு வைத்தும் நிரந்தரக் கல்வீடுகளைக் கட்டினார்கள்.

அதுவும் ஏற்கெனவே வீடு, வாசல்களை, இழந்து இனிமேல் வீடுகட்டுவதில்லை என இருந்தவர்களும் ஈ.பி.டி.பியை நம்பி அவர்கள் கொடுத்த காலக்கெடுவுக்குள் வீடுகட்டிக் குடியேறினார்கள். மரங்கள் நட்டார்கள், வீட்டுத்தோட்டம் செய்தார்கள். இவையாவும் இன்று சிங்கள இராணுவத்தால் திட்டமிட்டு ஆக்கிரமிக்கப்பட்டு விட்டன.

திருமலை பொ.ஐ.முன்னணி அமைப்பாளர்களும் சிங்கள மகா வித்தியாலய அதிபருமான ஜெயவீரா தலைமையில் மட்கோ, உப்புவெளி, மடத்தடி, கோட்டைசீனக்குடா பிக்குகளும்சேர்ந்து ஜனாதிபதியைச் சந்தித்து லிங்கநகர் தமிழர்களை வெளியேற்ற வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்ததை அடுத்து கடந்த 16.10.1996 அன்று இராணுவத்தினர் முகாம் அமைத்துள்ளனர்.

ஆனால் அரசுடன் இணைந்து நின்று அவசரகாலச் சட்டத்தை ஆதரித்து மாதாந்தம் கையுயர்த்தும் ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்பது பேரும் இந்த மக்களின் அடிப்படை உரிமையான இருப்பிடத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு எந்த விதமான ஆக்க பூர்வமான நடவடிக்கையையும் எடுத்ததாகத் தெரியவில்லை. நஷ்டஈடு கூட இல்லாமல் வெளியேற்றப்பட்டுள்ள இவர்கள் வெறும் பகடைக்காய்களா?

லிங்கநகர் மக்கள் ஜனநாயகரீதியில் தமது அடிப்படை உரிமைக்காகப் போராடத் தயாராகவிருந்தும் அரசால் கூறப்பட்ட ஜனநாயக வழிக்குவந்த ஈ.பி.டி.பி அரசியல் தலைவர்கள் மௌனமாக இருந்து இராணுவத்தின் நடவடிக்கைக்கு உதவியதையிட்டு லிங்கநகர் மக்கள் விசனமடைந்துள்ளனர். ஆக, இவர்களின் ஜனநாயகவழி என்பதுமக்களின் உரிமைகளைக் காப்பாற்ற முடியாத வழிமுறையோ என்னவோ?

**ஞா.சந்திரா**

8ம் பக்கத் தொடர்ச்சி

## அரசியல்...

விடயங்கள் அல்ல. புலிகள் பேச்சு வார்த்தைகள் மூலமான தீர்விற்கு வர மாட்டார்கள் என்பது ஒரு சிருஷ்டிக்கப்பட்ட முடிவாகுமே யொழிய முறையாக பரீட்சித்துப்பார்த்த முடிவல்ல. இம்முடிவை முறையாகப் பரீட்சித்துப் பார்க்கும் வரை ''இனவாத யுத்தத்தை தொடாவதை நியாயப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட சிருஷ்டிக்கப்பட்ட முடிவு' என்றே கொள்ளல் வேண்டும்.

***பிரேரணைகளின் நியாயத்தன்மை:***

மேற்கூறிய நிலைமைகளின் அடிப்படையில் பார்க்கும்போது அரசின் தீர்வுப்பிரேரணைகள் அரசியல் தீர்வை அடைய வேண்டும் என்னும் நேர்மையான கடமைப்பாட்டுடன் முன்வைக்கப்பட்டவை என்பதை ஏற்றுக் கொள்வதற்கான சான்றுகள் எவையுமே கிடையாது. மாறாக அரசு முன்னெடுத்துள்ள இனவாதப்படு கொலை யுத்தத்தை சமாதானத்தின் பெயரால் நியாயப்படுத்தும் ஒரு யுத்த உபரகரணமாகவே இப்பிரேரணை இன்றுவரை அரசு பயன்படுத்தி வந்துள்ளது என்ற உண்மையை வெளிப்படுத்து தல் வேண்டும். இதன் மூலம் இப்பபிரேரணையானது அதனது ஜனநாயக நியாயத்தன்மையையும் பிரச்சாரப் படுத்தப்பட்ட அரசியல் நோக்கத்தையும் இழந்து விட்டது என்பது வெளிப்படை. இந்நிலையில்

இருந்து பிரேரணையை மீட்டெக்க வேண்டுமேயானால் அரசின் இனவாத, யுத்தவாத தேவைகளுக்காக இப்பிரேரணை பயன்படுத்தப்படுதல் தவிர்க்கப்பட்டு நேர்மையான வகையில் சமாதானத் தேவைகளுக்காக எல்லாத் தரப்பினரும் சுதந்திரமாக பங்குபற்றி செயற்படும் ஒரு சூழ்நிலைக்கு இப் பிரேரணைகள் உட்படுத்தப்படுதல் வேண்டும். இந்நாட்டின் ஜனநாயகத்தை வேண்டி நிற்கும் அனைவரும் இது பற்றி ஆழமாக சிந்தித்து செயற்படுதல் அவசியமாகும்.

இப்பிரேரணைகளை வெளியிட்டு வைத்ததில் பெறப்பட்ட ஒரேயொரு நன்மை என்னவென்றால் அரசியல் தீர்வு யாப்பு சீர்த்திருத்தம் போன்ற விடயங்களை மக்கள் மத்தியில் பரவலாக கலந்துரை யாடுவதற்கு ஒரு உகந்த் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளமையேயாகும்.

எனினும், நிலைமை மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகவே தென்படுகிறது. கடந்த இருவருட பொ.ஐ.மு. ஆட்சியானது இனமுரண் பாட்டு தீர்வு பற்றிய தமிழ் மக்களின் நம்பிக்கையை முழுமையாக இல்லா தொழித்துள்ளது.

இந்நிலைமையானது அரசு நீண்டகால இராணுவ அடக்குமுறை ஆட்சியை நோக்கிச் செல்லத் தயாராகின்றது என்பதையும், இந்நிலைமை நியாயப்படுத்திக்கொள்ள அரசின் தீர்வின் நடைமுறைகளை தோல்வியுறச் செய்து அதற்கான பொறுப்பை ஐ.தே.கட்சியின் மீதும் விடுதலைப் புலிகளின் மீதும் போட்டு விட்டு தந்திரமாகத் தப்பிக்கொள்ள முயல்கின்றமையையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்விடயத்தில் ஐ,தே.கட்சியும், விடுதலைப்புலிகளும், தமிழ் அரசியல் கட்சிகளும் கூடிய அவதானத்துடன்செயற்படுவது அவசியமாகும்.

***(அடுத்த இதழில் சந்திரிகா - விடுதலைப்புலிகள் நடத்திய பேச்சுவார்த்தை பற்றிய ஒரு மீளாய்வு இடம் பெறும்)***



.செம்மணியில் வீசுதற்கா .........
...............
ஈழமகள் பெற்றெடுத்தாள்?



1996-11-19